# கலைமலர் 2003 - 2004

கலைமலர் 2003,2004



அரசினர் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்

GOVERNMENT TEACHERS' COLLEGE, KOPAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
19 JUL 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# கலைமலர்

## 2003 / 2004



**ஆசிரியர் கலாசாலை,**
**கோப்பாய்**



மலர் - 35 2003 / 2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூலின் பெயர்: | கலைமலர் |
| ஆண்டு: | 2003 / 2004 |
| இதழாசிரியர்: | திரு. அ. கணேசராசா |
| துணை இதழாசிரியர் | செல்வி. பொ. வத்சலா |
| வெளியீடு: | முத்தமிழ் மன்றம் |
| | யா / கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, |
| | கோப்பாய். |
| அட்டைப்படம்: | திரு. நா. ராஜன் |
| அச்சுப்பதிப்பு: | பாரதி பதிப்பகம், |
| | 430, காங்கேசந்துறை வீதி, |
| | யாழ்ப்பாணம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாலைக் கீதம்

ராகம்: மோகனம் தாளம்: ஆதி

### பல்லவி

யாழ் நகர் மீதமர் கோப்பாய் அரசினர்
ஆசிரிய கலாசாலை வாழ்க!

### அனுபல்லவி

அறிவொளி பெருக்கியே வாழ்க
ஆசிரிய மாணவர் வாழ்க!

### சரணங்கள்

அறிவியற் கலையுடன் அழகியற் கலைகள்
அறிந்திடும் பான்மையை அறிவோம்
அருந்தமிழ் அகநூல் அறிவுறு கணிதம்
ஆவன நிறைந்திடப் பயில்வோம்!

(யாழ்)

ஒழுக்கமும் நேர்மையும் உடலுறு பலமும்
உண்மையில் ஓங்கிடப் பயில்வோம்
ஓரிரண்டாண்டாய் ஓர்ந்திடும் கலைகள்
உலகினில் ஓங்கிடப் பயில்வோம்.

(யாழ்)

தண்டமிழ் ஓங்கவே தொண்டுகள் புரிந்து
தரணியில் காப்போம் எம்மானம்
எண்டிசை புகழவெங் கலாசாலை வாழ
இயன்றநற் பணிகளைப் புரிவோம்.

(யாழ்)



அரசினர் ஆசிரியர் ஆற்று நல்லுதவி
அகிலத்தில் என்றென்றும் மறவோம்
அதிபரும் ஏனைய ஆசிரியர் குழாமும்
ஆண்டவனால் என்றும் வாழ்க.

(யாழ்)

**ஆக்கியவர்**
**பண்டிதர் த. இராசையா**



2708 P;PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமலர்க் குழுவினர்

## ஆலோசகர்கள்

திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
திரு. செ. செந்தில்மணி (பிரதி அதிபர்)

## காப்பாளர்

கலாநிதி செ. திருநாவுக்கரசு

## ஆசிரிய மாணவர் குழு

திரு. அ. கணேசராசா (இதழாசிரியர்)
செல்வி. பொ. வத்சலா (துணை இதழாசிரியர்)
திரு. ப. சுரேஸ்குமார் (பொருளாளர்)
செல்வி தி. லூர்தகவி (செயலாளர்)

## பிரதிநிதிகள்

திரு. த. சுரேந்திரன்
திருமதி. யோ. சுதர்சினி
திரு. தி. பாலேந்திரன்
திரு. சு. பிறேம்
செல்வி . ப. பவநிதி
செல்வி. ச. தனலக்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எந்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளமுந் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

– மனோன்மணீயம்

பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர் மொழி வாழியவே.



மகாகவி சுப்பிரமணியபாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அதிபர்



திரு.ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் அவர்களின்
# வாழ்த்துச்செய்தி

நற்றமிழ் வல்ல நல்லாசிரியர்களை நாடு முழுவதும் நற்பணியாற்ற ஆற்றுப்படுத்தும் வரலாற்றுப் பெருமை மிக்க நம் கலாசாலை, ஆண்டுதோறும் வெளியிடும் அரியநூல் " கலைமலர்" .ஆசிரிய மாணவர்கள் தத்தம் தனித்துவமான புலமைகளை , தாம் கண்ட கல்விசார் அனுபவங்களை சமூகம் உள்வாங்க வேண்டும் எனவும், திறனாய்வு செய்து மேலும் தம்மை வழிப்படுத்த உதவ வேண்டும் எனவும் பெரு நோக்குக் கொண்டு ஆர்வத்துடன் இம்மலரை வெளியிடுகின்றனர். இவர்களது ஆர்வத தையும் ,ஆவலையும் வரவேற்று வாழ்த்துகின்றேன்.

பல்திசைகளிலிருந்தும் பண்புடன் பயில வந்து நம் கலாசாலையில் சங்க மித்த ஆசிரிய மாணவர்கள், நமது அறிவுசால் விரிவுரையாளர்களின் வழி காட்டலின் கீழ், வளமான ஆக்கங்க்ளை இம்மலரில் அளித்துள்ளனர். அறிவியல் உலகில் இவர்களது ஆக்கங்கள் பயனுறுதி வாய்ந்தவையாக அமைய வேண்டும். இவர்கள் வழங்கும் அறிவியல் வித்துக்கள் விருட்சமாகி, விழுதுகள் பரப்பி நிலைபேறடைய வேண்டும். இத்தகைய ஆக்கபூர்வமான முயற்சிகளில் நம் ஆசிரிய மாணவர்கள் ஒவ வொருவரும் நாளும் முயன்று நன்மதிப்புடன் நானிலம் போற்ற வாழ வேண்டும் வாழ் விக்க வேண்டும். நல்ல நூல்களை ஆயுந் திறனும், ஆக்குந் திறனும் கொண்டவர் களாகத் தம் அறிவை ஆழ, அகலச் செய்தல் வேண்டும்.இதன் மூலம் எதிர்காலத்தில் தாம் சந்திக்கும் ஒவ்வொரு மாணவனிடத்தும் உறைந்து கிடக்கும் அறிவை இனம் கண்டு வளப்படுத்தும் கல்விச் சிற்பிகளாக மிளிர வேண்டும். கல்விச் சிற்பிகளை மேம்படுத்தும் களமாக அமையும் "கலைமலரும்" கருத்துடன் கடமையாற்றியோரும் காலமெல்லாம் போற்றப்படுவர்.

இவர்களது முயற்சி வெற்றி பெற வாழ்த்துவதுடன், எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அமைகின்றேன்.

*ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி*
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE OF FELICITATION



It's a great honour to send a message of felicitation on the occasion of the issue of the annual magazine of Kopay Teachers' College 'KalaiMalar'

The enthusiasm of the Principal staff and the teacher trainees to achieve success amidst restraints is highly praiseworthy.

Further I congratulate on the great achievement of yours in the field of education. I wish you all strength in future to make an even greater contribution in this field.

*Teachers' College & College of Education Unit,*
*Ministry of Education,*
*Isurupaya.*
*Battaramulla.*

*D.R.E. Gajanayake,*
*Chief Commissioner*
*(Teacher Education)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message of Felicitation



It is my pleasant privilege to present a message of felicitation to be published in your annual souvenir 'Kalai Malar".

The commitment and dedication of the Principal, Staff and Teacher Trainees of Kopay Teachers' College made possible to achieve great success, for which they have the right to be proud of.

I am aware of that the organizers had many difficulties in accomplishing this task and their tenacity is praiseworthy.

I wish you success in all your future endeavors.

*S.M.Rashad*
*Assistant Director of Education*
*(Teacher Education)*

*Ministry of Education,*
*"Isurupaya",*
*Battaramulla.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கலைமலர் சஞ்சிகை நவயுக இலக்கியத்தின் யாப்பாய் வெளிவர

# வாழ்த்துக்கள்



கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வாழ்வியல் கல்வியின் யாப்பாய் நிமிர்ந்து மகிழ்கின்றது. இதன் தொன்மையும், செழுமையும் பல அறிஞர்களின் சுவாசங்களைப் பதிவு செய்துள்ளது. அந்தவகையில் கலாசாலையின் வருடாந்த சஞ்சிகையான "கலைமலர்" பல்வேறு நதிகளால் தன்னை நனைத்துள்ளது. எழுதியவர்கள் வெற்றியும், எழுதுபவர்கள் சக்தியும் கலாசாலையின் பாரம்பரியத்தின் பரிணாமத் தூண்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

குளத்தில் விழுந்த கற்களால் நீர்வட்டங்கள் குதித்து விளையாடுவதுபோல், மனிதத்தைத் தேடும் மனிதனின் உலகத்தில் கலை இலக்கிய மலர்கள் குவிப்பதிலும், கூவுவதிலும், பறப்பதிலும், பெரும் முதலீடுகள் செய்துள்ளன. எழுதிடும் கலப்பைகளால் சமூகம் மீண்டும் , மீண்டும் உழவு செய்யப்பட வேண்டும். சுமக்கும் விழுக்காடுகளைக் காலத்தின் எழுத்தாணிக் குறிப்புகளாக்கி கோபுரங்கள் அமைக்க வேண்டும்.

நூறு மலர்கள் மலர்கின்ற நந்தவனத்தில் ஆசிரிய மாணவர்களின் எழுத்துக்கள் வலைப்பின்னல் உலகத்தின் தொடர்பாடலுக்குள் முத்திரைகள் குத்த வேண்டும். பிரசுரமாகும் எழுத்துக்கள் பெற்ற வெற்றிகளை விட பிரசுரமாகாமல் உள்ள எழுத்துக்களே உலகில் வெற்றிகள் குவித்துள்ளன. "கலைமலர்" சஞ்சிகையில் எழுதுபவர்கள், எழுதாதவர்கள் எழுதி வாசித்து நவ இலக்கியத்தின் நுகர்வில் பலம்பெறல் வேண்டும்.

கலைமலர் சஞ்சிகையை வெளியிடும், சிகரமாகப் பணியை முன்னெடுக்கும் மௌனத்தேர் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அதிபர் அவர்கட்கும், கலைமலர் ஆசிரியர் குழுவிற்கும், எழுதிடும் நமது பூமியின் எதிர்காலச் சொத்துக்களுக்கும் எனது இதயம் நிறைந்த ஆசிச்செய்தியை வெளியிடுகின்றேன்.

*யாழ் வலயக் கல்வி அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*

*ப. விக்னேஸ்வரன்*
*வலயக் கல்விப் பணிப்பாளர்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதி அதிபர்



திரு.செ. செந்தில்மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து........

எமது ஆசிரியர் கலாசாலையின் பண்பாட்டுச் செந்நெறியினை நீண்ட காலமாகப் பிரதிபலித்து வருகின்ற வருடாந்த சஞ்சிகை "கலைமலர்" ஆகும். " வாழக்கல்மின்" என்னும் கலாசாலையின் மகுட வாசகத்திற்குப் பொருத்தமாகக் கல்வி, சமூகம், பண்பாடு ஆகிய தளங்களில் நின்று பயனுறுதி வாய்ந்த படைப்பாக்கங்களைத் தாங்கி ஆண்டுதோறும் வெளிவந்து பயன் விளைவிப்பது இச்சஞ்சிகையாகும். இத்தகைய அடிச்சுவட்டில் இந்த ஆண்டும் " கலைமலர்" உங்கள் கைகளில் தவழ்கின்றது.

எமது கலாசாலையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டி, வரலாற்று ஆவணமாக்கும் செய்திகள், நிழற்படங்கள், அறிக்கைகள் ஆகியவற்றுடன், தமது கற்றல் அனுபவ வெளிப்பாடுகளாக ஆசிரிய மாணவர்கள் படைத்தளித்த பல்வேறு குணாம்சங்கள், நிரம்பிய புத்தாக்கங்களையும் தாங்கிக்கொண்டு இச்சஞ்சிகை மலர்ந்துள்ளது. "புதிதாய்ப் பிறப்போம்" என்ற மகாகவி பாரதியின் கூற்றுக்கிணங்க புதுமை சார்ந்த அறிவுத் தேடலுடன், ஆற்றல் நிறைந்த கல்விப் புலமையாளர் சிலரது ஆக்கங்களையும் தன்னகத்தே அடக்கி மணம் பரப்புகின்றது.

பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் எமது ஆசிரியர் கலாசாலைச் சமூகம் ஒன்றிணைந்து ஒரு மனதாகச் செயற்பட்டு உழைத்ததன் பெறுபேறாக "கலைமலர்" உங்கள் மத்தியில் பொலிவுடன் வருகிறது. குற்றம் நீக்கி, குணம் நாடி மலரின் மணத்தினை நுகர்வீர்கள் என எதிர் பார்க்கின்றேன். தமிழர் பண்பாட்டுப் பாரம்பரிய அடிச்சுவட்டில் எமது சஞ்சிகையும் தடம் பதித்து, நிலைபேறுடையதாக விளங்க உங்கள் அனைவரதும் ஆதரவை வேண்டி, எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி கலைமலரை வெளியிடுகின்றோம்.

*ஆசிரியர் கலாசாலை,*
*கோப்பாய்.*

*அ. கணேசராசா*
**இதழாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாபூஷணம் மகாவித்துவான்

# அமரர் பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயாவின் நினைவலைகள்......



கலை என்பது அழகியல் நோக்குக் கொண்டதும் அரியனவற்றை எளியனவாக ஆக்கி எல்லோர்க்கும் ஏற்ற வகையில் வழங்கி வெறும் அறிவு நிலையோடு நில்லாமல் செயல்திறத்தையும் இணைத்து உணர்வு வயப்பட்டதாகவும் விளங்குவதாகும். கலையின் அறிவுத் திறனைவிடச் செயல் திறத்திற்கே முதன்மையான இடம் தரப்படுகின்றது.

மனிதன் தனது உணர்வுகளை அழகுற வெளிப்படுத்தும் ஒரு ஊடகம் கலையாகும். இந்தக் கலை நிலையான ஒன்றெனினும் வளர்ச்சியை உள்வாங்கிக் கொண்ட ஒரு சாதனம். அத்தோடு கலையானது காலவரையறையற்ற தன்மை கொண்டது.

மனித நாகரிகம் தொடங்கியதிலிருந்து கலைவடிவங்களும் ஒவ்வொரு சமூகத்திலும் தோன்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன. வாழ்வை இரசிக்கவும் அதிலிருந்து பின் வாங்காதிருக்கவும் மட்டுமன்றி மனித உள்ளத்தைப் பயன்படுத்தி நேர்வழி கொண்டு செல்வதும். அது மனித மனதினைச் சாந்தப்படுத்தி உன்னதமான மனநிலையை வழங்கும் ஒரு சாதனம். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கலை வடிவினைக் கற்பது அவசியம் எனத் தற்போது விதந்துரைக்கப்படுகின்றது. இவ்வாறு ஒரு கலையில் தேர்ந்த மனிதன் கலைஞன் ஆகிறான்.

இந்த வகையில் இயல், இசை,நாடகக் கலைகளில் தேர்ச்சி பெற்றவர்தான் அண்மையில் காலஞ்சென்றவரான மஹாவித்துவான் இயல், இசை வாரிதி பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயா அவர்கள். இவர் கலைக்குப் பெயர்போன இடமான இணுவையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளமையிலேயே கலையார்வம் மிக்கவராகக் காணப்பட்டார். இவர் தனது ஆரம்பக்கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பயின்றார். அங்கு பயிலும் காலத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கியமையால் கல்லூரி அதிபரினால் சிறந்த பல்துறை மாணவன் என்ற விருதினையும் பெற்றுக் கொண்டார். இவர் இளமையில் பெற்றோரை இழந்து தனது தமையனாரின் ஆசிகளோடு பாரதம் சென்று தமிழ் நாட்டில் கலாக்ஷேத்திரா நடனப் பள்ளியில் இணைந்து ஸ்ரீமதி - ருக்மணிதேவி அருண்டேல் அம்மையாரின் வழிகாட்டலின் இசை, நடனக் கலையைப் பயின்றார். - இங்கு பல சிறந்த இசை விற்பன்னர்களிடம் இசை பயின்று பட்டம் பெற்றார். அவர்களில் எம்.டீ. இராமநாத ஐயரிடம் இசையும் 20 நூற்றாண்டின் பிரபல சாஹித்திய கர்த்தாவான குரு பாவநாச சிவன் அவர்களிடமும் நேரடியாகப் பயிலும் வாய்ப்புப் பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நேரடியாகப் பெற்ற அனுபவங்களை ஐயா அவர்கள், நான் அவருடன் கதைக்கும் போது தன்னுடைய அந்த நினைவுகள் பசுமையாக இருப்பதாகவும் சொல்வ துண்டு. அப்படிப் பலவாறு தான் பெற்ற அனுபவங்களோடு தாய் நாடு திரும்பி மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இசை, நடன ஆசிரியராகப் பணிபுரிந்தார். அங்கு அங்கு பணி புரியும் காலத்தில் தான் அவருக்கு அரச நியமனம் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கிடைத்தது. அதன் பின்னர் நுண்கலைத்துறை கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு கையளிக்கப்பட்டபோதும் தொடர்ந்து அங்கேயே ஓய்வு பெறும் வரை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து ஓய்வு பெறும் நாளன்று என்னை அன்றைய கல்விப்பணிப் பாளர் திரு. R. சுந்தரலிங்கம் அவர்களின் உத்தரவு பெற்று விரிவுரையாளராகச் சேர்ப்பித்த பெருமை அவருடையது. அவர் இன்று நம்மிடையே இல்லை. எனினும் அவரைப் பற்றிச் சில துளிகள் எழுதுவதற்கு எனக்கும் பங்குண்டு என்பதனால் அவரது பணியை மூன்று நிலைகளில் வைத்துக் குறிப்பிட விழைகின்றேன்.

1) கல்விப்பணி
2) கலைப்பணி
3) சமூகப்பணி

**கல்விப்பணி:**

ஐயா அவர்கள் விரிவுரையாளராகப் பணியாற்றிய நாட்களில் நடனம், பிரதான பாடமாகப் பாடசாலைகளில் புகுத்தப்படவில்லை. பாடசாலைக் கலைநிகழ்ச்சிகளுக்கும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்குமாகவே நடனம் கற்பிக்கப்பட்டது. ஆகவே அந்நாளைய கல்வி மந்திரிக்கு சிபாரிசு செய்து நடன பாடத்தை அழகியற் கல்வி எனும் பாடப்பரப்பில் இடம்பெறச் செய்த பெருமை அவருடையது. அதற்கு வேண்டிய பாடத் திட்டங்களை வகுத்து க.பொ.த. (சா.த) வரையும், ஒரு பகுதியாகவும்,க.பொ.த. (உ.த) வரையும் மறுபகுதி யாகவும் வரையறை செய்து வகுப்பு ரீதியான பாடத் திட்டங்களை வகுத்துக் கொடுத்தவர். அத்துடன் இதே வகுப்புக்களுக்கு அறிமுறை, செய்முறை நடனப்பரீட்சைக் கட்டுப்பாட்டா ளராகவும், தேர்வாளராகவும் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பரீட்சைப் பயத்தைப் போக்கி சாதாரண உள நிலையோடு மாணவர்களைத் தேர்வுக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஐயா அவர்கள் தேர்வாளராகக் கடமையாற்றுகின்றபோது பரீட்சார்த்தி களின் மனம் நோகா வண்ணம் மிக மென்மையாக, அன்பாக உரையாடுவார். இதுவும் அவரது உயர் குணங்களில் ஒன்றாகும். இதற்கு அவரிடம் காணப்பட்ட நல்ல மனப்பாங்கும், அனுபவங்களுமே காரணங்களாகும். இந்த அனுபவம் அவரோடு சேர்ந்து கடமையாற்றிய சந்தர்ப்பங்களில் எனக்கும் கிடைத்தது.

அத்துடன் அவர் விரிவுரையாளராகப் பணியாற்றும்போது தான் நம் தமிழ் மாணவச் செல்வங்களுக்கென நுண்கலைக் கல்லூரி அவசியம் தேவை எனக்கருதி அல்ஹாஜ் பதியுதியின் மஹ்மூத் அவர்களிடம் சிபார்சு செய்தவர். அதற்கான பத்திரிகை விமர்சனத்தை யும் அவரே எனக்கு நேரடியாகக் காட்டி நான் வாசித்திருக்கிறேன். இன்று இராமநாதன் நுண்கலைப் பீடமாகத் திகழ்வது அவரது சிபார்சின் பேரில் ஏற்பட்டதுதான். அத்துடன் அவர் காலமாகும் வரை அங்கு வெளிவாரிப் பரீட்சகராகவும் , அதிதி விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வட. இலங்கை சங்கீத சபை நடனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்திட்டம் அமைத்த குழுவில் தலைமை ஏற்று அமைத்து தேர்வாளராகவும், வினாத்தாள் தயாரிப்பாளராகவும் அங்கம் வகித்துள்ளார். அவரது கலைச் சொற்கள் அழகாகவும் நல்ல வசன அமைப்பாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

**கலைப்பணி:**

கலைப்பணியை எடுத்துக்கொண்டால் ஐயா அவர்கள் ஒரு முத்தமிழ் வித்தகர் என்றே கூறலாம். ஏனெனில் அவரை எந்த விழாக்களிலும் விருந்தினராகக் காணலாம். தமிழ் கவிதையானாலும் சரி, ஊஞ்சற் பாடலானாலும் சரி அவரது நாவில் சரளமாக வரும். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நான் பயிற்சி பெறும் காலத்தில் ஐயா ஒரு பாடல் வேண்டும் என்றால் உடனே தாளை எடு. எழுது என்று கண்ணை மூடிப்பாட ஆரம்பித்து விடுவார். பாரபட்சம் பாராமல் எழுதிக்கொடுப்பார். எந்த விழாவிற்குத் தொடர்பானதோ அதற்கேற்ப சாஹித்தியம் அமைத்துவிடும். அவர் எண்ணிலடங்காத ஏராளமான நாட்டிய நாடகப் பாடல்களும் இசைப்பாடல்களும் உருவாக்கியுள்ளார். அத்தோடு தேசிய எழுச்சிப் பாடல்களும்கூட புனைந்துள்ளார். அவருடைய பாடல்களைப் பாடாத இசைக் கலைஞரும் இல்லை. அவற்றுக்கு நடனம் அமைக்காத நாட்டியக் கலைஞரும் இல்லை என்றே கூறலாம். அப்படிப்பட்ட பெருமைமிக்க 21ம் நூற்றாண்டின் ஈழத்து தமிழ் சாஹித்திய கர்த்தா அவர். அவருடைய பெருமைகளை எழுத்தில் அடக்க முடியாது. மேலும் ஐயா அவர்களின் ஆக்கத்தில் உருவான பாடல்களையே செய்யும்படி அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டி விதிகளில் குறிப்பிடுவதும் உண்டு. அந்தளவிற்கு அவர் பெயர் நிலைபெற்றிருக்கிறது.

**சமூகப்பணி:**

ஐயாவின் சமூகப்பணியை எடுத்து நோக்கின் திருமண மங்கல வாழ்த்து, பாராட்டு விழா, உபநயனம், ஊஞ்சல் பாடல், பாடசாலைக்கீதம், நூற்றாண்டு விழா போன்றவற்றிக்கு பாடல் எழுதி இசையமைத்து ஒலிப்பதிவும் செய்து கொடுப்பார். இலங்கையில் தயாரிக்கப் பட்ட திரைப்படத்திற்கு பாடல் எழுதியதன் மூலம் அத்துறையினுள் புகுந்தார்.

இனி பிறந்த குழந்தைகளுக்கு எண்விருத்திக்கமைய பெயர் சூட்டவேண்டுமா அதற்குரிய பெயரைத் தெரிவு செய்வார். ஆய்வுக் கட்டுரைகளுக்கு தகவல் சேகரிக்கச் செல்பவர்களுக்குக்கூட மனம் கோணாது இன்முகத்தோடு வரவேற்று செய்திகளைப் பரிமாறுவார். இத்தகைய பெருந்தகையாளனுக்கு கிடைத்த பட்டங்களும் எண்ணிலடங்காது. அவர் இறப்பதற்குச் சில காலங்களுக்கு முன்னர் தான் தமிழ் நாட்டில் அவருக்கு விழா எடுத்துக் கௌரவித்தனர். இதைவிட இந்து கலாசார அமைச்சின் உயர் விருது கலாபூஷணம். கலாரத்னா யாழ் பல்கலைக்கழகம் வழங்கிய கௌரவ விருது. முதுகலைமாணி போன்ற பட்டங்களை விட சமய சமூக ஸ்தாபனங்களும் பாடசாலைகளும்கூட சிறப்புப் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன. இத்தகைய பெருந்தகையாளன் இன்று நம்மத்தியில் இல்லை. இந்த பூமியில் மனிதன் என்று ஜனனிக்கின்றானோ அன்றே அவனுக்கு மரணம் நிச்சயம் என்பது விதி. அவரது பாடல்களுக்கு இசை வடிவமும் நாட்டிய வடிவமும் கொடுப்பதே அவரது ஆத்மாவிற்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

"வளர்க நம் பரதக்கலை, வாழ்க அவர்தம் கலைப்பணி"

*திருமதி சாந்தினி சிவநேசன்*
சிரேஷ்ட விரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசாலைப் பணியில்

திரு.ஆ.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)
B.A, P.G.D.E.,M.Phill (Edu), S.L.E.A.S. III

திரு.செ.செந்தில்மணி (பிரதி அதிபர்)
B.Sc., P.G.D.E, Sp.Trd(Maths), S.L.E.A.S. III

திரு.மு.பரஞ்சோதி (முன்னாள் அதிபர்)
B.Sc. (Maths), P.G.D.E., S.L.E.A.S. II

திருமதி க. மகேந்திரன்
B.Sc, Agric(Hons),P.G.D.E, S.L.E.A.S. III

திரு.இ.மருதலிங்கம்
B.A, P.G.D.E.(Merit), S.L.T.S. I

திருமதி சா. சிவனேசன்
டிப்புளோமா பரதம், கதகளி Sp Trd (Dance) S.L.E.A.S. III

செல்வி .ப. நாகரட்ணம்
B.Com, (Sp), Sp. Trd(Com),P.G.D.E, S.L.E.A.S. III

திரு.வே.கா.கணபதிப்பிள்ளை
Sp. Trd. (P.E), S.L.P.S.2.1, S.L.E.A.S. III

திரு.செ.குமாரசாமி
சங்கீத பூஷணம்,Sp. Trd(Music),P.G.D.E, S.L.E.A.S. III

கலாநிதி செ.திருநாவுக்கரசு
பண்டிதர், சைவப் புலவர், B.A.,P.G.D.E. (Merit)
Dip.in Management , M.A,(Tamil), M.Ed,Ph.D. (Tamil) S.L.P.S.2:1, S.L.E.A.S III

செல்வி.ம.சின்னையா J.P.
B.A.Sp.Trd(Social Studies), P.G.D.E. ,M.Ed,Dip.in School Management,S.L.P.S.I,S.L.E.A.SIII,

திருமதி ப.இரத்தினவேல்
B.A.(Hons), P.G.D.E. ,Dip.in . Hindu Civilization ,S.L.T.S.I

திரு.வி.கருணலிங்கம்
Sp.Trd (Art), B.A, P.G.D.E. ,(Merit), S.L.T.S.- II

திருமதி.ச.பேரானந்தன்
Dip.in Home Eco. (Lady Irwin College), Sp.Trd. (Ho -Eco), S.L.T.S. I

திருமதி.அ.கருணாகரன்
SP. Trd (P.E.), S.L.T.S.

செல்வி. வி. கந்தசாமி ஐயர்
B.A., P.G.D.E. (Merit), சங்கீத கலா வித்தகர் S.L.T.S.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசாலைப் பணியில் (பகுதிநேரம்)

| பெயர் | பாடம் |
|---|---|
| திரு.சு.அந்தோணிப்பிள்ளை | கிறிஸ்தவம் |
| திரு.வே.குமாரசுவாமி | தமிழ், சைவசமயம் |
| திரு.ப.சின்னராசா | மிருதங்கம் |
| திரு.மு.இராசரத்தினம் | இந்துசமயம் / சமூகக்கல்வி |
| திருமதி ம.சுப்பிரமணியம் | சங்கீதம் |
| திருமதி.இ. மகாலிங்கம் | மனையியல் |
| செல்வி . சி.சதாசிவம் | மனையியல் |
| செல்வி .அ. சுந்தரம் | நடனம் |

### கல்விசாரா ஊழியர்கள்

திருமதி ச. தம்பித்துரை (விடுதி மேற்பார்வையாளர்)
திரு.க.மனோகரன் (நூலகர்)
திரு.க.சோதிலிங்கம்
திரு.க.குழந்தைவேல்
திரு.ந.சுப்பிரமணியம்
திரு.க.கார்த்திகேசு
திரு.ஐ.உலகநாதன்
திரு.ந.கேதீஸ்வரநாதன்
திரு.ஐ.ஞானச்சந்திரன்
திரு.ஐ.கதிர்காமநாதன்
திரு.ஐ.இ.ரவிச்சந்திரன்
திரு.ச.தேவராசா
திரு. பே.தில்லைநாதன்
திரு.செ.செந்தில்குமார்
திரு.த.பரமேஸ்வரன்
திரு.க.தயாரூபன்
திரு.ச.லோகேஸ்வரன்
செல்வி.சி.சிவா
திருமதி .க. செல்வநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | போர்களின் மத்தியில் சமாதான வித்து | 01 |
| 02. | படிப்பு - வேலைசார் கூட்டிணைந்த கல்வி இலங்கை அனுபவங்கள் | 08 |
| 03. | வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் | 15 |
| 04. | பாவேந்தர் பாரதிதாசனின் உணர்வுகளில் மனதில் நின்றவை சில..... | 19 |
| 05. | நவீன தகவல் தொடர்பும் தகவல் தொடர்புச் சாதனங்களும் | 23 |
| 06. | ஓவியத்தின் தந்தை லியானாடோ டாவின்ஸி | 26 |
| 07. | அறிவியல் மாற்றமும் தகவல் புரட்சியின் வருகையும் | 28 |
| 08. | இலங்கையில் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமை தமிழ் மொழியில் ஏற்படுத்திய தாக்கங்கள் | 30 |
| 09. | புதுமையை விஞ்சும் பழமையான " பூமராங்" | 32 |
| 10. | புனிதராகும் அன்னை திரேசா | 35 |
| 11. | ஒலிம்பிக் போட்டிகள் | 37 |
| 12. | போசணைப் பிரச்சினையும், பிரச்சினையைத் தவிர்த்தலும் | 40 |
| 13. | தாயூட்டும் கல்வியின் அவசியம். | 42 |
| 14. | தன்னம்பிக்கையோடு வாழ்வோம். | 45 |
| 15. | ஒப்பனையும் ஒப்பனையாளரும் | 47 |
| 16. | இணையம் | 49 |
| 17. | எரிமலை எவ்வாறு வெடிக்கின்றது? | 52 |
| 18. | இசையும் அதன் சிறப்பும் | 54 |
| 19. | போதைப் பொருள் பாவனையால் அழிவை நோக்கிச் செல்லும் மனித இனம். | 56 |
| 20. | சமூக விழுமியங்களைப் பேணுவதன் அவசியம் | 58 |
| 21. | விடுமுறைகள் | 60 |
| 22. | CHILD ABUSE | 63 |
| 23. | How to learn English | 65 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 24. | Mosquitoes | 67 |
| 25. | பரிசு (சிறுகதை) | 69 |
| 26. | மீட்டும் தமிழில் | 76 |
| 27. | அந்த நாள் இனி வருமா? | 77 |
| 28. | மலரட்டும் மானிட நேயம் | 79 |
| 29. | இயற்கை அழகு | 81 |
| 30. | விடியலாய் வந்தாய் எம் தலைவா | 82 |
| 31. | நல்ல ஆசான் | 83 |
| 32. | பெண்ணின் உரிமை | 84 |
| 33. | நடத்தை மாற்றம் | 85 |
| 34. | நாளெல்லாம் ஒரு பாட்டு | 86 |
| 35. | சந்திரகிரகணம் | 87 |
| 36. | தூது செல்வாய் தென்றலே | 88 |
| 37. | மாணவச் செல்வங்களுக்கு | 89 |
| 38. | விளையாட வா நிலவே | 90 |
| 39. | பாடல் | 91 |
| 40. | கீக், கீக் கிளியக்கா | 92 |
| 41. | வைகறை | 93 |
| 42. | Time is gold | 94 |
| 43. | இளந்தலை முறையினரும் முதியோரும் பற்றிய ஓர் உரையாடல் | 95 |
| 44. | செருப்புடன் ஒரு பேட்டி | 99 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசாலை விரிவுரையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசாலை பகுதிநேர விரிவுரையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்களின் மத்தியில் சமாதான வித்து

அருட்திரு.மா.றேஜிஸ் இராசநாயகம்
*(M.A. - Theology. Pune. India)*

## 01. முன்னுரை:

இன்றைய உலகின் நிலையை நோக்கின் போர், வன்முறை என்பன தலைதூக்கி நிற்கின்றன. ஈராக்கில் போர், காஷ்மீரில் போர், ஆப்கானிஸ்தானில் போர், ஏன் நம் நாடு இதற்கு விதிவிலக்கா? இந்நிலையில் சமாதானம் என்றால் போர் அற்ற நிலை என்று பலர் கருதுகின்றனர். "சமாதானம் வேண்டுமா?. போருக்கு ஆயத்தம் செய்" என்று ஒரு உரோமைப் பழமொழி உண்டு. அதாவது மற்றவர்களை அடக்கி ஒடுக்குவதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தமுடியும் என்று அது பொருள்படும். "சமாதானத்துக்கான போர்" என்ற எமது நிலை அன்றைய நிலையிலிருந்து எதிலும் வேறுபட்டது அன்று.

ஒழுங்கமைப்பான வாழ்வையே சமாதானம் என்று கூறுகின்றனர் வேறுசிலர். இன்று எங்கும் ஒழுங்கற்ற நிலையையே காண்கின்றோம். இந்த ஒழுங்கற்ற நிலை வளர்ந்துகொண்டே போகின்றது. இந்நிலையில் ஒவ்வொரு உள்ளத்திலும் நீடிய சமாதானம் ஏற்படவேண்டும் என்பதே எமது ஆவல். எவ்வாறு இதை ஏற்படுத்துவது? இதனை கிறிஸ்தவக் கண்ணோட்டத்தில் ஆராய்வது அவசியம். ஒருவர் ஒருவர் மட்டிலே, நாடுகளின் தலைவர்கள் மத்தியில், குழுக்களிற்கிடையே நல்மனம் ஏற்படாமல் சமாதானத்தை ஏற்படுத்துவது கடினம். இந் நல்மனம் இறைவனை ஏற்பதாலேயே ஏற்படுகின்றது. மறுபுறம், கடவுள் விரும்பியோரே நல்மனத்தோர் என்பதும் நற்செய்திகள் கூறும் கருத்து. இதைத்தான் இயேசு பிறந்த பொழுது "கடவுளுக்கு மகிமையும், உலகில் நல்மனத்தோருக்கு அமைதியும் உண்டாகுக" (லூக். 2:14) எனச் சொல்லப்பட்டது. இறைவனை முழுமையாக ஏற்காததே உலகின் சமாதானமின்மைக்குக் காரணம். சமாதானம் என்பது உள்ளத்தில் ஏற்பட வேண்டியதொன்று.இறைவனோடு கொண்டுள்ள சீரான உறவின் மூலமாகவும் அயலவரோடு கொள்ளும் சீரான உறவின் மூலமாகவும் சமாதானத்தை உள்ளத்தில் நிலைகொள்ளச் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. அவனியில் அமைதி

சமாதானத்தை வலியுறுத்தி திருச்சபையின் தலைவர்களான திருத்தந்தையர்கள் பல சுற்றுமடல்களை வரைந்துள்ளனர். அவற்றுள் இரண்டை மட்டுமே இங்கு கவனத்திற் கொள்ளலாம். 1963ஆம் ஆண்டு வெளிவந்த "அவனியில் அமைதி" என்ற சுற்றுமடலைத் திருத்தந்தை 23ஆம் அருளப்பர், இரண்டாவது பொதுச்சங்கம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் தாம் விரைவில் இறக்கப்போவதை உணர்ந்த அவர், தமது இறுதிச் சாசனம்போல வெளியிட்டார்.

திருச்சபையின் மக்களுக்கு மட்டுமன்றி முதன்முறையாக "நல்லுள்ளம் படைத்த எல்லா மனிதருக்கும்" என எழுதப்பட்ட இவ்வேடு எளிய நடையில் அமைந்தது. பல சமயத்தினராலும் மிக்க ஆர்வத்தோடு வரவேற்கப்பட்டது.2ஆம் வத்திக்கான் சங்கம் உலக அமைதிபற்றிக் கூறியுள்ள கருத்துக்களுள் பல இவ்வேட்டிலிருந்து எடுக்கப்பட்டவையே (இன்றைய உலகில் திருச்சபை எண் 77 - 93)

உலக அமைதிபற்றிப் பேசும் இவ்வேட்டில் மனித உரிமைகள் சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளன. உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் ஆகிய நான்கும் அமைதியைத் தாங்கிநிற்கும் தூண்களாகும் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. மனிதர் அனைவரும் ஆட்கள் என்ற முறையில் பொதுமைப்பண்பு கொண்ட மீறத்தகாத, அன்னியமாக்கப்படமுடியாத உரிமைகளைக் கொண்டுள்ளனர். அதாவது தனக்கென்று உரிமை கோரும் மனிதன், அதே உரிமையைப் பிறரும் கொண்டுள்ளனர் என்பதை உணர்ந்து அதை மதித்துப் போற்றக் கடமைப்பட்டுள்ளான். சிலர் மட்டும் தங்கள் உரிமைகளை உடும்புப்பிடிபோல் பற்றிக்கொண்டு இருப்பதால்தான் உலகில் பாதித்துயரம் ஏற்படுகின்றது. மனித உரிமைகள் இவை, இவை என இச்சுற்றுமடல் வகைப்படுத்தியுள்ளமை கருதத்தக்கதாகும்.

## 03. உலக சமாதானத்தினம்

கத்தோலிக்கத் திருச்சபையானது 1967ஆம் ஆண்டு 23ஆம் அருளப்பர் பாப்பரசராக இருந்த காலத்திலிருந்து ஆண்டின் முதல் நாளை (ஜனவரி 1) உலக சமாதான தினமாகப் பிரகடனப்படுத்தி உலக சமாதானத்திற்காகச் செபிக்கும்படி அனைவரையும் தூண்டி வருகின்றது.

இவ்வருடம் நோபல் பரிசுக்காக சிபார்சு செய்யப்பட்ட தற்போதைய பாப்பரசர் 2ஆம் அருளப்பர், சின்னப்பர் சமாதானத்தை வலியுறுத்தும் சிறந்த தலைவராக விளங்குகின்றார். கடந்த 25 ஆண்டுகளாகத் தனது சுற்றுமடல்களில் உலக சமாதானத்தை வலியுறுத்தி வந்துள்ளார். அவர் வலியுறுத்திக் கூறுபவை பின்வருமாறு:

- இன்றைய உலகிலே சமாதானத்திற்கான பாதையை நாம் கண்டறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.
- உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் என்கின்ற நான்கு தூண்களின் மேல்தான் சமாதானத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும். இவைகளூடாகத்தான் மனித சமுதாயத்தை அழிவின் பாதையிலிருந்து காப்பாற்றமுடியும். உண்மையான சமாதானமானது நீதியாலும், அன்பினாலும் கட்டுப் பாட்டாலும்தான் கிடைக்கும்.
- மன்னிப்பின்றிச் சமாதானம் கிடைக்கவே கிடைக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாடு களின் தலைவர்கள் பகைமைகளை மறந்து போர் ஏற்பட்டதற்கான காரணத்தை அறிந்து அக்காரணங்களைத் தீர்க்கப் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.
- ஆயிரமாயிரம் தீவிரவாதிகள், கொலை ஞர்கள் அழிக்கப்படலாம். ஆனால் வன் முறைக்கான கொள்கைகள் அழிக்கப் படாவிட்டால் சமாதானத்தை நாம் பெற் றுக்கொள்வதென்பது கடினமானதொன் றாகவே இருக்கும்.
- கிறிஸ்தவ மதத்தின் மையமாக இருப்பது சமாதானமாகும். எனவே நாம் சமாதா னத்தைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியவர்களாக உள்ளோம். நாம் சமாதானத் தூதுவர்களாகச் செயற் படவேண்டியதன் அவசியத்தை "சமா தானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்". (மத்.5:9) என்ற வாக்கியமூடாகக் கிறிஸ்து வலியுறுத்தியுள்ளார்.

## 04. சமாதானம் இறைவனின் கொடை

சமாதானம் என்பது இறைவனுடைய கொடை. கிறிஸ்து "உலகம் தரமுடியாத உண்மைச் சமாதானத்தை நான் தருகிறேன்" (அரு. 14:27) என்று கூறினார். உலகிற்குத் தெரிந்தது ஒரு வகையான சமாதானம். போரற்றநிலை. கிறிஸ்து கூறும் சமாதானம் இறைவனிடமிருந்து ஊற்றெடுப்பது, உலகத் திடமிருந்து அல்ல. உள்ளத்தில் உள்ள சமாதானம் மனித முயற்சிகள் புரிந்து ணர்வுகள் அனைத்தையும் தாண்டியது.

### 4.1 சமாதானத்துக்கான இறையியல் ஆதாரங்கள்

அரசியலைப்பற்றிச் சிந்திக்கும் எவரும் சமாதானத்தை முக்கியமானதாகக் கருதவில்லை என்றால் அவ்வரசியல் பய னற்றது. அதையும்விட, நற்செய்தி அறிவிப் பானது சமாதானத்தை அடிப்படையாகக் கொள்ளவில்லை என்றால், அது பொருளற்று விடும். மக்கள் பணிக்கும், விடுதலைக்கும் புளிக்காரம்போல் இருக்கவேண்டியது இச் சமாதானமே.

### 4.2 இறை வெளிப்பாட்டின் மையப் பொருளும், பணியும் சமாதானமே.

பலர் இறைவெளிப்பாட்டில் சமாதா னத்தின் முக்கியத்துவத்தை மீளக் கண்டு பிடித்துள்ளனர். 1983இல் நடைபெற்ற உல கத் திருச்சபைக்கான ஒன்றுகூடலில் பின் வரும் வாக்கியம் வலியுறுத்தப்பட்டது. "சமாதானம் பற்றிய விவிலியத்தின் கண் ணோட்டமும் அனைத்து மக்களுக்கான நீதியும் ஒற்றுமையும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் களுக்கான பல்வேறு விருப்பத்தேர்வில் ஒன்றல்ல. மாறாக, அனைத்துக்கும் மேலாக வலியுறுத் தப்பட வேண்டியதொன்று. இந்த அழைப்பானது ஒருவர் கிறிஸ்துவின் சீடனாக அல்லது கிறிஸ் தவனாக வாழ்வதற்கு அடிநாதமாக விளங்க வேண்டியதொன்று". 'அமைதியை அருளும் நற்செய்தியை அறிவிப்பதற்கான ஆயத்த நிலையை உங்கள் காலில் மிதியடிகளாகப் போட் டுக் கொள்ளுங்கள்" (எபே. 6:15) நற்செய்தியா னது, சமாதானத்தை இடையிடையே செய் யும் பணியாக அன்றி, நிரந்தரமாகச் செய்யும் முக்கிய பணியாக வலியுறுத்துகிறது. படைப்புக்கள் அனைத்தோடும் சமாதானமாக வாழ்வது ஒருவர் ஒருவரோடு சமாதானமாக வாழ்வது, சமாதானத்தின் தூதுவர்களாக இவ்வுலகில் வாழ்வது, இவை அனைத்தும் ஒரே கருத்தையே வலியுறுத்துகின்றன.

சமாதானம் பற்றிய விவிலியக் கண் ணோட்டம் பல அம்சங்களை உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக்குகின்றது. மீட்பு, முழுமை, ஒருங்கிணைந்த நிலை, நலமான உறவு, கலாசாரப் பொருளாதார சமூக உறவுகள் என்பன சமாதானத்திற்கான காரணங்களாக அமைகின்றன. கேமன் கோக்கன் என்பவர் விவிலியக் கண்ணோட்டத்தில் மனித வாழ்வின் சாராம்சம் என்னவென்ற வினாவைத் தொடுக்கின்றார். உடனடியாகச் சமாதானம் என்றபதிலையும் கொடுக்கின்றார். சமாதானமே வாழ்வின் "கொடுமுடி" யாக அமைகின்றது.

சமாதானந்தான் இறைவனுடைய வாக்குறுதிகளுக்கும், கொடைகளுக்கும் நடுமையமாக விளங்குகின்றது. இது எவ்வளவுக்குக் காத்திரமானது என்றால், கிறிஸ்துவின் சீடர்கள், சமாதானத்தை நிலைநாட்டத் தம் உயிரையே அர்ப்பணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்தன் நிலைக்கேற்ப சமாதானத்தின் தூதுவராக வாழ அழைக்கப்படுகின்றான்.

சமாதானத்தின் தூதுவராகச் செயலாற்றுவதற்கும், சமாதானத்திற்குச் சான்று பகர்வதற்கும் ஒருவர் மனித நிலைக்கு மேற்பட்ட இறைவனின் கொடையாகிய சமாதானத்தால் நிரப்பப்பட வேண்டும். சமாதானத்திற்காகத் தம்மை அர்ப்பணிக்கும் எவரும் எசாயாவின் பின்வரும் வார்த்தைகளை மனதிற் கொள்ளவேண்டும். "அவர்கள் தங்கள் வாள்களை கலப்பைக் கொழுக்களாகவும், ஈட்டிகளை கருக்கு அரிவாள்களாகவும் அடித்துக் கொள்வார்கள். ஓரினத்திற்கு எதிராக மற்ற இனம் வாள் எடுக்காது. அவர்கள் இனி போர்ப்பயிற்சி பெற மாட்டார்கள்". (எசாயா. 2:4 - 5)

**4.3 காலத்தின் அடையாளங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும்.**

சமாதானப் பணியின் மையம் காலத்தின் அறிகுறிகளைக் கருத்திற்கொள்வதோடு ஒன்றுசேர்ந்து இருக்கவேண்டும். சமாதானத்திற்கான பணி மற்றும் பல பணிகளுள் ஒன்றல்ல. மாறாக, இன்றைய உலகின் மிக முக்கிய பணியாகும். இதில் ஏற்படும் தவறு மிகப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதற்கான பணி அடிப்படையான எமது சிந்தனை மாற்றத்தால், பொருளாதார அரசியல் அமைப்புக்களிலே உண்மையான நீதியையும், சமாதானத்தையும், கொணர்வதாகும். இந்தச் சுய பணிக்கு நல்மனம் உடைய அனைவரும் தம் ஒத்துழைப்பை நல்க வேண்டும். கிறிஸ்தவர்கள் இப்பணியில் வகிக்க வேண்டிய சிறப்பான இடத்தை எந்நாளும் மனதிற் கொண்டிருக்கவேண்டும். சமாதானத்தின் அரசராகப் பிறந்த இயேசு சமாதானத்திற்கான இந்த அர்ப்பணிப்பில் உயிர் மூச்சாக இருக்கவேண்டும்.

**4.4 சமாதானம் இன்றைய உலகில் ஓர் சவால்**

இன்று பல அறிஞர்கள் சமாதானத்திற்கான அர்த்தம், நோக்கம், விளைவு என்பவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றார்கள். இவர்கள் சமாதானம் பற்றி இயேசு கூறிய ஒரு சில வார்த்தைகளையல்ல அவருடைய முழு வாழ்வு, செயற்பாடுகள், அவருடைய இறப்பு அனைத்தையுமே வலியுறுத்திக் கூறுகின்றனர். "சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்". (மத். 5:9) என்று கூறி சமாதானத்தின் அரசராக பெத்லேகேமில் பிறந்த இயேசு தன் வாழ்வில் சொல்லாலும், செயலாலும் நீதியோடு கூடிய சமாதானத்தை வலியுறுத்தினார். இவ் வாழ்வின் விளைவு சிலுவை மரணத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தது. சமாதானத்தை ஜெருசலேமிலே அவர் கண்டார். ஜெருசலேம் என்பது ஜெரு + ஷலோம் என்னும் பொருள்படும். அதாவது சமாதானத்தின் நகரம். சமாதானத்தின் நகரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தன் உயிரையே விலையாகக் கொடுத்துத்தான் சமாதானத்தைப் பெற்றுத்தந்தார். இயேசுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சமாதானத்திற்காக தம் உயிரைத் தியாகம் செய்வோர் எண்ணற்றோர். இவர்களுடைய வாழ்வைப் பார்க்கும்போது சமாதானம் என்பது கேட்டவுடன் தங்கத்தாம்பாளத்தில் தரப்படும் ஒன்று அல்ல. உயிரையே விலைகொடுத்து வாங்க வேண்டியதொன்று. சமாதானத்தை ஏற்படுத்திக் கிறிஸ்துவின் மனநிலையோடு, கிறிஸ்துவின் விழுமியங்களோடு வாழ்வது அவசியம். "அறிவெலாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும். மனத்தையும் பாதுகாக்கும்." (பிலிப்பியர் 4:7) என்கிறார் தூய சின்னப்பர்.

**4.5 சமாதானம் முழு வாழ்வையும் ஆட்கொள்ளுகின்றது.**

சமாதானம் என்பது நீதியையும், விடுதலையையும் மட்டும் இலக்காகக் கொண்டதல்ல.அது உடல் நலத்திற்கும்,ஆன்மீக வளர்ச்சிக்கும், ஆரோக்கியமான உறவுகளுக்கும், சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு நிலையில் சீர்நிலையை உருவாக்குவதற்கும் உதவியாக இருக்கும்.

முதலில் எமக்குள்ளே சமாதானத்திற்கு எதிராக ஆழமாகப் புரையோடிக் கொண்டிருக்கின்ற காயங்களை நாம் இனங்காணவேண்டும். அதேவேளை இவற்றைக் குணமாக்குவதற்கான வளங்களையும் கண்டறியவேண்டும். இவ்வாறு செய்தால் நாம் எமக்குள்ளே இருக்கின்ற தீமைகளையும், ஆரோக்கியமற்ற நாட்டங்களையும் களைவதோடுசமாதானத்திற்காக எமக்குள்ளே இருக்கின்ற வல்லமைகளையும் கண்டுணர்ந்து மற்றவர்களுக்குஉதவிசெய்யமுடியும். இவை எல்லாம் முழுமையான சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் எனும் ஆவலைத் தூண்டுகின்றன. இப்படியான நிலையில் நாம் ஒருவர் ஒருவரை ஏற்று, ஒருவர் ஒருவரைப் பாராட்டி, மற்றவருடைய முழுமையான வளர்ச்சிக்கு நாம் உதவ முன்வருவோம்.

இன்று பல்வேறு காரணங்களால் உள்ளங்கள் பிளவுபட்டு, புண்பட்டுள்ள நிலையில் சமாதானத்துக்கு அடிப்படையானது ஒப்புரவு. 'உயிர்த்த இயேசுவை அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தாரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை... தகர்த்தெறிந்து ஒப்புரவை. அமைதியை அளித்தார்.' எபே.(2:11 - 22) என்று குறிப்பிடுகின்றார். தூயசின்னப்பர் இறைவனோடும் மனிதரோடும் ஒருவருக்கு ஏற்படும் ஒப்புரவுதான் ஒருவரின்சமாதானத்துக்கு அடித்தளமாக அமைய முடியும். ஒப்புரவு இன்றி சமாதானத்தை அநுபவிக்கமுடியாது.இவ் ஒப்புரவையும், சமாதானத்தையும் கிறிஸ்து வழங்குகிறார். பரலோக தந்தை மனுக்குலம் அனைத்தின்மீதும் கொண்ட நிபந்தனையற்ற அன்பினால் தமது அன்பு மகன் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினால் தன்னோடு அனைத்து மக்களையும், படைப்புக்களையும் ஒப்புரவாக்கி எக்காலத்துக்குமுரிய சமாதானத்தை படைப்பு அனைத்திற்கும் ஆசீராகப் பொழிந்துள்ளார். (எபே. 1:3 - 10)

**05. நிறைவாக**

எப்பிரச்சினைக்கும் தீர்வுகாண்பதற்கு இருவித அணுகுமுறைகளைக் கையாள்வது அவசியம். ஒன்று சுய ஆய்வு, மற்றது சமூக ஆய்வு. இந்த ஆய்வுகளின் மூலம் தனி நபரிலும் சமூகத்திலும் நிலவும் அழிவு சக்திகளை நீக்கி ஆக்கபூர்வமான வற்றைச் செயற்படச் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தை உருவாக்கும் முயற்சிக்கு இந்த அணுகுமுறை இன்னும் அதிகம் தேவை. சமாதானத்திற்கு எதிரான போரின் வேர் தனிநபரின் உள்ளத்திலேயே முளைக் கின்றது. பகை, பொறாமை, போட்டி என்பன தனிநபர் உள்ளத்தில் உருவாகி அடக்கு முறையாக, போராக, சமூக அமைப்புச் சக்தியாக மாறுகின்றன. சமுதாயத்தில் போர் உருவானதற்கான நீடிப்பதற்கான அடிப் படைக் காரணிகளை சமூக ஆய்வு மூலம் கண்டுபிடிக்க வேண்டும். இதனால் தான், திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் "ஆயிரமாயிரம் தீவிரவாதிகள், கொலைஞர்கள் அழிக்கப்படலாம். ஆனால் வன்முறைக்கான கொள்கைகள் அழிக்கப்படா விட்டால் சமா தானத்தை நாம் பெற்றுக்கொள்வது என்பது கடின மானதொன்றாகவே இருக்கும்." என்கின் றார். சுய ஆய்வு, சமூக ஆய்வுகளின் மூலம் அழிவுச் சக்திகளை இனங்கண்டு வேரறுப்பது மட்டும் போதாது. ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும். ஆவியின் கனிகளான "அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்" (கலாத்தியர் 5:22 - 23) என்பவற்றால் உள்ளங்கள் நிரப் பப்பட வேண்டும். இவ்வாறு தனிநபர் உள்ளங்கள் நிரப்பப்படுவதோடு சமூகத் தில் உண்மை, நீதி, அன்பு, சுதந்திரம் எனும் நான்கு தூண்களின்மேல் சமா தானத்தை நாம் கட்டியெழுப்ப முயல வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்கேற்ப தமது சூழ்நிலையில் சமா தானத்தின் தூதுவராக வாழவேண்டும், பணிபுரிய வேண்டும், பங்களிப்புச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் உண்மைச் சமாதானத்தை உலகில் நிலை நாட்ட முடியும். புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். *

"கலாசாலையின் அற்புத படைப்பாம் கலைமலருக்கு எமது வளமான வாழ்த்துக்கள்."
நவநாகரிக உலகுக்கேற்ற நேர்த்தியான தையலகம்
ரவி ரெயிலர்ஸ்
RAVI TAILORS
கோண்டாவில் வீதி,
இருபாலை.
Kondavil Road,
Irupalai.

"கலைமலருக்கு எமது கனிவான வாழ்த்துக்கள்."
சண்ராஜ் கொம்பிளெக்ஸ்
SANRAJ COMPLEX
Telecom - Fax - Photostat
Laminating & Mixture palace.
உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்புகளுக்கு நீங்கள் அழுத்த வேண்டிய இலக்கங்கள்
021-222-5388 021-222-3909
060-2212750 060-2212551
Mixture Palace
சிற்றுண்டி வகைகள் ஒடருக்கு உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.
138, K.K.S. Road,
Chunnakam.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பு - வேலை சார் கூட்டிணைந்த கல்வி இலங்கை அனுபவங்கள்

*(Work - Study Corporative Education Sri Lankan Experiances)*

**திரு. மா. சின்னத்தம்பி** M.A.
கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

பாடசாலைகளில் படிப்பு மாத்திரம் போதுமானது; சமூகத்தில் சிறந்த சனநாயகக் குடிமக்களாக - முரன்பாடின்றி பொருந்தக்கூடியவர்களை உருவாக்குதற்கான படிப்பை வழங்குதற்காகவே பாடசாலைகள் செயற்படுகின்றன. இதுவே மரபுவழிக்கருத்தாக இருந்தது. எனினும் படிப்படியாக வேலை என்பதும் படிப்புடன் தொடர்புடையதாயிருக்க வேண்டும் என்ற கருத்து 1970 களிலிருந்து வளர்ச்சி பெற்றது.

இலங்கையிலும் படிப்புடன்-வேலையைத் தொடர்புபடுத்தும் முயற்சிகள் நீண்டகாலமாக மேற்கொள்ளப் பட்டிருந்தன. அத்தகைய முயற்சிகள் பற்றியும் அவற்றின் விளைவுகள் பற்றியும் இக்கட்டுரை விளக்குவதாக அமைகிறது.

### படிப்பு - வேலை பற்றிய கொள்கை:

ஜோன் டுயி (Johe Dewey) போன்ற அமெரிக்க கல்வியியலாளர்கள் உண்மையான கல்வியென்பது வேலை அனுபவங்களூடாகவே பெறப்படவேண்டுமென்று விளக்கினர். தொழில் நிறுவனங்களும், பொருளியலாளரும் கருதுவதைப் போலவே கல்வியியலாளரும் வேலை பற்றிய எண்ணக்கருவை முக்கியமானதாகக் கருதினர்.

வேலை என்பது படிப்பு என்பதிலிருந்து மிகவும் தொடர்பற்ற அம்சமாக பழமைவாத மேற்கத்திய சிந்தனையாளர் கருதினர். புராதன கிரேக்க சிந்தனையில் "படிப்பு" என்பது "ஓய்வு" (Leisure) என்று கருதப்பட்டது. ஓய்வாக இருப்பவர்களாலேயே உண்மையையும் அழகையும் கண்டறியமுடியும் என்றனர். "வேலை என்பது சாபக்கேடு" என்ற கருத்தும் அவர்களிடம் வலுவானதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மாறுபட்ட கருத்துக் கள் பின்னர் வளர்ச்சிபெற்று வேலை என்பது தொழில் பற்றிய அளவீடாகவன்றி கல்விசார் அளவீடாக நோக்கப்பட வேண் டும் என்பது வலுப்பெற்றது.

ஐக்கிய அமெரிக்காவில் ஒஹியோ மாகாணத்தில் அன்ரியோக் (Antioch College) கல்லூரியில் கடந்த எட்டு தசாப் தங்களுக்கு மேலாக வேலை - படிப்பு சார்ந்த கூட்டிணைந்த கல்வி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் பல நிலைகளில் தோல்வியை அவர்கள் சந்தித்தே வந்தனர். ரூபென்ஸ் (Reubens - 1974) வில்லியம்ஸ் (Williams - 1974 ) போன்றோரின் ஆய்வுகள் இதனை வெளிப்படுத்தின. வேலையையும் படிப் பையும் பொருத்தமான வகையில் ஒன்றி ணைப்பது பற்றி அதிக கவனம் செலுத் தப்பட்டது. கல்வி வாழ்வுக்கு வழிகாட்டு வதாக மட்டுமன்றி அது வாழ்வின் ஒரு பகுதியாகவும் அமையவேண்டு மென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வெவ்வேறு வகையான தொழில் களை, வெவ்வேறு புவியியற் சூழ்நிலை களில் மேற்கொள்வதும்,அந்த அனுபவங் களை வகுப்பறைப்படிப்பின் மூலம் மீள வலியுறுத்துவதும் அவசியம் என்பது உணரப்பட்டிருந்தது.

ஜப்பானிய "சென் அணுகுமுறை" (Zen Approach) யும் படிப்பு அனுபவங் கள் குறிப்பான திறன்களைக் கைமாற்று வதோடு சமூக மற்றும் தனிநபர் முன் னேற்றத்திற்கும் உதவியாக இருக்கும் என உணரப்பட்டிருந்தது.

அன்ரியோக் கல்லூரி மாணவர் தமது 4-5 வருடக் கல்விகற்கும் காலத்தில் குறைந்தது 6 காலாண்டுகள் (அதாவது 90 வாரங்கள்) பல இடங்களில் வேலை செய்து அனுபவங்களைப் பெறவேண்டும். இது தமக்குப் பொருந்தக்கூடிய தொழில் களை இளைஞர்கள் இனங்காண்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

கல்விச் சாதனைகள் இளைஞர் களின் தொழில்வாழ்வின் வெற்றிகளுடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டுள்ளன. அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய ஆய்வின் வெளியீடான (Coleman' s Report) கொல்மன் அறிக்கை யும் இவ்வம்சம் பற்றி விளக்கியுள்ளது. தமக்குரிய பாடசாலைக்கல்வியை நிறைவு செய்தபின் தொழில்வாய்ப்புப் பெறமுடியாது ஏங்கும் போது பாடசாலை கள் தம்மை ஏமாற்றி விட்டதாக இளைஞர் மனம் வருந்துகின்றனர். தொழில் வாய்ப் பைப் பெற்றுத்தரும் தகுதி பாடசாலைக் கல்விக்கு இருப்பது தொடர்பாக வலு வான சந்தேகங்கள் அவர்களுக்கு ஏற்படு கின்றது.அத்தகைய சந்தேகம் அதிகரிக் கும் போது பாடசாலைக்கான வரவின்மை அதிகரித்து விடுகின்றது. கல்வி விரயமாகி விடுகின்றதென்ற கருத்து பலமடை கின்றது.

தொழில் கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருக்கும் போதுதான் கற்றலில் மாணவர் உறக்கம் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை புரிகின்றனர். பாடசாலைகளில் உள்ள வகுப்பறைகளிலிருந்து மாணவர் களை வேலை செய்யும் தொழிலிடங் களுக்கு மாற்றுதலும், தொழிலிடங்களி லிருந்து பின்பு வகுப்பறைகளுக்கு மாற்று வதும் முழுமையான கற்றல் செயன்முறை என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

இத்தகைய படிப்பு - வேலை கூட்டிணைந்த அனுபவங்கள் தம்வாழ் நாளில் பொருத்தமானவகையில் வேலை களை மாற்றிக்கொள்வதற்கும் உதவி யாக இருக்கும். பொதுவாக மக்கள் தமது வாழ்நாளில் குறைந்தது நான்கு தடவை யாவது தொழிலை மாற்றிக் கொள்வர் என்று கிறிஸ்டல் (Crystal) கருதுகிறார். உடல் உழைப்பிலிருந்து மூளை உழைப்பு நோக்கி மாறுவதில் அதிக விருப்பம் காணப்படுவதாக சபின் (Sabin - 1967) ஹெரிக் (Herrick - 1971), சப்பாட் (Shappard - 1971), பஸ்கல் (Pascal - 1975) போன்றோர் கண்டறிந்துள்ளனர்.

இத்தகைய தொழில்வாழ்வு பற் றிய முன்னேற்றங்களுக்கு வேலையை யும் படிப்பையும் கூட்டிணைப்பது மிகவும் பயனுடையதாக அமைவது பல ஆய்வு களூடாக நிறுவப்பட்டுள்ளது.

கோட்பாடுகள் வகுப்பறைகளில் கற்பிக்கப்படுவதால் மாத்திரம் விரிந்த சிந்தனைகள் ஏற்பட்டு விடமாட்டாவென் றும், அவை நடைமுறையில் பௌதிக உலகில் பரீட்சிக்கப்படுவ்தாலேயே விளக் கம் பெறுகின்றன என்றும் சூமச்சார் (Schumacher - 1973) விளக்கமளிக்கிறார். இவரது விளக்கமும் வேலை - படிப்பு கூட்டிணைப்பின் முக்கியத்துவத்தை வலு வானதாக்குகின்றது.

காந்தீயச் சிந்தனைகளும் வேலை யிலிருந்து படிப்பு பிரிக்கப்படக் கூடாது என்பதை வற்புறுத்தி வந்தன. இந்தியக் கிராமங்களின் உற்பத்தித் திறனுக்கும் வேலைவாய்ப்புக்கும் வேலை - படிப்பு ஒன்றிணைக்கப்படுவது அவசியமென அவரது சிந்தனைகள் வற்புறுத்தின.

**இலங்கையின் அனுபவங்கள்**

சுகந்திரம் பெறுதற்கு முன் பிருந்தே இலங்கையில் பாடசாலைக் கல்வி தொடர்பாக வேலை - படிப்பு இணைப்புபற்றிய அணுகுமுறை இருந்தே வந்துள்ளது.

1943 இல் கல்விக்கான விசேட செயற்குழு (Special Committee or Education) C. W. W கன்னங்கரா தலைமையில் தேசிய கல்விமுறைமை (National System of Education) ஒன்றை ஏற்படுத்தமுனைந்து பல்வேறு சிபார்சுகள் முன்வைக்கப்பட்ட போது பாடசாலைப்பிள்ளைகளுக்கு விவ சாய வேலையை பள்ளிப்பாடமாக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பெண்பிள்ளைகளுக்கு தையல் வேலை யும், ஆண்களுக்கு சுதேசிய வளங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் களையும் கற்பிப்பதால் தொழில் சார்ந்த அறிவும், திறன்களும், பொருத்தமான உளப்பாங்கும் வளர்ச்சியடையும் என்று கருதப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951இல் கொண்டுவரப்பட்ட கல்விபற்றிய வெள்ளை அறிக்கையும் வேலை - படிப்பு இணைப்பு பற்றிய சார்பு நிலைக்கருத்துக்களைக் கொண்டிருந்தது. 1964இல் கொண்டுவரப்பட்ட வெள்ளை அறிக்கையும், 1966 செப்ரெம்பரில் கொண்டுவரப்பட்ட வெள்ளை அறிக்கையும் கூட வேலை - படிப்பு கூட்டிணைப்புக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கவில்லை.

குறிப்பிடத்தக்க மாற்றம் 1970 களில் ஏற்படலாயிற்று. "புதிய பாதை" என்ற பெயரில் வெளியிடப்பட்ட அரச கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்ட அரச வேலை - படிப்பு கூட்டிணைப்பை மிகவும் முக்கியமாக தாக்கியது. மிகவும் அவசரமாகக் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்களாக 1972 இன் கல்விச் சீர்த்திருத்தங்கள் அமைந்தன (De Selva: 2003: 6) பாடசாலை மட்டத்தில் தொழில் பற்றிய உகந்த மனப்பான்மையால் விருத்தி செய்வதும் பிரதேச தொழில்கள் பற்றிய விழிப்புணர்வை பிள்ளைகளிடம் உருவாக்குவதும், தொழில் உலகுக்குப் பொருத்தமானவர்களாக மாணவர்களை மாற்றுவதும் இச்சீர்திருத்தங்களைத் தீர்மானித்த பேராசிரியர் உடகமவின் குறிக்கோள்களாயிருந்தது.ஆனால் இடது சாரி சார்பான இவ் இலட்சியம் சிறப்பான தாயிருந்த போதும் மேட்டுக் குடியினர் வேறுபட்ட இலட்சியங்களுடன் கல்வி கற்கும் நிலையில் றோயல் கல்லூரி போன்ற பெரிய பாடசாலைகள் இதனைக் கடுமையாக எதிர்த்தன. பெற்றோர், ஆசிரியர், பொதுமக்கள் ஆகியோரின் கடும் எதிர்ப்புக்கு இச்சீர்திருத்தங்கள் இலக்காகின.1977இன் பொதுத்தேர்தலின் போது இது மிகப்பெரிய பிரச்சினையாக முன்வைக்கப்பட்டிருந்தது (De Selva 2003: 6) 1972 சீர்திருத்தங்கள் வேலை - படிப்பு கூட்டிணைப்பு தொடர்பாக பின்வரும் சிபார்சுகளை வெளிப்படுத்தியிருந்தது.

* சிரேஷ்ட இடைநிலைமட்டத்தில் தொழில் முன்னிலைப்பாடம் I, தொழில் முன்னிலைப்பாடம் II என இருபாடங்களை அறிமுகப் படுத்தப்பட்டது.

* கல்லூரி மட்டத்தில் (11, 12ம் தரம்) செயற்றிட்டம் (Project Work) மூலம் வேலை - படிப்பு ஒருங்கிணைக்கப்பட்டது.

* பல்கலைக்கழக மட்டத்தில் நேரடியாக வேலைக்குத் தகுதி பெறக்கூடியவாறு புதிய பட்டப்படிப்பு நெறி கள் அறிமுகப்படுத்தப்பட்டது.பெருந்தோட்டமுகாமை,மதிப்பீடு, வணிகமுகாமைபோன்ற பல புதிய பட்டப்படிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1981இல் வெள்ளை அறிக்கையொன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. வேலை - படிப்பு - கூட்டிணைப்பு தொடர்பாக பின்வரும் கருத்துக்களை இப்புதிய கல்விச் சீர்திருத்தம் முன்வைத்தது.

* பாடசாலை மாணவர்களை இள வயதிலேயே (13 வயதிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்ப நெறிகளில் நுளைவதற்கு ஊக்குவித்தல். இதன்படி கோட்பாட்டு ரீதியாக மாணவன் மீண்டும் பிந்திய கட்டமொன்றில் நூற்கல்வி அமைப்பில் சேர்ந்து கொள்ளலாம்.

* தொழில்நுட்பக்கல்வி மார்க்கங்களை விஸ்தரித்தலும்,நூற்கல்வி, அமைப்புடன் அவற்றை ஒருங்கிணைத்தலும் (ஆராய்ச்சிப் பகுதி - மக்கள் வங்கி 1981 டிசம்பர் சனவரி : 02)

1989 இல் நியமிக்கப்பட்ட இளைஞர் ஆணைக்குழு (The you if commission 1989) இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்ததோடு தேசியக்கல்வி ஆணைக்குழு நிறுவப்படவேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தியது. 1991 இல் அப்போதய கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சராகவிருந்த திரு.லலித் அத்துலத்முதலி தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தைக்கொண்டு வந்தபோது கட்சி பேதமின்றி அது நிறைவேறியது. (De Silva 2003 : 8) தேசிய கல்வி ஆணைக் குழு வேலை - படிப்பு கூட்டிணைப்புக் புதுக் கல்வி தொடர்பாக அடுத்துவரும் காலப் பகுதிகளில் அதிக கவனம் செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பின் உலகில் பல சடுதியான மாற்றங்கள் நிகழ்ந்தன ; சீனாவின் மாவோயிசக் கோட்பாடுகள் கைவிடப்பட்டன சோவியத் யூனியன் தன் கட்டுக்கோப்பை இழந்து பல சிறிய நாடுகளாக சிதறியது கல்வி மீதான அரச தனியுரிமை பற்றிய எண்ணம் பலவீனமடைந்தது. மூலதனம் என்பதனடிப்படையிலன்றி உலகமயமாதலும் திறன்மிக்க மனித வளத்தின் சர்வதேச நகர்வும் முதன்மை பெற்றன சந்தை நோக்கிய கல்விக்குறிக்கோள்களினதும் செயற்பாடுகளினதும் அங்கீகாரம் பெறலாயின.

இந்தப் பின்னணியில் 1992 இல் தேசிய கல்வி ஆணைக்குழு ஜனாதிபதிக்கு இடைக்கால அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தது. இதுவே இவ் ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையுமாகும்.

1994இல் அரசாங்கம் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து 1995 செப்ரெம்பரில் தேசிய கல்விக் கொள்கைக்கான செயல்சார் உபாயம் (An Action Orienfed Strategy Towards a National Education policy) என்ற பெயரில் ஆவணம் ஒன்றைக் கையளித்தது. இது மீண்டும் வேலை - படிப்பு கூட்டிணைப்புக் கல்வி நோக்கி தன் கவனத்தைத் திருப்பியது. உலக ரீதியில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அறைகூவல்களுக்கு முகம் கொடுக்கும் வல்லமையைப் பிள்ளைகளுக்கு வழங்கக்கூடிய கல்வியை இது சிபார்சு செய்ய விரும்பியது. இதனடிப்படையில் 1997 இல் கல்விச் சீர்திருத்தங்கங்கள் கொண்டு வரப்பட்டன. அமைச்சர் ரிச்சட்பத்திரன ஜனாதிபதியின் துரித செயலணியின் தலைவராகச் செயற்பட்டு இச்சீர்திருத்தங்களில் வேலை - படிப்பு தொடர்புகள்



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை - படிப்பு தொடர்புகள் பின்வரு மாறு வற்புறுத்தப்பட்டிருந்தன.

* ஆரம்ப நிலையிலிருந்து தொழிற் பாடுகளுடனான கல்வி ஒரு பிர தான கூறாக அமையும். செய் முறை அனுபங்களூடாகக் கற்ப தற்கு மாணவர் ஊக்குவிக்கப் படுவர். எளிய சாதாரண கருவி கள், அளவு கருவிகள் மற்றும் ஏனைய பொருட்களை உப யோகிக்கவும் மற்றவர்களுடன் சேர்ந்து குழுவாகவும் செயற் படவும் கற்றுக்கொள்வார்கள்.

* செய்முறைத் திறன்களை விருத்தி செய்வதற்கு இடமளிக்கும் வண் ணம் தகுந்த உபகரணங்களை யும் கருவிகளையும் கொண்ட தொழிற்பாட்டு அறை அமைக்கப் படும்.

* க. பொ. த. சாதாரண தரத்தில் மீளாய்வு செய்யப்பட்டு சீராக் கப்பட்ட பாடவிதானத்தின் அடிப் படையில் (விஞ்ஞானமும்) தொழில்நுட்பம் கற்பிக்கப்படும்.

* க.பொ.த. உயர்தர தரத்தில் விவ சாயம், கைத்தொழில், வர்த்தகம், சேவைகள், மற்றும் ஏனைய தொழிற் புலங்கள் சார்ந்த புதிய தொழில்நுட்பக் கற்கைநெறி அறி முகப்படுத்தப்படும்.

* செய்முறை மற்றும் திட்ட வேலைகள், அறிமுகப்படுத்தப் படவுள்ளன. இச்செயற்பாடுகள் முக்கிய மாக தொழில்நுட்பத் திறன்களை வளர்க்க உதவும்.

(ஜனாதிபதியின் துரித செயற்குழு : பொதுக் கல்விச் சீர்திருத்தங்கள்) *1997: 23*

இதற்கு மேலதிகமாக, தொழில் வழிகாட்டல் ஆலோசனை கூறுவதற்கென ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். பாடசாலைகளும் பாடசாலைக் குடும்பங் களும் தொழில், மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகள், வேலைவாய்ப்புகள் பற்றிய தகவல்களைத் தயாரிக்கும் என்றும், இதற்கேற்ப மாணவர் வழிகாட்டப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*1998* இன் முடிவில் முன்பிருந்த வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடத்திற்குப் பதிலாக வேறுபட்ட கவனக் குறிப்புக் களுடையதாக வாழ்க்கைத் தேர்ச்சிப் பாடங்கள் கனிஷ்ட இடைநிலை மட்டத் தில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இது தேசியகல்வி நிறுவகத்தினால் மேற்கொள் ளப்பட்டிருந்த முடிவாகும். ஆனால் அந் நிறுவனத்திற்கு முடிவு எடுக்கும் எந்த ஒரு உரிமையும் இருக்கவில்லை. De silva 2003 : 20 என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

**முடிவுரை :**

பாடசாலைக்கல்வி வெறுமனே அறிவு சார்ந்த எண்ணக்கருக்களை மாத் திரம் கற்பித்து அதனை ஞாபகப்படுத்தி வாழ்வில் பிரயோகிப்பதற்கு ஏற்படுத்தப் பட்டதல்ல. பல்வேறு வகையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்களையும் நேர்மனப்பாங்கையும் கூட கற்பிக்கவேண்டுமென்று நம்பப்பட்டுள்ளது.எனினும் தொழிலிலிருந்து விலகி கற்றலும், கற்று முடித்தபின் தொழில் ஒன்றில் இணைதலும் நடைமுறைச் சாத்தியமானதோ பயன்மிக்க வழிமுறையோ அல்ல.

வேலையும் வாழ்வின் ஒரு பிரிக்க முடியாத அம்சம் என்பதை ஏற்று வாழ்வதற்கான தகைமையை மாணவரிடம் உருவாக்குவதற்கு வேலை- படிப்பு கூட்டிணைப்பு அவசியமாகியுள்ளதென்பதை வளர்முகநாடுகள் முழுதாக ஏற்றுள்ளன. கணனிக்கல்வியும் இவ்வாறே பாடசாலையில் முதன்மை பெறுகின்றது. வேலை முறையுடன் இணையும் எந்த ஒரு படிப்பும் பொருத்தமாக பாடசாலைக் கலைத் திட்டங்களில் இணைக்கப்படுவது எதிர்காலத் தேவையாகும்.

1940 களிலிருந்து இன்று வரை மேற்கொள்ளப்பட்ட படிப்பு கூட்டிணைப்பு முயற்சிகள் பல்வேறு அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. அவற்றைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. இலங்கைப் பாடசாலைகளிடையே பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்ற போதும் அவற்றைக் கவனத்திற்கு எடுக்காது சிபார்சுகள் முன் வைக்கப்பட்டிருந்தன.
2. வேலை என்பது சமூகவியல் அடுக்கமைவில் சாதி பற்றிய கண்ணோட்டத்துடன் நோக்கப்படுவதும் அதனால் பல்வேறு சமூகப் பிரிவினரும் பல்வேறு உடல்சார் வேலைகளை விரும்பாதிருந்தமை.
3. பெற்றோர் தொழிலாளராயும், விவசாயிகளாயும் இருந்த நிலையில் இந்த வேலை பற்றிய படிப்பு மீண்டும் தம் பிள்ளைகளை உடற்றொழிலாளராக்கி சமூக அசைவியக்கத்திற்கு தடையாகிவிடும் என அஞ்சி எதிர்ப்புத் தெரிவித்தமை.
4. பாடசாலை மட்டத்தில் " வேலை " என்பதும் ஏனைய பாடம் போன்றே கற்பிக்கப்பட்டபோது தொழிற் சூழலோ, தொழில் வழங்குநருடனான தொடர்போ இல்லாதமையினால் பிள்ளைகளிடம் திறன்கள், உளப்பாங்கு தொடர்பாக எதிர்பார்த்த மாற்றங்கள் நிகழாதிருந்தமை.
5. இத்தகைய வேலைப் பயிற்சியை உகந்த முறையில் வழங்கக் கூடியவர்கள் பலர்.வெளியில்கிடைக்கத்தக்கதாயிருந்த போதிலும், உரிய வகையில் அனுபவமும், பயிற்சியும் பெறாத ஆசிரியர்கள் "வேலை" யை பாடங்களின் போதனை மாதிரியில் முழுமையின்றிக் கற்பித்து வந்தமை.
6. இத்தகைய வேலை அனுபவம் வழங்கும் பாடங்கள் உரிய தொடர்ச்சியின்றி வெவ்வேறு வகுப்பு நிலைகளில், வெவ்வேறு காலங்களில் வெவ் வேறு மாதிரிகளில் கற்பிக்கப்பட்டு வந்தமை.
7. பாடசாலை மட்டத்தில் புலமை சார் நாடகங்களான விஞ்ஞானம், கணிதம்,ஆங்கிலம்,போன்றவற்றுக்கு

27082PPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்ட மதிப்பும் அங்கீகாரமும் இவ் "வேலை" மையப்பாடங்களுக்கு வழங்கப்படாமை. இதனால் ஆசிரியர்கள், மாணவர்கள் மட்டத்தில் பாடசாலைக்குள்ளேயும் போதிய "மதிப்பு" இப்பாடங்களுக்கு வழங்கப்பட்டிராமை.

இத்தகைய பலவீனங்களினால் இலங்கைப் பாடசாலை முறையில் வேலை - படிப்பு - கூட்டிணைந்த கல்வி எதிர்பார்த்த இலக்குகளை அடையத் தவறியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**Reference**


1. De Silva J. Eric (2003) Some Reflections On Policy Making In Education. J.E. Jayasuriya memorial Foundatior Colombu PP 2-22
2. Barton e - Panl (1978) Implementuig New Edrcation - Work Policies, Jossey Bass Inc; Publishers, London PP 27-35
3. ஆராய்ச்சிப் பகுதி, மக்கள் வங்கி (1982)

   கல்வி வெள்ளை அறிக்கை, பொருளியல் நோக்கு, மக்கள் வங்கி, கொழும்பு ப: 3 - 7
4. ஜனாதிபதியின் துரித செயற்குழு (1997) பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள் கல்வி உயர்கல்வி அமைச்சு, கொழும்பு - ப: 23-14.


*


Best Wishes From;



லைடன் புடவை நிலையம்

leyden Textile Centre



Dealers in textiles & Readymade Garments

410, Hospital Road, Jaffna.

Telephone - 021 222 2381

"கலைமலர் சஞ்சிகைக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்."

தரமானதும், சுவையானதுமான

கச்சான் பருப்பு, கடலை,

பகோடா, சீனிசேவ்.

காரச்சேவ். நெய்பூந்தி,

மற்றும் இனிப்பு வகைகள் எல்லாவற்றிற்கும் யாழ் நகரில் நாட வேண்டிய ஒரே இடம்.

ஸ்ரீராம் கஜன் மிக்சர்

இல:- 07, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறைக்கற்றல் - கற்பித்தல் செயலாற்றுகையில் போதனைக் கவின்நிலை

திரு.உ. நவரத்தினம்
B.A.(Cey), PGDE (S.L). (M.Ed(S.L) M.Ed(Aus)
பணிப்பாளர், தேசியகல்வி நிறுவகம்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் களமாக விளங்குவது வகுப்பறையாகும். வகுப்பறையைக் கற்போன் கற்பதற்குத் தங்கியிருக்கும் இடமெனலாம். அத்தகைய இடம் எந்தவகையில் போதனைக்குப் பங்களிப்புச் செய்யும் என்பதில்; கற்போனின் கற்றல் அனுபவத்திலும், கற்பிப்போனின் கற்பித்தல் இயலுமையிலும் தங்கியுள்ளது. இது போதனைக் கவின்நிலைக்கான அடிப்படையாகவுள்ளது. இப்போதனைக் கவின் நிலையைப் பின்வரும் பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றன.

- போதனை முன்வைப்பு
- வகுப்பறைச் சூழல்
- ஆசிரியர் எதிர்பார்க்கை
- அறிகைசார் உறுதிப்படுத்தல்
- ஊக்கல் உத்திகள்
- பொருத்தமான பயிற்சி
- கற்பதற்காக ஒதுக்கப்படும் நேரம்.
- அறிவுறுத்தப்பட்ட பின்னூட்டல்.
- போதனையைப் பொருத்தமாக்கல்
- மதிப்பீட்டு முன்னேற்றம்
- போதனைத் திட்டம்
- மாணவர் பெற்றுக் கொண்ட விளக்கம்.

### போதனை முன்வைப்பு:

போதனை என்பது, தான் திட்டமிட்ட விடயத்தை ஒழுங்காக்கிக் கற்போன் முன் வைப்பதாகும். இதற்குப் பொருத்தமான முறையையும் பின்பற்றுகின்ற போது கற்பித்தல் மேலும் வினைத்திறனாகும். குறிப்பாகபாடத்தைத் திட்டமிடும் போதே போதனை தொடர்பான முன்வைப்பு முக்கியமாகிறது. போதனை முன்வைப்பிற்கு விதந்துரைக்கப்பட்ட முறை என ஒன்று இல்லை. ஆசிரியர் பாட இயல்புக்கு ஏற்ப போதனை முன்வைப்பு முறைமையைத் திட்டமிடுதல், கற்றல் - கற்பித்தல் செயன் முறைக்கு அவசிய மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வகுப்பறைச் சூழல்:

போதனை ஆற்றுகைக்கு வகுப்பறைச் சூழல் இன்றியமையாதது. இதில் வகுப்பறை முகாமைத்துவம் முக்கியம் பெறுகின்றது. போதியளவு முகாமைத்துவத் திறன்களை ஆசிரியர்கள் கொண்டிருக்கும் போது கற்பித்தலுக்குக் கூடுதல் நேரத்தை ஒதுக்க முடியும். வகுப்பறையை ஒழுங்காக்க, வகுப்பறைச் சூழலை ஏற்படுத்த அதிகளவு நேரம் ஒதுக்கப்பட்டால் கற்பித்தலுக்கான நேரம் குறைவடைகின்றது. இன்று பொதுவாகக் கூறப்படும் புகாராக, கற்பித்தல் தொழிலில் புதிதாக நுழைவோர் அதிகளவு நேரத்தை வகுப்பறைச் சூழலை ஒழுங்கமைக்கும் முகாமைத்துவத்துக்காகச் செலவிடுவதால் போதனைக்கான நேரம் குறைவடைகின்றது என்பதாகும். எனவே சரியாகத் திட்டமிட்டு வகுப்பறைச் சூழலை முன்கூட்டியே திட்டமிட்டு ஒழுங்காக்கி, நாளாந்த வேலைகளைக் குறைத்து சிறந்த போதனைக் கவின் நிலையை ஏற்படுத்தும்போது கற்றலின் விளைவு பயனுறுதி பெறுகின்றது.

### ஆசிரியர் எதிர்பார்ப்பு:

ஆசிரியர்களின் பிள்ளைகளின் அடைவு தொடர்பான எதிர்பார்ப்பும் போதனைச் சூழல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்கள் பிள்ளைகளின் அடைவு தொடர்பாக உயர் இலக்குகளைக்கொண்டிருக்கும் போது;போதனைச் சூழல் தாக்கமுள்ளதாக அமைகின்றது. உயர்ந்த எதிர்பார்ப்புடன் வகுப்பறைக்குள் நுழையும் ஆசிரியரினால் பிள்ளைகளின் கற்றலில் உயர்தாக்கத்தைக் கொண்டு வரமுடியும். கல்வி எதிர்பார்க்கை உயர்வாக எதிர்பார்க்கப்படும் போது, ஆசிரியர்களின் வகை கூறல் இயல்பும் உயர்ந்ததாக இருக்கும். ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பாகத் தாம் எதிர்பார்க்கும் இலக்கைத் தெளிவாக அவர்களுக்கு முன்வைக்கும் போது எதிர்பார்க்கும் இலக்கை இலகுவில் அடையமுடியும். இது போதனைக் கவின் நிலையை மேம்படுத்தும்.

### அறிகைசார் உறுதிப்படுத்தல்:

அறிகை சார் உறுதிப்படுத்தல் என்பது உளத் தொழிற்பாடு சார்ந்ததாகும். கற்போன் தான் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விடுவித்துக்கொள்ள விசேடமான உள ஆற்றல் திறன்களைக் கொண்டிருத்தல், போதனை ஆற்றுகைக்கு மேலும் சாதகமான பயன்களை ஏற்படுத்தும். இதுவே அறிகைசார் உறுதிப்படுத்தலின் பயன் பாட்டுக்கான எடுத்துக் காட்டாகவுள்ளது. இது போதனைக் கவின்நிலையில் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

### ஊக்கல் உத்திகள்:

கற்பித்தலில் ஈடுபடுவோர் கற்போர்களை எவ்வாறு ஊக்கப்படுத்த வேண்டும் என்பதைச் சரியாகப் பிரயோகிக்கும் போது கற்றல் பயனுள்ளதாகின்றது. வெகுமதி, அன்பளிப்பு ஆகிய அம்சங்கள் இதனை உறுதிப்படுத்தும். கற்போனை ஊக்கப்படுத்தும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவு உயர்வாக இருக்கும். எனவே கற்பிப்போன் ஊக்கலுக்கான சரியான உத்திகளை அறிந்து அதைப் பொருத்தமான வகையில் பிரயோகிக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கும் போது போதனைக் கவின் நிலை மேன்மையடையும்.

**பொருத்தமான பயிற்சி:**

கற்போருக்கு கற்றல் தொடர்பாகப் பொருத்தமான பயிற்சியை வழங்குதல் போதனைச் சூழலின்பாற்பட்டது. இப்பயிற்சியை இரு வகையாக நோக்கலாம். ஒன்று பயிற்சியானது நெறிப்படுத்தப்பட்டதாக அமைதல். இங்கு கற்போனைப் பொருத்தமான திசையில் இட்டுச் செல்லல் முக்கியப்படுத்தப்படுகின்றது. உதாரணமாகக் கற்போனின் மொழி சார்ந்த உச்சரிப்பினை நெறிப்படுத்த வழிப்படுத்தப்பட்ட பயிற்சிகளை மேற்கொள்ளல். இரண்டாம் நிலையில் கற்போன் வகுப்பறையில் சுதந்திரமாக செயற்படுவதற்கான பயிற்சி வழி முறைகளை அமுலாக்கல்.இதில் கற்போன் மைய அணுகுமுறை பின்பற்றப்படும். இவ்விரு வகையான பயிற்சி களையும் பல்வேறு சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப வழங்கலாம். இங்கு கொடுக்கப்படுகின்ற பயிற்சியானது கற்போனின் உடல், உள திறன்களுக்குப் பொருத்தமாக அமைதல் இன்றியமையாததாகும்.

**கற்பதற்காக ஒதுக்கப்பட்ட நேரம்:**

கற்போன் கற்பதற்காக ஒதுக்கப்பட்ட நேரம் இதன்பால் சுட்டப்படுகின்றது. நேரம் ஒரு வளமாகக் கருத்தப்படுவதால் நேரவள முகாமைத்துவத்தில் மிகக் கூடிய அக்கறை காட்டப்பட வேண்டும். முன் குறிப்பிட்ட காரணிகள் அனைத்தும் இயக்கத் திறனும்,வினைத்திறனும் உள்ளதாக இருக்க ஒதுக்கப்பட்ட நேரத்தில் குறித்த கற்றல் இலக்குகளை அடைவித்தல் என்பது மிகுந்த முக்கியத்துவத்தினைக் குறிக்கின்றது.

**அறிவுறுத்தப்பட்ட பின்னூட்டல்:**

கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் பின்னூட்டல் பிரதான இடத்தை வகிக்கின்றது. கற்பவன் தனது கற்றல் செயல்களின் விளைவுகளை அறிந்து கொண்டால் தான் அவற்றை வேண்டியவாறு பயன்படுத்த முடியும். ஒருவன் தனது கற்றலின் செயல்படுநிலையை, இடமாற்றத்தை அறிந்து கொள்ளுமாறு ஏற்பாடு செய்தலே பின்னூட்டலாகக் கருதப்படுகின்றது. இது வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலின் போதனைக் கவின் நிலையின் விளைவாகவும் முக்கியப்படுகின்றது.

**போதனையைப் பொருத்தமாக்கல்:**

இதில் வகுப்பறையில் கற்போராக இருக்கின்ற மாணவர்களின் பல்வேறு தனியாள் வேறுபாடுகளை உணர்ந்து, கடினத் தன்மைகளை விலக்கி பொருத்தமான முறையில் போதனையை மேற்கொள்ளுதல் சுட்டப்படுகின்றது. இதற்குப் போதனை இலக்குகளையும் பொருத்தமான வகையில் தீர்மானிக்க வேண்டும். எல்லோருக்கும் கல்வி என்ற எண்ணக் கருவும் இங்கு கவனிப்பட வேண்டும். குறிப்பாக விசேட தேவையுடைய பிள்ளைகளின் கல்வித்தேவைகளை நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப் பொருத்தமான கற்பித்தல் முறையியல்களையும், கற்பித்தல் நுட்பங் களையும் பயன்படுத்தல் இன்றியமை யாததாக இங்கு காணப்படுகின்றது.

**மதிப்பீட்டு முன்னேற்றம்:.**

மாணவர்களின் செயலாற்றுகை தொடர்பான பொருத்தமான மேற்பார் வையை போதனைக் கவின்நிலையில் மேற்கொள்ளவேண்டும். இது மதிப்பீடு தொடர்பான முன்னேற்றத்திற்கு உத்வே கத்தைக் கொடுக்கும். மேலும் மாணவர் களின் பிழையான செயலாற்றுகைகள் திருத்தப்பட்டு, சரிசெய்யப்பட வழி வகுப் பதாக மதிப்பீட்டு முன்னேற்றம் திகழ் கின்றது. இதற்குப் போதியளவு நேரம் ஒதுக்கப்படுதல் மிகப் பயனுறுதியைக் கொடுப்பதுடன் வகுப்பறையின் மொத்த செயலாற்றுகைப் பயன்பாடுகளையும் உயர்த்தும்.

**போதனைத் திட்டம்:**

கற்போனின் நடத்தைகளையும், ஆற்றல்களையும், நன்கறிந்தவராக ஆசிரி யர் இருப்பாராகில் போதனைத் திட்ட மிடலை மேற்கொள்ளுதல் சுலபமாக இருக்கும். இன்று வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் போதனைக் கவின்நிலையில் முதன்மைக் காரணியாகவுள்ளது. போத னைத் திட்டமிடலேயாகும். இன்றைய நவீன கல்விச் செயல் நெறிகளில் இவ்வம் சத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக் கப்படுகின்றது.

**மாணவர் பெற்றுக் கொண்ட விளக்கம்:**

மாணவர்களுக்கு வழங்கப்படும் கற்றல் பணிகள் தொடர்பாகச் சரியான எண்ணக்கருக்களை முதலில் ஆசிரியர் பெற்றிருத்தல். அப்பெறுதல்களினூடு மாணவர்களுக்கு அது தொடர்பான அனுபவத்தைக் கற்பித்தல் செயலாற் றுகை களினூடு வழங்கி மாணவர் குறித்த பாடக்கற்றல் தொடர்பான எவ்வாறான விளக்கத்தைப் பெற்றுள்ளனர் என்பதை அறிந்து அதற்கான, சரியான வழி வகைளை ஆசிரியர் வழங்க வேண்டும்.

கற்றல் - கற்பித்தல் செயலாற்று கையில் போதனைக் கவின்நிலை மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. கற்பித் தல் செயலில் ஈடுபடுகின்ற மாணவ பயிலுநர்கள் இது தொடர்பான சிறந்த விளக்கத்தினைப்பெற்றிருத்தல் வகுப் பறைச் செயலாற்றுகைக்குப் பெரிதும் உதவும்.பொதுவான நோக்கில் வகுப்ப றைக் கவின் நிலை தொடர்பாக ஆசிரிய பயிலுநர்கள் தெளிவான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது சமகாலக் கருத்தாகும். ஆசிரியர் கல்விக் கற்கைக் காலத்தின் போது அத்துறை சார்ந்த வல்லுநர்கள், போதனைக் கவின்நிலை தொடர்பான கவனிப்புக் கற்பித்தல் கலை தொடர்பான மேம்பாட்டுக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றமுடியும். *

**யானையின் துதிக்கையில் 40, 000 தசைகள் உண்டு. ஆனால் ஓர் எலும்புகூட கிடயாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவேந்தர் பாரதிதாசனின் உணர்வுகளில் மனதில் நின்றவை சில.......

செல்வி. ந. சத்தியநிதி
ஆரம்பக்கல்வி 2 ஆம் வருடம் D பிரிவு

புரட்சிக் கவிஞர் என்று போற்றப்படும் பாரதிதாசன் 1891ல் புதுவையிற் பிறந்தவர். சிறுவயதிலிருந்தே கவி இயற்றும் ஆற்றல் வாய்ந்திருந்த இவர் "எங்கெங்கு காணிலும் சக்தியடா "என்னும் பாடலை பாரதியாரின் முன் பாடிக்காட்டிய வேளையில் பாரதியாரால் தமிழ் கவிதை உலகிற்கு அறிமுகப்படுத்தப் பட்டவர். பாரதியின் மேற்கொண்ட பற்றால் பாரதிதாசன் எனப் புனைபெயர் தரித்தவர். இவரது கவிதைகளிலே தமிழ் உணர்வும், திராவிட உணர்வும், சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் உணர்வு பூர்வமாக ஆக் கப்பட்டுள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது.

**தமிழ் உணர்வு**

தமிழை உயிராகக் கொண்டு வாழ்ந் தவர் பாரதிதாசன். தமிழே இவருக்கு பாடல் களின் கருப்பொருளாக அமைந்தது என லாம். இந்த நூற்றாண்டின் இலக்கிய வர லாற்றில் இவர் அளவுக்கு தமிழை பற்றிப் பாடியவர் வேறு எவரும் இலர் என துணிந்து உரைக்கலாம். புரட்சிக் கவிஞர் தம் சிந்தை, சொல், செயல் எல்லாவற்றிலும் தமிழையே கொண்டிருந்தார். தமிழோடு ஒன்றிப் போயி ருந்தார் என டாக்டர். மா. செல்வராஜன் கூறுவது இங்கு நினைவிற் கொள்ளத்தக்க தாகும். (பாரதிதாசன் கவிதைகளில் புரட்சிக் கூறுகள் பக் 112)

அவர் தமிழை பொதுமக்கள் தமி ழாக்கி ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தினார். பக்தி இயக்கம் போல தமிழ் இயக்கமும் வளர வேண்டும் என வலியுறுத்தினார். கடவுளையே எல்லாமாகப் போற்றி வாழ்ந் தவர்களைப் போல தமிழையே அனைத்து மாக எண்ணிப் போற்றியவர். தமிழுக்கு ஒரு இடையூறு வந்தால் உயிரைக் கொடுத் தேனும் அதனை நீக்க வேண்டும் எனக் கூறியவர். தமிழை செந்தமிழ், மங்காத்தமிழ், வீரம் செய்கின்ற தமிழ், கனிச் சாற்றை நிகர்த்த தமிழ் எனப் பல வகைகளில் அதன் புகழ் கூறியவர்.

உலகின் முதல் மொழியாகத் தமி ழைக் கருதும் பாரதிதாசன் சூரியன், சந் திரன், ஆகாயம் என்பன தோன்றிய போதே தமிழும் பிறந்து விட்டது எனக் கூறியவர். தமிழின் இனிமையைப் பலவாறு விரித்துக் கூறிய பாரதிதாசன் பழச்சுவை, கருப்பஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாறு, தேன், காய்ச்சிய பசுப்பால் முதலியன இனிமை தருவனவே என்றாலும் அவற்றை விட தமிழ் இனிமையானது என ஒப்பிட்டு விளக்கினார். ஒரு பெண்ணுடன் கூடிப் பெறுகின்ற இன்பத்திலும் தமிழ் இன்பம் பெருமித மானது என்பதை.

"மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்
மா தமிழுக்கு ஈடு இல்லை"

என தமிழின் பெருமையை உச்ச நிலையில் போற்றியவர்.

தமிழ் வெல்க! என்று பாடிய பாரதிதாசன் வெறும் வாழ்த்து முழக்கத்தோடு மட்டும் நிற்காமல் தமிழர்கள் அதன் வளர்ச்சிக்குத் தொண்டாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். வெளி உலகத்திலும் சிந்தனையிலும் உதித்துள்ள புதுமைகளைத் தமிழில் தரவேண்டும் என்றும் அவைகளுக்கான பெயர்களும் தமிழில் அமைய வேண்டும் என்றும் கூறுகையில் காலத்திற்கு ஏற்ற அறிவியலைத் தமிழும் எய்த வேண்டும் என்ற அவருடைய ஆர்வத்தை உணர முடிகிறது. தமிழை அழிக்க முயலும் சிலருடைய போக்கைக் கண்டு நெஞ்சு பதைத்து தமிழை நலிவு செய்பவரைத் தடுக்காமல் வாழ்வதிலும் இறத்தல் நல்லது என்கின்றார். தமிழ்ப் புரட்சியில் புலவர், மாணவர், அரசியலாளர் முதலிய பலரும் ஈடுபட வேண்டும் என வலியுறுத்திய அவர்

"தமிழென்று தமிழரென்று சிறிது தொண்டு
தாம் செய்வார் அவர் பெருமை தமிழுக்கில்லை"

எனத் தமிழுக்கு தொண்டு செய்வதன் பெருமையை எடுத்துக் காட்டுகின்றார்.

**"தமிழ் மொழியிலும் தமிழினத்திலும் மிக்க ஆர்வமுடையவர் ஆதலில் தமிழைப் பற்றிப் பேசும் போதெல்லாம் தன்னையே மறந்து பாடும் இயல்புடையவர் பாரதிதாசன். தமிழ் மக்களுக்கு தம்நாட்டிலும். மொழியிலும். இனத்திலும் ஆர்வமுண்டாகச் செய்த இக்காலப் புலவர்களுள் முதலிடம் வகிப்பவர் அவர் என்பது மிகையாகாது"** என பேரா.வி.செல்வநாயகம் அவர்கள் அவரது பெருமையை எடுத்துக் காட்டுகின்றார். (தமிழ் இலக்கிய வரலாறு பக் 262)

**திராவிட உணர்வு**

தமிழ்மேற் பற்றுக்கொண்ட பாரதிதாசன் பிறமொழி மேலாண்மையை வன்மையாக எதிர்த்தார். குறிப்பாக இந்திமொழித் திணிப்பை எதிர்த்து திராவிடர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும் எனக் கூறுகையில் அவரது திராவிட சார்பினை நாம் கண்டு கொள்ள முடிகிறது. இந்திய மத்திய அரசு பலநூறு மொழிகள் காணப்படும் இந்தியா முழுமைக்கும் இந்தியே (ஹிந்தி) பொது மொழி என்னும் சட்டத்தைக் கொண்டு வந்து இந்தி மொழிக்கல்வியைக் கட்டாயமானதாக அறிவித்தது. இச்சூழலில் அண்ணாத்துரை போன்றவர்களின் தலைமையில் திராவிடநாடு கோரிப் போராட்டம் ஆரம்பித்தது. திராவிட மக்களுக்கென தனியான மொழி, பண்பாடு, கலாசாரங்கள் உண்டு என்றும் எனவே இந்தியாவின் கீழ் இல்லாமல் திராவிட நாடு எனத் தனிநாடு உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் இவர்கள் கருதினர். இத்தகைய சூழலில் வாழ்ந்த பாரதிதாசன் பாடல்களிலும் நாம் திராவிட சார்பைக் கண்டு கொள்ளமுடியும்.

"நான் தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் நாவெல்லாம் வான்தான் என்புகழ்"

என திராவிடனாகப் பிறந்தமைக்காக அவர் பெருமைப்படுகிறார்.

"திராவிடத்தை மீட்பீர் - நம்
செந்தமிழை மீட்பீர்
திராவிடர் ஒன்றாய் - தம்பீ
சேர்ந்துழைக்க வேண்டும்"

என்று திராவிட நாட்டை மீட்க ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு உழைக்க வரும்படி அறைகூவல் விடுத்தார்.

திராவிட மக்களின் அடிமை நிலைக்கும் அவர்களிடம் இருந்த அறியாமை, மூட நம்பிக்கை என்பவற்றுக்கும் ஆசிரியர்களே காரணம் எனக் கருதி அதனைக் கடுமையாக எதிர்த்தார். இவ் எதிர்ப்பு பார்ப்பனர்கள், வட மொழி, அவர்கள் கருத்துக்கள் என மூன்று வகையாக அமைந்தது.

"பார்ப்பான் பால் படியாதீர்
சொற்கு கீழ் படியாதீர்
உம்மை ஏய்க்க
பார்ப்பான் தீதுறப் பார்ப்பான்
கெடுத்து விட பார்ப்பான்
எப்போதும் பார்ப்பான்"

என்னும் பாடல் வரிகளில் பார்ப்பானையும், பாம்பையும் கண்டால் முதலில் பார்ப்பானை அடி என்ற திராவிட இயக்கத் தந்தை இ.வெ.ரா.பெரியாரின் பாதிப்பைக் காணலாம்.

பார்ப்பனர்கள் பேச்சு வழக்கில் இல்லாத வடமொழியைத் தாய் மொழியாகப் போற்றியதும், திராவிட மொழியான தமிழைத் தாழ்ந்தது எனக் கருதியும் பாரதிதாசனை வட மொழிமேல் வெறுப்புக் கொள்ளத் தூண்டியது. வட மொழியில் இருந்து பிறந்ததே தமிழ் எனக் கூறுவது வாய்ப்பந்தல் என்றும், வட மொழியில் வேதம் ஓதுவதும் செக்கு ஆட்டும் இரைச்சல் என்றும், குப்பை கூட்டுகிறவனின் இழிவான பேச்சு என்றும் கண்டிக்கும் கவிஞன் கோவில்களில் வடமொழிகளில் வழிபாடு நடத்துவதையும் எதிர்க்கின்றார்.

"வாயில் இட்டு தொப்பை வளர்க்கும் சதிக்கிடங்கே
கோயில் என்று காதுதரும் கொள்கை தவிர்ப்பவளே
சாணிக்குப் பொட்டிட்டு சாமியென்பார் செய்கைக்கும்
நாணி உறங்கு நகைத்து நீ கண்ணுறங்கு"

என கோயில் வழிபாடும் நிராகரிக்கப்படுகின்ற நிலையைக் காணலாம்.

**சமுதாய சீர்திருத்த உணர்வுகள்**

தமிழ், திராவிடம் சம்பந்தமான கருத்துக்களை வெளிப்படுத்தியதோடு மட்டுமன்றி தமது சமகால சமுகத்தில் காணப்பட்ட முரண்பாடுகள், மூடப்பழக்க வழக்கங்கள் என்பவற்றைக் கண்டித்து அவர் குரல் எழுப்பினார். தமிழ் சமுதாயத்தை முன்னேற விடாமல் தடுக்கின்ற சக்திகளுள் முதன்மையானது சாதிப்பாகுபாடு ஆகும். ஆனால் மனிதனை மனிதன் பிரிக்கும் இச் சாதிப்பாகுபாட்டிற்கு சிலர் தெய்வீக முலாம் பூசியுள்ளனர். பிரம தேவனின் முகத்தில் இருந்து பிராமணனும், தோளில் இருந்து சத்திரியனும், தொப்பூளில் இருந்து வைசிகரும், காலிலிருந்து சூத்திரரும் பிறந்ததாகப் பௌராணிகர்கள் கூறியுள்ளனர். இதனை

"முகத்தில் பிறப்பதும் உண்டோ முட்டாளே
தோளில் பிறப்பதும் உண்டோ தொழும்பனே
இடையில் பிறப்பதும் உண்டோ எருமையே
காலில் பிறப்பதும் உண்டோ கழுதையே
நான்முகன் என்பவன் உளனோ நாயே"

என்று மூடத்தனங்களை இழித்துரைக்கின்றார்.

பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், பெண் அடிமைத்தனம், பொருந்தாமணம் ஆகியவற்றையும் அவர் துணிவோடு சாடினார். மனைவி இறந்தால் ஆண்மகன் திருமணம் செய்யும் அதேவேளை கணவன் இறந்தாலோ சிறுவயதிலேயே பெண் விதவையாக வேண்டி ஏற்பட்டது.

"ஏழு வயதே எழிற்கருங்கண் மலர்
ஒரு தாமரை முகம் ஒரு சிறு மணி இடை
சுவைத்தறியாத சுவைதரும் கனிவாய்
இவற்றை உடைய இளம் பெண் அவள்தான்
கூவத் தெரியா குயிலின் குஞ்சு
தாலி அறுத்து தந்தையின் வீட்டில்
இந்தச் சிறுமி இருந்திடுகின்றாள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என தந்தையின் வீட்டில் விதவை யாகி இருக்கும் ஏழு வயதுச் சிறுமியின் அவலநிலை எடுத்துக் காட்டப்படுகின்றது.

மேலும்

"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்.
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ"

எனக்கேட்டு விதவைகளுக்கு மறு மணம் செய்ய வேண்டியதன் அவசியத்தை யும் வலியுறுத்தினார்.

"விதவை மறுமணத்திற்காகப் பரிந்து பேசும்
பாட்டினை தமிழ்க்கவிதை உலகில் ஏற்றிய
பெருமை பாவேந்தரையே சாரும்"

என பாரதி பித்தன் கூறுவது பொருத் தமானதே. (ஆத்திசூடி இலக்கியம் பக்கம் 94)

சமுதாயத்தில் காணப்படும் பயனற்ற வழக்கங்கள், சாதி சமயப் பூசல்கள், பெண் ணடிமை முதலியன நாட்டைவிட்டு அகல சமதர்மக் கொள்கை ஏற்படுவதே தீர்வாகும் எனக் கவிஞர் கருதியதை பல பாடல்களிலும் காணலாம். இத்தகைய புரட்சிக் கருத்துக்கள் காரணமாகவே அவர் புரட்சிக் கவிஞர் என அழைக்கப்பட்டார். செல்வந்தர்கள், முதலாளி கள் ஆகியோர் ஏழைகளைச் சுரண்டி வாழக் காரணம் ஏழைகளிடம் இருக்கும் பயமே என் றும், ஏழைகள் துணிந்து எதிர்த்தால் இந்நிலை மாறிவிடும் என்றும் அவர் கருதியதை,

"ஓடப்பர் ஆயிருக்கும் ஏழை அப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆயிடுவார் உணரப்பா நீ"

எனும் பாடலில் எடுத்துக்காட்டுகின்றார்.

*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தகவல் தொடர்பும் தகவல் தொடர்புச் சாதனங்களும்

திரு. க. தயாபரன்
ஆரம்பநெறி 2 ஆம் வருடம் B பிரிவு

மனித குலம் தோன்றிய நாளிலிருந்து இரு தனி நபர்களிடையே பல்வேறு வடிவங்களில் தகவல் தொடர்பு நடைபெற்று வந்திருக்கிறது. சைகைகள், மற்றும் படங்களே தகவல் தொடர்பு ஏற்பட்ட காலம் தொடக்கம் நாகரிக காலத்தின் மொழிகள் உருவாகிய பின்பு தகவல்ப் பரிமாற்றம் சிக்கலாக இருக்கவில்லை. தூரத்தில் இருக்கும் ஒருவரோடு தகவல்ப் பரிமாற்றம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டபோது தான் மனித மூளைக்கு சவால் ஏற்பட்டது. தொலைத் தகவல் தொடர்பின் (Tele communication) பரிணாமம் அன்று முளை விட்டது. அரசர்கள் தூதர்களின் மூலமாக மடல் அனுப்பித் தகவல் பரிமாற்றம் செய்த முறைதான் நவீன காலத்தின் அஞ்சல் துறையாக வளர்ச்சி பெற்றது. மனித நாகரிகத்தில் சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டதும் தீயின் பயன் உணர்ந்ததும் முக்கிய திருப்பு முனைகள். ஆனால் மின்சாரக் கண்டுபிடிப்பே புரட்சிகரமான மாற்றங்களிற்கு வித்திட்டது என்பது வரலாறு. இதன் பின்பே தொலைத் தகவல் தொடர்பிலும் புரட்சி பரிணமித்தது.

முதல் மின்சார தந்தி சார்லஸ் வீட்ஸ்டோன், சார்வில்லியம் போன்றோரால் அறிமுகமாக்கப்பட்டதும் இதன் வளர்ச்சியாக முள் ஒருபக்கம் அசைந்தால் புள்ளியொன்றும் (Dot), மறுபக்கம் அசைந்தால் கோடு (Dash) என்றும் ஒவ்வொரு ஆங்கில எழுத்தும் புள்ளி மற்றும் கோடுகள் கலந்த குறியீடுகளால் உணர்த்தப்பட்ட முள் நிறைந்த தந்தியை (Needle Tele graph) மோர்ஸ் 1833 - இல் உருவாக்கினார். அலெக்ஷாண்டர் கிரகாம் பெல் தொலைத் தகவல்த்தொடர்பில் ஒரு மாபெரும் புரட்சிக்கு வித்திட்டார். 1876 மார்ச் 10ல் இவர் தொலைபேசியை உருவாக்கினார். 1878 ஜனவரி 28ல் வைட்தீவின் ஆஸ்போர்சன் இல்லத்தில் விக்டோரியா மகாராணியின் முன்னிலையில் பெல் தனது தொலைபேசியை இயக்கிக் காட்டினார். கடந்த 120 ஆண்டுகளில் தொலைபேசி மூலமான தொலைத் தகவல் தொடர்பு பல புரட்சிகரமான மைல் கற்களைக் கடந்து வந்திருக்கிறது. இரண்டு நபர்களிடையே பயன்படுத்தப்பட்ட தொலைபேசி நாளடைவில் பலரை இணைக்கும். தொலைபேசி இணைப்பகமாக (Telephone Ex.change) பரிணமித்தது. 1879ல் முதல் தொலைபேசி இணைப்பகம் ஏற்பட்டுவிட்டது. இயக்குநர் உதவியில்லாமல் சந்தாதாரர்களே ஒருவருக்கொருவர் நேரிடையாக அழைத்து உரையாடிக் கொள்ளும் தானியங்கித் தொலைபேசி 1891ல் ஆல்மின் பி.ஸ்டரௌஜரால் (Almon B.strovuger) உருவாக்கப்பட்டது. தொலைபேசி, போக்குவரத்து வளர்ந்த இதே காலகட்டத்தில் தந்திப் போக்குவரத்திலும் புரட்சிகர மாற்றங்கள் ஏற்பட்டன. மோர்ச்சு தந்தி முறை வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத் தொலையச்சு (Teleprinting) செய்திப் பரிமாற்ற முறை உருப்பெற்றது. நேரப்பங்கீட்டு முறையில் ஒரே ஜோடிக் கம்பியின் ஐந்து தந்திச் செய்திகள் அனுப்பும் முறைமை எமில் பாடோட்சிஸ்பத்தின் அடிப் படையில் உருவானதே டெலி பிரிண்டர் தொழில்நுட்பம் ஒன்றுக்கு மேற்பட்ட உரை யாடல்களை ஒரே ஜோடிக் கம்பியில் அனுப் பியது போல் ஒரு உரையாடல் நடை பெறும் தொலைபேசி இணைப்புக் கூடத்தில் 12, 24 தந்திச் செய்தித் தொடர்புகளை ஒரே நேரத்தில் ஏற்படுத்தக் கூடிய பல்கூட பேச்சு அலை தந்தி (multichannel Voice Fereguenuy) தந்திப் போக்குவரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. வெளியூர் தொலைபேசி அழைப்பினைப் போன்றே வெளியூருக்கு டயல் செய்து டெலிபிரிண்டரின் மூலம் செய்தி களை அச்சு வடிவில் அனுப்பும் ரெலக்ஸ் (Telex) தொழில்நுட்ப தந்தி மூலம் செய்தி களை ஒரு புதிய பரிணாமமாகப் பரிணமிக் கிறது. நாளடைவில் தகவலை எழுத்து வடி வில் மட்டுமன்றிப் படங்களாகவும் அனுப்ப முடியும் என்று நிரூபிக்கப்பட்டது. ஒரு செய் தித் தாளின் பக்கங்கள் அப்படியே ஒரு நகரத் திலிருந்து இன்னொரு நகரத்துக்கு தொலை பேசிக் கம்பிகள் வழியாக அனுப்பி வைக்கப் பட்டது. இதுவே பெசிமிலி (Fascimile) உள் ளும் தகவல் தொடர்பில் தானியங்கித் தொலைபேசி நிலைய்ங்கள் மாபெரும் மாற் றத்தை ஏற்படுத்திய அதே கால கட்டத்தில் தொலை தூர வெளியூர் தகவல் தொடர்பில் டிராங்க் தொலைபேசி நிலையங்களும் பேச்சு அலைத் தந்திப் பரிமாற்ற முறையும் பெரும் பங்காற்றின.இரண்டு கண்டங்களை இணைக் கும் அட்லாண்டிக் தொலைபேசிக் கேபிள் கடலுக்கடியில் 1956ல் நிறுவப்பட்டது. தரைக்கடியில் பதிக்கப்பட்ட இணையக் கம்பி வடங்கள் (Co - oxiai cables) மூலமாக ஒரே நேரத்தில் 2700 உரையாடல்களை நிகழ்த்த முடியும்.இருபெரும் நகரங்களிற் கிடையேயும் பெருகிவந்த தகவல்ப் பரிமாற்றத் தேவையை கோ - ஆக்ஸியல் கேபிள்கள் பெருமளவு தீர்ந்தன. கம்பங்களின் வழியாகச் செல்லும் கம்பிகளில் ஏற்பட்ட இடையூறுகள் தரையிடக் கம்பி வடங்களின் மூலம் பெருமளவு தீர்க்கப் பட்டன.இதனை அடுத்த கட்டமே நுண்ணலை (microwave) தகவல்த் தொடர்பு தகவல் பரி மாற்றத்தின் பரிணாம வளர்ச்சியில் கம்பியில் லாத் தொடர்பு முறை ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லாகும்.1957 ஆண்டில் செயற்கைக் கோள் தகவல்தொடர்பு (Satellites Communication) பரிணமித்தது. தகவல் தொடர்புப் புரட்சியில் அடுத்த முக்கிய கட்டம் டிஜிற்ரல் தகவல் தொடர்பு (Digital Commu- nication) எந்தவொரு தகவல்களையும் உண்டு / இல்லை, ஒன்று /பூச்சியம் இன்னும் துல்லியமாகக் கூறுவதெனில் அதிக மின் னோட்டம், குறைந்த மின்னோட்டம் ஆகிய இருநிலைகளில் பலவிதமான சேர்க்கை களில் (Combinatiens of onesand - zemose) சொல்லமுடியும் என்பதுதான் டிஜிற்ரல் தொழில்நுட்பத்தின் அடிப்படைக் கணனிப் பொறி இயலின் அடிப்படைத் தத்துவமும் டிஜிட்டல் தொழில்நுட்பமே - ஒருபுறம் கண னிப் பொறித்துறையில் மாபெரும் மாற்றங்கள் நடக்க மறுபடியும் தொலை தகவல் தொடர் பிலும் டிஜிற்ல் தொழில்நுட்பம் தன் ஆதிக் கத்தை நிலைநாட்டத் தொடங்கியது. ஸ்ட் ரௌஜர் எனப்படும் மெக்கானிக்கல் தானி யங்கித் தொலைபேசி நிலையங்களிற்குப் பதில் சற்று மேம்பட்ட கிராஸ் பார் என்னும் எலேக்ட்ரோ மெக்கானிக்கல் தொலைபேசி நிலையங்களும் அதன் பின் மின்னணுத் தொலைபேசி நிலையங்களும் நடை முறைக்கு வந்தன.

தொலைபேசி நிலையங்கள் டிஜிற்ரல் தொழில்நுட்பத்துக்கு மாறியது. அதே போல கட்டத்தில் தொலைதூரத் தகவல் தொடர்புக்கான ஊடகங்களிலும் அவற்றில் அனுப்பப்பட்ட தகவல் வடிவங்களிலும் பெரு மளவு மாற்றங்கள் ஏற்பட்டன. பேச்சு அலை களை 0, 1 அகியவற்றின் தொகுப்புகளாலான அனுப்பிவைக்கும் பி.சி.எம்.(P.cm) (pulse codem odulation) தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டது. அதன் பிறகு டிஜிற்ரல் குறியீடுகளை ஒளிக் குறியீடுகளாய் மாற்றி கண்ணா ஒளியிழை கேபிள்களில் (Optical tiger cables) அனுப்பும் தொழில்நுட்பம் கண்டறியப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்தில் எங்கோ சுற்றிக் கொண்டிருப்பவை அழைக்கும் போஜிங் (Puging) காரில் சென்றுகொண்டிருக்கும் போது தொலைபேசியில் உரையாட நடமாடும் தொலைபேசி. (mobilephone) தொலை பேசியில் பேசிக்கொண்டிருக்கும் வசதி (Vide conferecing) நம் வீட்டில் இல்லாவிட்டாலும் தொலைபேசி அழைத்தவர் தரும் செய்திகளை அவரது குரலிலே கேட்டுப் பதிவு செய்து கொண்டு நமக்காகப் பதில் சொல்லக்கூடிய தொலைபேசிகள் (Voicemail) நவீன தகவல் தொடர்பு வளர்ச்சியில் இன்று பரபரப்பாகப் பேசப்படும் இன்டர்நெட் (Internet) தொலைபேசித் தொடர்பும் கணிப் பொறி தொடர்பும் இணைந்த ஐ எஸ் டி என் ISDN - Inter. rated services - Digital - Net work தொழில்நுட்பம் போன்றவை நவீன தகவல் தொடர்பின் ஆச்சரியப் புதுமைகள் சில.

*

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக

"கலைமலர் சிறக்க வாழ்த்துகின்றோம்."



சாரங்கா நகை மாடம்



இல. 157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 – 222 2480, 021– 222 6059
Fax : 6972

உங்களது பழைய நகைகளைக் கொடுத்து உடனுக்குடன் புதுப் பொலிவுடன் திகழ அசல் 22 கரட் தங்க நகைகளைத் தெரிவு செய்ய இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்.

கிளை:
சாரங்கன் நகைமாடம்
இல. 45,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 – 222 6059

"கலைமலர் சஞ்சிகைக்கு இதய பூர்வமான வாழ்த்துக்கள்."



வீ.எம்.கே.
ஜுவல்லரி





ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

அசல் 22 கரட் தங்க நகைகளைத் தெரிவு செய்ய இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்.

105. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பேசி: 060 – 2212989
0777 – 723021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியத்தின் தந்தை லியானாடோ டாவின்ஸி

திரு.பி. இரட்ணராஜ்
ஆரம்பநெறி 2 ஆம் வருடம் A பிரிவு



கலை - அறிவியல் இந்த இரண்டிலும் உலகப் புகழ் வாய்ந்தவர் லியானா டோடாவின்சி

உலகப் பிரசித்தம் "வாய்ந்த மோனா லிசா" ஓவியத்தை வரைந்தவரும் இவரே. கி. பி. 1452 இல் "மோனலிசா" என்ற இத்தாலிய நகரத்தின் அருகிலுள்ள "வின்சி" எனும் கிராமத்தில் லியானாடோ பிறந்தார். பிரபல வழக்கறிஞரான சேர் பியரோ எண் டோனியோ டாவின்ஸி இவரின் தந்தை. தாயாரின் பெயர் கெதரீனா.

ஓவியக்கலை தொடர்பான நுணுக்கமான அறிவாற்றல் லியானாடோ டாவின்சியிடம் பெருகிக் காணப்பட்டது. மிக இள வயதிலேயே காணப்பட்ட இத்திறமையைப் புரிந்துகொண்டார் டாவின்ஸியின் தந்தை. தனது மகன் பெரும் ஓவியராகத் தேசமெங்கும் புகழ்பரப்ப வேண்டும் என ஆவல் கொண்டார். இக்காலத்தில் சிறந்து விளங்கிய ஓவியக்கலை ஞானியான என்றியா டெல் எவரோகியா என்பவரிடம் டாவின்ஸியை ஓவியம் பயில ஒப்படைத்தார்.

இந்தக் காலகட்டத்தில் ப்ளோரன்டைன் நகரில் வாழ்ந்த புகழ்பெற்ற ஓவியக் கலைஞரான சென்ரோ, பொடிஷெலி ஆகியோரின் நட்பு டாவின்ஸிக்குக் கிடைத்தது.தனது 26வது வயதில் ப்ளோரன்ஸ் நகரத்தில் சொந்தமாக கலை நிலைய மொன்றை ஆரம்பித்து அதன் மூலம் ஓவியக் கலையில் பிரபல்யமடையத் தொடங்கினார்.

டெல் எவரோகியோவிடம் ஓவியக் கலை நிபுணத்துவத்தைக் கண்டறிந்து கொண்டு டாவின்ஸி தனது 30ஆவது வயதில் மிலான் என்ற நகரத்துக்குச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள புனித மரியா பெல்கிறோஸ் டொமியன் கன்னியர் விடுதியில் " இயேசு கிறிஸ்துவின் இராப் போசனம்" எனும் பிரபல ஓவியத்தை வரைந்தார். 28 அடி நீளம் கொண்ட ஓவியத்தை வரைந்து முடிக்க டாவின்ஸிக்கு 3 வருடங்கள் தேவைப்பட்டன.

கி.பி.1500 இல் பிரான்ஸ் நாடு மிலானுடன் போர் ஒன்றை ஆரம்பித்தது. போரின் முடிவில் மிலான் பிரான்ஸிடம் வீழ்ச்சி அடைந்தது.இந்நிலையில் டாவின்ஸி மீண்டும் ப்ளோரன்டைன் நகருக்குச் சென்றார்.

அங்கிருந்தவாறே 1503ஆம் ஆண்டு மொனாலிஸா ஓவியத்தை வரைய ஆரம்பித்தார். இன்றும் மங்காமல் வரலாற்றில் இடம் பிடித்திருக்கும் மொனாலிஸா ஓவியத்தை வரைந்து முடிப்பதற்கு நான்கு வருடங்கள் செலவாகின.

பிரான்ஸிக்கோவா-கியோ- கொண்டா என்பவரின் மூன்றாவது மனைவியின் உருவம் தான் மொனாலிஸா. இருந்தும் மொனாலிஸா ஓவியம் டாவின்ஸியுடைய உருவம்தான் என்றும் சிலர் கருதுகின்றனர். இதற்குக் காரணம் மொனாலிஸா - டாவின்ஸி ஆகிய இருவரின் முக அமைப்பும் ஒரே மாதிரியாக இருந்ததுதான்.

மிக விரைவாக ஓவியர் டாவின்சியின் பெயரும் அவர் வரைந்த ஓவியமும் உலகம் முழுக்க பிரபலம் அடையத் தொடங்கின. டாவின்சியின் திறமையைப் பாராட்டிக் கௌரவிக்க பிரான்ஸ் அரசாங்கம் அவருக்குச் சிறப்பு அழைப்பொன்றை விடுத்தது. டாவின்ஸி பிரான்சுக்குச் செல்லும்போது தன்னுடன் ஓவியத்தையும் எடுத்துச் சென்றார்.

இதன் காரணமாகத்தான் மோனாலிஸா ஓவியம் இன்று பிரபல்யமடைந்தது. இன்று பிரான்ஸ் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

ஓவியக்கலை மூலம் உலக அறிமுகத்தை டாவின்ஸி பெற்றிருந்த போதிலும் அவர் இசை, மேடை நாடகம் என்பவற்றிலும் அதிக திறமை பெற்று விளங்கினார். இயற்கையின் வனப்புக்களைப் பற்றி நிறையப் புத்தகங்களை எழுதினார். ஆனால் அவை அச்சிடப்படவில்லை.

இரசாயனவியல்; தாவரவியல், விலங்கியல், தொழில்நுட்பம் போன்ற துறைகளிலும் பல்வேறு பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டார். மனித உடலின் உறுப்புக்களை வெட்டி சோதனைஞம் செய்து பார்த்தார்.

புதிய - நவீன கண்டுபிடிப்புக்களின் தந்தை என்றும் டாவின்ஸியை அழைக்கின்றார்கள். காற்றாடியுடன் கூடிய விமானம், ஹெலிகொப்டர், யுத்த டாங்கி, நீர்மூழ்கிக் கப்பல் போன்றவை டாவின்ஸியின் கற்பனையில் உதித்தவைதான்.

டாவின்ஸியின் கற்பனையில் உதித்த இவற்றைப் பத்து வருடங்கள் கழித்தே நடைமுறைக்குச்சாத்தியமாக வடிவமைத்தார்கள். இன்றைய நவீன யுத்த தளபாடங்கள் கூட டாவின்ஸியின் யுகத்துச் சிந்தனைகள்தான்.

மொனாலிஸா ஓவியத்திற்கு உயிரூட்டிய மாமனிதர் லியனாடோடாவின்ஸியின் உயிர் கி.பி. 1519 மே மாதம் இரண்டாம் திகதி இவ்வுலகை விட்டுப்பிரிந்தது. *

**எண்ணென்ப வேளை யெழுத்தென்ப விவ்விரண்டுங்**
**கண்ணென்ப வாழு முயிர்க்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் மாற்றமும் தகவற் புரட்சியின் வருகையும்

திருமதி. வி. அருள்பிரதாசன்
ஆரம்பக்கல்வி 2ம் வருடம் A - பிரிவு

தற்காலத்தில் பணத்தைவிட தகவல்களே (information) முக்கியமானதாக அமையும். தொழிற்சாலைகளின் முக்கியத்துவம் குறைகிறது. தகவல் வலைப்பின்னலே (Net work) தற்கால தொழிற்சாலைகளுக்கு ஈடாக முக்கியம் பெறும்.

பணமுதலீட்டுக்குள் அறிவு முதலீடும் (Inter lectual capital) கைத்தொழிலாளர்களுக்குப் பதிலாக அறிவுத் தொழிலாளரும், (knowledge worker) எதிர்கால சமுதாயத்தில் முக்கியத்துவம் பெறுவர்.

முதலாளித்துவ வர்க்கம்தான் இன்றைய சமுதாயத்தின் அதிகார மையமாகக் காணப்படுகின்றது. ஆனால் எதிர்கால சமுதாயத்தின் அதிகார மையம் அறிவு வர்க்கத்தினரிடமும் போய்ச் சேர்ந்துவிடும்.

இன்று சமுதாயங்களிடையேயும்,நாடுகளிலும் காணப்படும் அதிமுக்கிய பிரச்சினை வருமான ஏற்றத்தாழ்வு. ஆனால் எதிர் காலத்தில் ஏழை,பணக்காரன் என்ற வேறுபாட்டைவிட தகவல் உள்ளோர், தகவல் அற்றோர் என்ற வேறுபாடே முக்கியமாகக் காணப்படும்.

முதலாளித்துவ காலனித்துவம் மாற்றமடைந்து தகவற் காலனித்துவம் உருவாகலாம்.(Information Imperialism or Electronic Colonization) இங்கு அரசுரிமை அல்லது சுதந்திரம் என்பன தகவற் சுதந்திரத்தையே குறிக்கும். இதுவே எதிர்கால ஆட்சி முறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய உலக வர்த்தகம் பணத்தை வைத்து நடைபெறவில்லை. பணம் பற்றிய தகவல்களை வைத்தே நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் ஒரு சமுதாயத்தின் பலமும், பலவீனமும் பணம் அல்ல. தகவல்களே என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும்.

எதிர்காலத்தில் பணவங்கிகள் செயற்பட்டாலும் தகவல் வங்கிகளே முக்கியம் பெறும்.

இத்தகைய மாற்றங்களுக்குக் காரணமாக தகவல் என்னும் சொல் Information என்னும் ஆங்கிலப் பதத்திற்கு நிகராகப் பயன்படுத்தப்படுகின்றது. அறிவு என்பது மனித மூளைக்குள் தகவல் காணப்படும் அதி உயர் வடிவமாகும். தகவலானது எழுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கள், இலக்கங்கள், சொற்கள், வசனங்களி னால் கட்டமைக்கப்பட்ட தொகுதி எனலாம்.

கணனிகளின் தகவல்கள் Data வாகக் காணப்படுகின்றது. கணனிக்குள் தகவல்கள் தகவலாகப் பேணப்படுவதில்லை. அது 0 அல்லது 1 அதாவது அழுத்தம் இல்லாத நிலை மொழிக்கு எழுத்துப் போல தகவல் களுக்கு Data ஒரு வடிவம். ஒரு கணனியில் இருந்து இன்னொரு கணனிக்கு Data எனும் வடிவில் தகவல் அனுப்பப்படுகின்றது.

மனிதனிலிருந்து மனிதனுக்கு தகவல் அனுப்பப்படும் பொழுது அத்தகவலானது வெவ்வேறு மனிதர்களில் வெவ்வேறு அறி வினை ஏற்படுத்தலாம். இதன் வேகம் 100 வருடகால இடைவெளியில் பல மடங்கு அதி கரித்துவிட்டது.இவ்வாறுஅதிகரிப்பானது எதிர் காலத்தில் பலசிக்கல்களையும் கொண்டு வரலாம்.

இத்தகைய தகவற் புரட்சியினால் மிக வும் பாதிக்கப்படப் போகும் நாடுகள் நவீன இலத்திரனியல் வசதிகளும் கல்வி அறிவும் குறைந்த நாடுகளே. *

**கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையார் கல்லா தவர்**

"பல்கலை நிறைந்த
மலராக பாரெங்கும்
பரவ வாழ்த்துக்கள்."

சைவமும் தமிழும் செழித்தோங்கும்
யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டது

உங்கள் உணவுத் தேவையைப்
பூர்த்தி செய்ய உடனே விஜயம்
செய்யுங்கள்.

ஸ்ரீவாணி விலாஸ்
சைவ உணவகம்

இல:- 372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி - 071 - 2370211

இல.144, கண்டி வீதி,
வவுனியா.
தொலைபேசி 024 - 4589777

"அறிவுலகின் திறவு
கோலாய் கலைமலர்
திகழட்டும்."





*Karan*
Proprietor

கரன் வாச் & ரேடியோ
KARAN WATCH & RADIO
*Sales & Repairs*
*T.V.Deck, Radio, Wall Clock,*
*Wrist Watch, Gift Items*

இல. 91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P :- 021 - 222 6807
Mobile : 0777 567785



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆங்கிலக்கல்வியின் இன்றியமையாமை தமிழ் மொழியில் ஏற்படுத்திய தாக்கங்கள்

செல்வி பொ. வத்சலா,
ஆரம்ப நெறி 2 ஆம் வருடம், D பிரிவு.

இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக ஆங்கிலம் உலக மொழியாக அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "உலகமயமாதல்" என்ற எண்ணக் கருவுக்கமைய நவீன தொடர்பாடல் விருத்தியின் காரணமாக ஆங்கிலக்கல்வி அத்தியாவசியமான ஒரு ஊடகமாகவே கருதப்படுகிறது. இலங்கை போன்ற கீழைத் தேச நாடுகள் ஆங்கில காலனித்துவ ஆட்சியின் கீழ் பல நூற்றாண்டுகளாக இருந்துள்ளமையினால் அந்நாடுகளில் எல்லாம் ஆங்கில மொழியும் அவர்தம் பண்பாடுகளும் இலகுவாகக் காலூன்றின. இவ்வாறாக ஏற்பட்ட ஆங்கில மொழிப்பரம்பலினால் தமிழ் மொழி தன் தனித்துவத்தையும், கட்டுமானத்தையும் இழந்து இருப்பதும் இங்கு நோக்கப்படவேண்டியதொரு முக்கிய அம்சமாகும்.

உலகில் இன்று பணத்தைவிட தகவல் பரிமாற்றத்திற்கே முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. "உலகம் கிராம மயமாதல்" என்பதற்கிணங்க உலகின் எந்த மூலையில் உள்ள ஒருவருடனும் செய்தியைப் பரிமாற்றிக் கொள்கின்ற வாய்ப்பு தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சி என்றே கருதவேண்டும். இதன் அடிப்படையில் உலக சந்தையிலும் ஆங்கிலமே முக்கிய இடத்தினைவகிக்கின்றது. இதனால்தான் ஆங்கிலத்தினை "வர்த்தக மொழி" என்றும் அழைக்கின்றனர். கணனி, இணையத்தின் வருகையும் உலகில் தகவல் புரட்சியில் ஒரு மைல் கல்லாகவே அமைந்துள்ளது. ஆதலால் தகவல் பரிமாற்றமும், ஆங்கில மொழியும் இன்றைய உலக இயக்க சக்திகளாக உள்ளனவென்றால் அது மிகையல்ல. நாமும் உலகத்துடன் ஒட்டியோட ஆங்கிலம் கற்பது அத்தியாவசியமாகின்றது.

இலங்கையில் தாய்மொழியில் உயர்கல்வியைப் பெறுவது சாத்தியமற்றதொரு விடயமாகும். ஏனெனில் உயர் கல்விக்குத் தேவையான ஆய்வுக் கட்டுரைகள், உலக அறிஞர் தம் கருத்துக்கள், உலக நாடுகளின் வரலாறுகள் எனப் பெரும்பாலான நூல்கள் யாவும் ஆங்கில மொழியிலே தான் வெளியாகின்றன. நம் நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டவர்கள் கூட சர்வதேசப் பாடசாலைகளில் தமது பிள்ளைகள் கற்பதையே விரும்புகின்றனர். இவை மட்டுமன்றி ஒரு உயர்ந்த தொழில் வாய்ப்பினைப் பெறுவதற்கு ஆங்கில மொழியறிவு அடிப்படையானதாகிறது. இலங்கையில் 18ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பு ஆங்கில மொழியின் செல்வாக்கு இருப்பினும் பிரித்தானியரின் வருகையுடன் முழுமையாக ஆங்கிலம் தாய்மொழியாகவே எம்மவர் மத்தியில் புகுத்தப்பட்டது. காலப் போக்கில் ஆங்கில மொழியும் அவர்தம் கலாசாரமும் எம்மவரால் விரும்பிப் பின்பற்றப்பட்டு வருகின்றது. தாய் மொழியாகிய தமிழ்மொழியைப் பேசுவதைவிட ஆங்கிலத்தினைப் பிரயோகிப்பதனையே சமுகம் விரும்பி ஏற்கிறது. சாதாரண பேச்சு வழக்கில் கூட ஆங்கிலமொழியின் செல்வாக்கைக் காணமுடியும். உதாரணமாக "ஸ்கூலுக்குப் போகணும். லேட்டாப் போச்சு" இவ்வாறு கார், சினிமா, கோப்பி, கொக்கோ, சீமெந்து, தார், பென்சில், சைக்கிள் , பொத்தான் என தமிழ் போலவே இன்று பயன்படுத்தப்பட்டு வருவதனைப் பார்க்கலாம். இவ்வாறான நிலமை ஏற்படுவதற்கு வர்த்தகம் முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. புதிய பொருள்கள், கருவிகளின் பெயர்கள் முதலில் ஆங்கிலத்திலேயே வெளியாகின்றன. அப்பெயர்களை நாமும் அவ்வாறே உள்வாங்க வேண்டியுள்ளது. அவை காலப்போக்கில் தமிழ்ப் பெயர் போலவே எம்மவரால் பேசப்பட்டு வருகின்றது.

தமிழ் பழமையான மொழிகளில் ஒன்றாகும். ஈராயிரம் வருடகால இலக்கிய வரலாற்றினையும், காத்திரமான இலக்கண வரம்புகளையும் உடைய ஒரு செழுமையான மொழியாகும். தமிழ்மொழியில் காலத்துக்குக் காலம் அந்நியர்களின் படையெடுப்பு, வர்த்தகம், போக்குவரத்து போன்ற பல்வேறு காரணங்களினால் ஏனைய மொழிகளின் செல்வாக்கினையும் காணமுடிகிறது. இதன் அடிப்படையில் இன்று தமிழ் மொழியில் ஆங்கில மொழியின் செல்வாக்கு மிதமிஞ்சிக் காணப்படுகிறது. பேச்சு வழக்கில் மட்டுமல்லாது இலக்கண வரம்புகளையே மீறுகின்ற அளவில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தைக் காணலாம். எடுத்துக்காட்டாக தமிழில் உள்ள இலக்கண நூலாகிய நன்னூலில் மொழி முதனிலையாகக் குறிப்பிட்ட எழுத்துக்களே இடம் பெறும் என்றும், ல, ற ,ர இவ்வாறான எழுத்துக்கள் இடம்பெறமாட்டாது என்றும் குறிப்பிட்டார். ஆனால் ஆங்கில மொழிக் கலப்பினால் நன்னூலாரினால் முன் மொழியப்படாத எழுத்துக்கள் சாதாரணமாகவே மொழி முதனிலையாக அமைவதை நோக்கலாம். உதாரணமாக லட்டு, ரவி, றஞ்சன் எனப் பலவற்றைக் கூறலாம். இவ்வாறு ஆங்கில மொழி தமிழ்மொழி இலக்கணத்திலே மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளமையானது தமிழ் மொழியின் கட்டுமானத்திலேயே பெரும் பாதிப்பினை ஏற்படுத்திவிடுகிறது.

எனவே உலக மொழியாக விளங்குகின்ற ஆங்கில மொழியை எம்மவர் கற்பதனால் தவறு ஏதும் நேர்ந்துவிடவில்லை. "உலகம் இன்று உள்ளங்கையில்" என்பதற்கு ஆங்கில அறிவு அத்தியாவசியமாகிறது. எனினும் தமிழர்களாகப் பிறந்த நாம் எமது தாய்மொழியாகிய தமிழ் மொழியின் தனித்துவத்தையும், கட்டுமானத்தினையும் பேணுவது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.அத்தோடு தமிழ் மொழியில் பற்றுள்ளவர்களாக, தமிழை விரும்பிப் படிப்பவர்களாகவும் திகழ வேண்டும். தமிழில் சாகாத வரம் பெற்ற இலக்கியங்கள் இன்னும் எழவேண்டும். உலகில் தமிழர்கள் தலை நிமிர தமிழ் மொழியை வாழ வைக்க வேண்டும். *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமையை விஞ்சும் பழமையான "பூமராங்"

திரு.லோ. ஸ்ரனிஸ்லாஸ்
ஆரம்பக்கல்வி 2 ஆம் வருடம் B பிரிவு

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்பதற்கிணங்க புதுமைகொண்டு சிந்தனைச் சிறகினை விரித்து உலகம் தனிவழியில் சென்று கொண்டிருக்கும் இக்காலத்திலும், மனித நாகரிகத்தின் ஆரம்ப நிலையில் உள்ள பழங்குடியினரும் தமக்கெனத் தனித்துவமான முறையில் வாழ்ந்து வருகின்றனர்.அவர்களில் புஸ்மன்கள், பிக்மீஸ்கள், அபோறிஜினிஸ், எஸ்கிமோவர் எனும் பழங்குடியினர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்.

இவர்கள் உணவு சேகரித்து, வேட்டையாடி உண்பவர்களாகக் காணப்படுகின்றனர். ஆற்று மீன்கள், காட்டுப் பறவைகள், முட்டைகள், இலைகள் குழைகள், காய்கனிகள், தேன், கிழங்குகள், போன்றவற்றைச் சேகரித்து உண்பவர்களாகவும் விளங்குகின்றனர். அத்துடன் பண்டைய ஆயுதங்களான வில்,அம்பு, ஈட்டி போன்றவற்றின் உதவியுடன் வேட்டையாடுகின்றனர். நிலையற்ற உறைவிடம் கொண்ட இவர்களது வாழ்வில் பஞ்சம், பசி, வளம், இன்பம், துன்பம் என்பன மாறி மாறி வருகின்றன.

இப்பழங்குடியினரின் கலகாரிப் பிரதேசத்தில் வாழ்கின்ற புஸ்மன்கள் அல்லது பற்றையர்கள் என அழைக்கப்படும் குழுவினர் குறிப்பிடக்கூடியவர்கள். பாலைவனப் பிரதேசத்தில் வாழும் இவர்கள் கரிய தலைமயிர், மஞ்சள் நிறத் தோல், சரிந்த கண்கள் போன்ற பௌதிகச் சூழலுக் கேற்ற உடலமைப்பினைக் கொண்டுள்ளனர். ஆண்கள் வேட்டையாடுகின்றவர்களாகவும், பெண்கள் காய் கனி தேடுவோராகவும் உள்ளனர்.

புஸ்மன்கள் மிருகங்களையும், உணவையும் தேடி ஒவ்வொரு இடமாக அலைவார்கள். வில், நிலம் கிண்டும் தடி போன்ற ஆயுதங்களுடன் பாத்திரங்களாகத் தீக்கோழி முட்டை ஓடுகளைப் பயன்படுத்துகின்றனர். வரட்சி தொடங்கியதும் கழுதைப் புலி, கோவேறு கழுதை, வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி,கழுதை, ஓநாய், போன்ற விலங்குகள் ஓடிவிடும். இக்காலத்தில் இவர்களின் சீவியம் கடினமாக இருக்கும். இதனால் இவர்கள் எறும்பினையும் உணவாகக் கொள்வார்கள். குகைகள், பொந்துகள், மரக்கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைகளால் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசைகளில் இவர்கள் வசிக்கின்றனர்.

மனித வரலாற்றின் ஆரம்பத்தில் இன்றும் இருக்கும் பழங்குடியினரில் அடுத்ததாக கொங்கோ வடிநிலத்தில் வாழ்கின்ற பிக்மீஸ்கள் அல்லது குள்ளர்கள் என அழைக்கப்படும் இனத்தவரைக் குறிப்பிடலாம். ஆபிரிக்காவின் கொங்கோ நதிப்பிரதேசத்தில் வாழும் இவர்கள் குள்ளர்களாக உள்ளனர். நீர் நிறைந்த பிரதேசமாதலால் தாவரங்கள், பிராணிகள் நிறைந்து உள்ளன. இதனால் உணவு இவர்களுக்கு எளிதில் கிடைக்கிறது. இவர்கள் சுறுசுறுப்பு அற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிக்மீஸ்கள் வேட்டையாடுவதுடன் காய், கனிகள், கிழங்குகள், தேன், போன்றவற்றைச் சேகரித்து உண்பார்கள். இயல்பிலேயே சோம்பேறித்தனம் கொண்ட இவர்கள் மிருகங்களையும், பறவைகளையும் போல சத்தமிட்டு அவற்றினை வரவழைத்து வேட்டையாடுவதில் வல்லவர்கள். ஈட்டி, வில், அம்பு, ஊது குழல் என்பனவற்றுடன் குள்ளர்களான இவர்கள் பெரிய விலங்குகளைக் கொல்ல விசம் தடவிய அம்புகளையும் பயன்படுத்துவர். இவர்கள் நிரந்தர வீடின்றி காட்டுத் தடிகளால் அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்கின்றனர்.

பழமையில் விந்தை கொண்ட ஆதிக் குடிகளாக அவுஸ்ரேலியாவின் வரண்ட வடபகுதியில் வாழும் அபோறிஜினிஸ் அல்லது ஆதிவாசிகள் என அழைக்கப்படும் இனத்தவரைக் குறிப்பிடலாம். இவர்கள் அவுஸ்ரேலியாவின் சுதேச மக்களாவர். இவர்கள் வேட்டையாடுவோராகவும், உணவு சேகரிப்போராகவும் உள்ளனர். மட்பாண்டங்கள் வைத்திருக்காத இவர்கள் நாய் வளர்க்கின்றனர்.

அபோறிஜினிஸ் மக்கள் வேட்டையாடுவதற்கு ஈட்டியுடன் " பூமராங்" என்ற வளைதடியினையும் பயன்படுத்துகின்றனர். இந்தப் பூமராங் என்ற ஆயுதம் ஒரு இலக்கைத் தாக்கி விட்டு எறிந்தவன் கைக்குத் திரும்பி வரும் விந்தை மிக்க ஒரு வளைதடியாகும். இவர்கள் வேட்டையாடும் பிரதானமான விலங்கு கங்காருவாகும். உணவு குறைவாகப் பெறும் இவர்கள் தீக்கோழி முட்டை, முதலைமுட்டை, பொற்புழு, தத்துக்கிளி, சில் வண்டு, கூடில்லா நத்தை போன்றவற்றையும் சேகரித்துச் சாப்பிடுவார்கள். இவர்களிடம் வீடு இல்லை. அத்துடன் உடையென்று கூறக் கூடிய எதுவும் இல்லை.

ஆட்டிக் பிரதேசத்தில் வாழும் எஸ்கிமோவர் எனும் பழங்குடியினர் ஓரளவு வளர்ச்சி அடைந்தவர்களாவர். துருவப் பிரதேசத்தில் வாழும் இவர்கள் குளிர் தாங்கக் கூடிய ஆடைகளை அணிகின்றனர்.

துருவக் கரடிகளையும், மான்களையும் வேட்டையாடும் இம்மக்கள் துப்பாக்கிகளை வேட்டை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். சில்மீன்களை இவர்கள் ஊசியால் குத்திப் பிடிக்கின்றனர். இவர்கள் அமைத்த வாழ்விடங்கள் "இக்ளு" குடிசைகள் என அழைக்கப்படுகின்றன.

மேலும் பூர்வீகக் குடிகள் பற்றிக் குறிப்பிடும்போது இலங்கையில் வாழ்கின்ற வேடுவர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவர்கள் வேட்டையாடி காய்கனி சேகரிப்பதுடன் சேனைப் பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளனர். போர்ணியோவில் வாழ்கின்ற பியூனான்கள் என்ற ஆதிக்குடிகள் வேட்டையாடி வாழ்ந்து வருகின்றனர். தென்னமெரிக்காவிலும், றெறாடெல்பியூகோ தீவில் வாழ்கின்ற யக்கான்ஸ் என்ற ஆதிக்குடிகளும், அமேசன் காடுகளில் வாழும் சுதேச இந்தியர்களும் வேட்டையாடியும் காய்கனி சேகரித்தும் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மனித நாகரிகம் அண்ட வெளி சென்று அகிலமெல்லாம் சுருங்கி வாழ்கின்ற இந்த நவீன காலத்திலும் பழமை கொண்ட பூர்வீகக் குடிகள் வனப்புடன் வாழ்ந்து வருகின்றனர். கலகாரி, கொங்கோ, அவுஸ்ரேலியா, ஆட்டிக், தென் அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் இவர்கள் உள்ளனர். இன்றும் புதுமைகொண்ட ஆயுதமாக பழமை யின் விந்தையாக , புதுமையுடன் போட்டி கொண்ட தாக அவுஸ்ரேலியாவின் ஆதிவாசி கள் பயன்படுத்தும் " பூமராங்" பழமையின் புதுமையாக விளங்குகின்றது. *

உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

"கலைமலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்."

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு
வரைக்குமான பாடப் புத்தகங்களும்,



அப்பியாசப் புத்தகங்களும், மற்றும் பாடசாலை
உபகரணங்களும் நியாயமான விலையில் யாழ்
நகரின் மத்தியில் பெற்றுக்கொள்ள ஒரே நிறுவனம்,

இலங்கை, இந்திய சஞ்சிகைகள், மற்றும் யாழ்ப்பாண
சகல பத்திரிகைகளினதும் பிரதான முகவர்களும் இவர்களே!

கல்வித்துறை சார்ந்த அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும்
நூல் நிலையங்கள் பிரதேச சபைகள், பொது ஸ்தாபனங்கள் தங்கள

தேவைகளை ஒரே இடத்தில் பூர்த்திசெய்ய
யாழ்நகரின் மத்தியில் நாட வேண்டிய நல்லதோர் நூலகம்



**பூபாலசிங்கம் புத்தகசாலை**



இல. 4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பேசி :- 021 -222 6693



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதராகும் அன்னை திரேசா

திருமதி பு. சிவகுமாரன்
ஆரம்பக்கல்வி –2ஆம் வருடம் D பிரிவு

கருப்பையில் தோன்றுவதல்ல தாய்மை என்ற உண்மையை உலகுக்குக் காட்டி பல இலட்சம் குழந்தைகளுக்குத் தாயான அன்னை திரேசா அம்மையார் புனிதராகிறார்.

அன்னையின் அற்புதங்களை அங்கீ கரிக்கும் வகையில் அவருக்கு புனிதர் பட்டம் வழங்க வத்திகான் நகரில் உள்ள கத்தோ லிக்க தலைமைப்பீடம் முடிவு செய்துள்ளது. கடந்த 19.11.2003 வத்திகானில் இவர் தன் வாழ்வில் நிகழ்த்திய அற்புதங்களை அங்கீகரிக்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் அன்னை திரேசாவிடம் இருந்து அவர் வாழ்ந்த காலத்தில் இந்தி யாவில் எடுத்து வைத்திருந்த இரத்தத் துளி களைப் போப்பாண்டவர் 2ம் ஜோன் போலி டம் ஒப்படைக்கப்பட்டது. சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 2 இலட்சத்திற்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிகள் ஆறு மொழிகளில் வர்ணனை செய்யப்பட்டது. அன் னையின் வாழ்க்கைக் குறிப்பையும், அவர் வாழ்வின் குறியையும் பாருங்கள்.

Agnes Gonxha Bojaxhio என்ற பெயருடைய அன்னை திரேசா 27 ஆவணி 1910 இல் மாக்கெடோணியாவிலுள்ள Skopje இல் பிறந்தார். இவரின் தந்தையார் ஒரு கட் டிட நிபுணத்துவராக இருந்தமையால் ஓரளவு செழிப்புடன் வாழ்ந்து வந்தார்.

அக்னஸ் தனது 18 ஆவது வயதில் கன்னியாஸ்திரியாக சேவை செய்ய முடிவு எடுத்து Lreland இல் உள்ள Loreto கன் னியாஸ்திரி மடத்தில் சேர்ந்தார்.

1931ஆம் ஆண்டு Avila நகரத்தைச் சேர்ந்த புனித திரேசாவின் ஞாபகார்த்தமாக இவருக்கு "திரேசா" என்ற பெயர் சூட்டப்பட்டது.

அன்னை திரேசா Publin, Parjeeling நகரங்களில் தனது கன்னியாஸ்திரிப் படிப்பை முடித்து 1937ஆம் ஆண்டில் சத்தியவாக்குச் செய்தார்.

1928 இல் இருந்து 1947ம் ஆண்டுவரை இவர் கல்கத்தாவில் உள்ள St. Mary உயர்நிலைப்பள்ளியில் அதிபராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றும் பொழுது இந்தியாவின் வறுமையை ஒழிக்க முடிவு செய்து 1948ம் ஆண்டு தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு தன்னை இறைவரின் தூதுவராக நோயாளிகளையும், அனாதைகளையும் பரா மரிக்கத் தன்னை அர்ப்பணித்தார்.

1950 ஆம் ஆண்டில் Missionaries of Chavity என்ற இல்லத்தை நிறுவுவதற்குப் பாப்பரசரால் இவருக்கு அனுமதி வழங்கப் பட்டது.

1962 இல் அன்னை திரேசா தன் மேற் பார்வையில் "ஷாந்தி நகர்" - என்ற தொழு நோய் இல்லத்தை ஆரம்பித்து வைத்தார். அன்றிலிருந்து இன்றுவரை இவ்வில்லம் பல உதவிகளைச் செய்து வருகின்றது. உரு வானது. அன்னை திரேசா எல்லாப் பாகங்களிலும் 550க்கு மேற்பட்ட அனாதை இல்லங்களையும், வைத்தியசாலைகளை யும், பாடசாலைகளையும் நிறுவி மக்களுக்கு தொண்டாற்றியுள்ளார். அவை இன்றும் மக்களுக்குப் பல துறைகளில் தொண்டாற்றி வருகின்றது.

அன்னை திரேசாவிற்கு முதன் முறையாக 1971ம் ஆண்டில் பாப்பரசரால் சமாதானப் பரிசு அளிக்கப்பட்டது பின்பு 1979 இல் நோபல் சமாதானப் பரிசு அளிக்கப் -பட்டது.

இதுவரை காலமும் அமெரிக்க காங்கிரசினால் அரிதாக வழங்கப்பட்ட நாட்டின் சிறந்த பிரஜை என்ற கௌரவம் 1996 புரட்டாதி மாதம் திரேசாவிற்கு வழங்கப் பட்டது.

1990 ஆம் ஆண்டில் இருந்து அவரின் உடல் நிலை பாதிப்படைந்தமையால் 1996ஆம் ஆண்டு இறுதியில் பல இருதய சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டது. இதன் காரணமாக 1997 பங்குனியில் தனது அதிகாரத்தில் இருந்து விலகினார். 1997 புரட்டாதி 5ம் திகதி அன்னைதிரேசா இறைவனடி சேர்ந்தார். *

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்,
உன்னத இமயம் போல
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட்டிடல்எந் நாளோ?

– பாரதிதாசன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைமலர்க் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வருடம் ஆரம்பநெறி "A" ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகள்

செல்வி க.வளர்மதி
ஆரம்பநெறி 1ஆம் வருடம் C பிரிவு

ஒலிம்பிக் போட்டிகள் முதன் முதலில் ஒலிம்பியா நகரில் நடைபெற்றமையால் இதற்கு ஒலிம்பிக் என்ற பெயர் ஏற்பட்டது. இப் போட்டிகள் புராதன ஒலிம்பிக் போட்டிகள், நவீன ஒலிம்பிக் போட்டிகள் என இரு வகைப் படும்.

புராதன ஒலிம்பிக் பந்தயங்கள் கி.மு 776 - கி.பி 394 ஆம் ஆண்டு வரையுமே நடை பெற்றதாக அறிய முடிகிறது. ஆரம்பத்தில் கிரேக்கத்தில் பிசர் நாட்டினர் மட்டுமே பங்கு பற்றினர். பின்னர் ஸ்பாட்டா. எதென்ஸ் நாட்ட வர்களும் பங்குபற்றினர்.முதன்முதலில்நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில் ஓட்டப்போட்டி மாத்தி ரமே நடைபெற்றது. முதல் போட்டியில் கரே பஸ் என்ற வீரனே வெற்றிபெற்றான். நாளடை வில் போட்டியாளர்களும், போட்டி நிகழ்ச்சி களும் அதிகரித்தன. குத்துச் சண்டை, மல்யுத் தம், தட்டெறிதல், தேரோட்டம் போன்ற நிகழ்ச் சிகள் ஐந்து நாட்கள் நிகழ்ச்சியாக நடை பெற்றது. புராதன காலத்தில் பெண்கள் பங்கு பற்றுவது தடை செய்யப்பட்டிருந்தது. நாள டைவில் 128வது ஒலிம்பிக் போட்டியில் பெரிச்சி என்ற பெண்ணே தேரோட்டப்போட்டி யில் முதலிடம் பெற்றாள்.

தற்போது ஒலிம்பிக் பந்தயத்தில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப் படுகின் றது. அன்றைய காலத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒலிவ் மலர் வளையம் வழங்கப்பட்டது. அப்போட்டியில் பிளேட்டோ, மகாஅலெக்சாந்தர், சோக்கிரட்டீஸ் போன்ற அறிஞர்கள் கலந்து இருக்கின்றனர்.

இவ்வாறாக உடலாற்றலோடும், நாட்டுப் பற்றோடும், இறையுணர்வோடும் நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்கள் நாளடை வில் அதன் மேம்பாட்டை மகத்துவத்தை இழக்கத் தொடங்கின. இறுதியில் ரோம மன் னனான ரியடோஸ் என்பவனால் கி.பி.394 ஆம் ஆண்டு ஒலிம்பிக் பந்தயங்கள் தடை செய்யப்பட்டன. அதன் பின்னர் 1500 வருடங் கள் எந்த ஒலிம்பிக் பந்தயங்களும் நடை பெறவில்லை.

**நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பம்.**

1500 வருடங்கள் அடைபட்டுக் கிடந்த ஒலிம்பிக் மீண்டும் புத்துயிர் எடுத்துத் திகழ்ந்தது. இதன் தந்தையாக விளங்கியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கூர்மீன் பிரபு ஆவார். இவர் கிரேக்கத்தின் ஒலிம்பிக்கை உலகளாவிய ரீதியில் மீண்டும் நடத்தத் திட்டமிட்டார். ஆனால் இவரது முயற்சி பயனளிக்கவில்லை. 1896 ஆம் ஆண்டு ஏப்பிரல் 06 ஆந் திகதி ஒலிம்பிக்கை நடத்தியது. மன்னர் முதலாம் ஜோர்ஜ் விழாவினை ஆரம்பித்து வைத்தார். அது மட்டுமன்றி கிரேக்கத்தின் மாபெரும் போர் வீரன் பீடிப்பைட்ஸ் என்ற இளைஞனின் தியாக சேவைக்காக மரதன் என்ற ஓட்டமும் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

**நவீன ஒலிம்பிக் நடைபெறும் விதம்:**

அகில உலக ரீதியாக ஒலிம்பிக் பந்தயத்தின் சம்மேளனத் தலைவராக இருப்பவரே ஒலிம்பிக் பந்தயத்தினை நடத்தி வைப்பார். தற்போதைய தலைவர் ஜக்ரோஜ் என்பவராவர். இவரே 2004 இல் நடக்கவுள்ள ஒலிம்பிக் பந்தயத்திற்கும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தலைவர் முதலில் விழாவிற்கு வந்திருப்பவர்களை வரவேற்றுப் பேசுவார். எந்த நாட்டில் பந்தயம் நடக்கிறதோ அந்த நாட்டினை ஆட்சி செய்யும் மன்னர் அதிதியாக அழைக்கப்படுவார். இசை முழங்க வீர வீராங்கனைகளின் அணி வகுப்பு நடைபெறும். அந்த அணி வகுப்பில் கிரேக்க நாட்டவர்கள் முதலிலும், மற்ற நாட்டினர் ஆங்கில அகரவரிசைப்படி நிற்பர். எந்த நாட்டில் விழா நடக்கின்றதோ அந்த நாட்டினர் இறுதியில் நிற்பர். ஒலிம்பிக்கின் நோக்கங்களில் ஒன்றான அமைதி என்பதைப் குறிக்க வெண்புறாக்களும், பலூன்களும் பறக்க விடப்படும். இதன்பின்னர் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும். பின்னர் ஒலிம்பிக் கொடி ஏற்றி வைக்கப்படும். இது நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு வர்ணங்களுடைய வளையங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும். இவ் ஐந்து வளையங்களும் ஐந்து கண்டங்களைக் குறிக்கும். அதன் பின்னர் நிகழ்ச்சிகள் நடைபெறும். போட்டிகள் தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறும்.

**ஒலிம்பிக்கின் நோக்கம்**

ஒலிம்பிக் பந்தயங்களில் பங்கு பெறும் நோக்கம் வெற்றிகொள்வதற்கு மட்டுமல்ல போட்டியில் பெருமையோடு பங்கு பெறுவதுதான். வாழ்க்கையின் மிகவும் முக்கியமானது வாழ்க்கையில் வெற்றி கொள்ளும் இலட்சியம் மட்டுமல்ல, வாழ்க்கையோடு போராடுவதுதான் இக்கூற்று பிரபு கூர்மீன் அவர்களால் தான் முதன் முதலில் வெளியிடப்பட்டது. ஒரு மனிதனின் வாழ்க்கையை முழு மையாக்குவதே ஒலிம்பிக்கின் நோக்கம் என்பது இதிலிருந்து புரிகின்றது.

விரைக! உயர்க! வலிமைபெறுக! என்பதே ஒலிப்பிக்கின் தாரக மந்திரமாகும். வாழ்க்கையின் சிறப்பம்சம் வளமாகப் போராடுவதில் தான் தங்கியுள்ளது. அதனால் தான் பேரின்பத்தைக் காணமுடியும் ஒருவனுடன் போட்டி போடுவது அவனுடனன்றி அவனுடைய திறமையுடனேயாகும் என்பதையெல்லாம் இம்மூன்று சொற்களும் விளக்குகின்றது.

அதுமட்டுமன்றி ஒலிம்பிக்கின் ஆரம்பத்தில் பாடப்படும் ஒலிம்பிக் பாடலும் ஒலிம்பிக்கின் நோக்கத்தையே பிரதிபலிக்கின்றது. இப்பாடலின் தமிழ் வடிவம் இதுதான்.

"நீ வழங்கும் ஒளிச் சுடரால் எங்களை
மிக உயர்த்திடுக
இடர் போக்கிடுக
இவ்வுலகில் வாய்மையும் அமைதியும்
இனிதாய் வழங்கிடுக
உன்னொளியால் இரு சுடர்கள் - எம்
கண்ணொளியால் காணுகின்றோம்.
உதிர்ந் தெழும் சுடர் நன்று
உணர்ந்து நின்ற மனிதர்களின்
மனச்சாட்சி மற்றொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு வாய்மையும் அமைதியும் மிக அவசியம் அதுமட்டுமன்றி அவனது உயர்வுக்கு மாசில்லாத மனச்சாட்சியும் அவசியம். என்பதைனை ஒலிம்பிக் பாடல் விளக்குகிறது.

**ஒலிம்பிக்கின் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள்**

* ஜேசுயோவின் என்பவர் 1936ல் நான்கு தங்கப்பதக்கங்களை வென்றார். 100m, 200m, நீளம் பாய்தல், 4x100

* பிரான்சினா பிலாங்கா கோயன் என்பவர் 1948 இல் கலந்து கொண்ட போது இரு குழந்தைகளின் தாய் நான்கு போட்டிகளில் வெற்றி பெற்று தங்கப் பதக்கம் பெற்றார்.

* எமிஸ் ஸ்ரட் டோபெக் தம்பதிகளாக ஒலிம்பிக்கில் கலந்து தலா 3 தங்கப் பதக்கங்களைப் பெற்றார்.

* பார்வோ நறுமி என்னும் இங்கிலாந்து வீரர் 1920, 1924, 1928 ஆகிய ஒலிம்பிக் பந்தயங்களில் 9 தங்கப்பதங்களையும் 3, வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றார்.

* 2000ம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற போட்டியில் மெரியின் ஜோன்ஸ் கூடுதலான தங்கப்பதக்கங்களைப் பெற்றார்.

* 50 வருடங்களுக்குப் பின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெய்சிங்க 200m வேக ஓட்டத்தில் வெண்கலப்பதக்கத்தினைப் பெற்றார்.

* முன்னர் டங்கன் வைற் என்பவர் 400m தடைதாண்டி ஓடும் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றார்.

* சமகாலத்தை நோக்கும் போது ஆசிய நாடுகளுள் இலங்கை முன்னனியில் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

* காட்டில் பூத்த ரோஜாக்கள் என வர்ணிக்கப்படும் உலகின் தலை சிறந்த கிரிக்கெட் வீரர்களுள் ஒருவரான அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரியாவும், சுசந்திகா ஜெயசிங்கவும் முக்கிய பங்காற்றியவர்கள்.

* உலகின் தலை சிறந்த சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.

* ஒலிம்பிக்கில் புதிதாக 1988 ஆம் ஆண்டிலிருந்து டெனிசும், டேபிள் டெனிசும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

* 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

* இவ்வருடம் 2004 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஒலிம்பிக்கின் தாயகமான கிரேக்கத்தில் உள்ள எதென்சில் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. *

**உலகில் 23,000 பறவை இனங்கள் இருக்கின்றன. இவற்றில் 2,500 இனங்கள் இந்தியாவில் உள்ளன. இவற்றில் 500 இனப் பறவைகள் இடம்விட்டு இடம் மாறிச் செல்லும் நாடோடி பறவைகளாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசணைப் பிரச்சினையும் பிரச்சினையைத் தவிர்த்தலும்

செல்வி. ச. நாகதாரணி
2ம் வருடம், மனைப்பொருளியல்.

"குன்றாத உடல் நலனே வாழ்க்கையில் மிகச் சிறந்த பாக்கியம்" எனக் கருதப்படுகிறது. உணவு உட்கொள்ளுதல் காரணமாய் உடலில் ஏற்படும் வளர்ச்சி, உடலைப் பேணுதல், அதில் ஏற்படும் சேதங்களைச் சீர்ப்படுத்துதல் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியானது போசணை எனப்படும். உடலுக்கு வேண்டிய எல்லாப் போசணைச் சத்துக்களையும் வேண்டிய அளவில் அளிக்கத்தக்கதாக தேவையான உணவுகளைக் கலந்து பெறும் உணவே நிறையுணவு எனப்படும். விஞ்ஞானிகள் உணவு மூலம் போசணையை அளிக்கவல்ல எதையும் போசணைப் பதார்த்தமென வகுத்துள்ளனர். அப் போசணைப் பதார்த்தங்கள் காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருள்கள், நீர் என்பனவாகும். நாம் உட்கொள்ளும் உணவில் போசணைச் சத்து போதாதிருப்பதை போசணைப் போதாக் குறையெனவும், போசணைப் பொருள்கள் ஏற்ற விகித சமத்தில் இல்லாதிருந்தால் போசணைக் குறையெனவும் கொள்ளலாம். போசணைப் பிரச்சினைக்கு பற்பல காரணங்களுண்டு.

போசணைப் பிரச்சினையில் முதலாவதாகக் காணப்படுவது பொருளாதாரச் சிக்கலாகும். போசணைச் சத்துக்களில் ஒன்றான புரதச்சத்து நிறைந்த உணவுப் பொருள்களின் விலை அதிகமாகக் காணப்படுகிறது. எனவே எல்லா மக்களாலும் இறைச்சி, மீன் போன்ற உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. அடுத்து அத்தியாவசியமான போசணைகளை வழங்கும் சாதாரண உணவு பற்றி நன்றாக அறிந்திருக்காமை, போசாக்குத் தேவை பற்றிய அறிவு இல்லாமையும் போசணைப் பிரச்சினையை ஏற்படுத்துவதற்கு காரணமாகும்.

இன்று வர்த்தக சந்தையில் காணப்படும் பல்வேறு விளம்பரங்கள் போசணை சம்பந்தமாக பாதிப்பை ஏற்பத்தியுள்ளன. என்பதை நாம் மறுக்க முடியாது. குறைந்த வருமானம் பெறும் மக்கள் தமக்குக் கிடைக்கும் பணத்தை போசாக்குக் குறைந்த உணவுப் பண்டங்களை கொள்வனவு செய்வதில் செலவழித்து விடுவார்கள். இதுவும் போசணைச் சிக்கல் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது. போசாக்கின்மையால் வளரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய் மார்கள் இலகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களில் நாம் அவதானிக்கக் கூடிய பிரதான அறிகுறி என்னவெனில் மெலிந்தும், குறளை ஏற்பட்டும், வயதுக்கு ஏற்ற உயரமும், அதற்கேற்ற நிறையும் இல்லாமையாகும். போசாக்குச் சம்பந்தமான இரத்தச் சோகை நீண்டகாலத்திற்குப் போதுமான அளவு உணவு உட்கொள்ளாத காரணத்தினாலும் சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் காரணமாகவும் ஏற்படலாம். இந்நோய் ஏற்படுவதற்கான முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துவது அன்றாட உணவில் உடற் தேவைக்குப் போதுமான இரும்பு, மற்றும் போலிக்கமிலம் இல்லாமையாகும். இதுவும் போசணைப் பிரச்சினை ஏற்படுத்துவதற்குக் காரணமாகிறது.

கனிப்பொருள்களில் ஒன்றான அயடீன் இயற்கை நிலையில் நீரிலும், நிலத்திலும் காணப்படுகின்றன. ஆகவே வழக்கமாக தேவைப்படும் அயடீன் ஆனது அயடீன் செறிந்த நிலத்தில் விளையும் பயிர்களிலிருந்து கிடைக்கிறது. ஆனால் அயடீன் பற்றாக் குறையாக இருக்கும் நிலங்களில் விளையும் பயிர்களில் அயடீன் இருப்பதில்லை.இதனால் அவ்விடங்களில் வாழும் மக்களுக்கு அயடீன் பற்றாக்குறை ஏற்படுகிறது. போசாக்குத் தொடர்பான உயிர்ச்சத்து குறைபாடாக உயிர்ச்சத்து ஏகுறைபாடு குறிக்கப்படும்.இது முக்கியமாக கண் பார்வையுடன் தொடர்புடையது. இதுவும் போசணைப் பிரச்சினையில் ஒன்றாகும்.மேலும் உணவின் சுவையைக் கூட்டும் பொருள்களாலும், நிறமூட்டும் பொருள்களாலும்,உணவைப்பேணுவதற்கு பயன்படுத்தும் இரசாயனப் பொருள்களாலும் உடலுக்கு பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அத்துடன் உணவைக் கலப்படம் செய்யும் போதும் போசணைச் சிக்கல் ஏற்படுகின்றது.

இத்தகைய பல போசணைச் சிக்கல்கள் காணப்படுவதால் இதனைத் தடுப்பதற்காக வழிவகைகளை ஆராய்தல் முக்கியமாகும். அந்த வகையில் மாமிச உணவுப் பொருள்களான இறைச்சி, மீன், முட்டை, பால் முதலியன விலை கூடிய பொருள்களாகையினால் இன்று நிலவும் பொருளாதார நிலைக்குப் பொருத்தமான விதத்தில் விலை குறைந்த பயறுவகை உணவுப்பொருள்களில் குறைவில்லாத போசாக்கைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரியப்படுத்தல். தற்காலக் குடும்பப் பெண்கள் உணவுப் பொருள்களில் அடங்கியிருக்கும் போசணைப் பதார்த்தங்களிலுள்ள பௌதிகத் தன்மைகளையும் இரசாயனப் பொருட்களையும் அறிந்துகொள்ள வேண்டும். கர்ப்பிணிப் பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் மேலதிக போசணைமிக்க உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பதை மக்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

குழந்தைகளுக்கு மேலதிக உணவு வகைகளைக் கொடுப்பதன் அவசியத்தை போசாக்குக் கல்வி மூலமும், வெளிக்களப் பயிற்சிகள் மூலமும் விளங்க வைக்கலாம். அயடீன் பற்றாக்குறையான பகுதியில் உள்ள மக்களுக்கு அயடீன் கலந்த உப்பு பெற்றுக் கொள்ள வாய்பேற்றபடுத்தலும், அவற்றைப் பற்றி அறிவுறுத்தலும் வேண்டும்.போசாக்கை உடலுக்குப் பெற்றுக் கொள்வதற்குப் பயன்படும் சிறந்த வழிமுறை இலைக்கஞ்சி குடிப்பதாகும்.இதன் மூலம் இரும்புக் குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம்.

ஆகவே போசணைப் பிரச்சினைகள் பற்பல காரணங்களால் ஏற்படுவதால் இதனை தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் போசணைப் பிரச்சினையைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயூட்டும் கல்வியின் அவசியம்

செல்வி. மு. ஜெயமதி,
ஆரம்பக்கல்வி 2ஆம் வருடம் A பிரிவு

தாயின் கருவறையில் குழந்தை உற்பத்தியாகும் பொழுதே கல்விக்கான அத்திவாரம் ஒரு கற்றறிவுள்ள தாயால் இடப்படுகின்றது. கருவுற்ற காலத்தில் தாயானவள் நன்கு பயனுள்ளதாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைக்கு கருவறையில் வைத்தே கல்வி ஞானம் ஊட்டப்பட வேண்டும். அக்கல்வி ஞானமே அதன் பிற்கால வாழ்க்கையை ஒளி உள்ளதாக அமைப்பதற்கு உதவுகின்றது. இந் நிலையை அதிக தாய்மார்கள் உணர்வதில்லை.

தாயானவள் தான் கருவுற்று இருக்கும் போது நல்ல நூல்களை வாசிப்பதோடு நல்ல கருத்துக்களை விரும்பிக் கற்றுத் தெளிய வேண்டும். நல்ல பேச்சுக்களைக் கேட்பதோடு, நல்லவர்களோடு பழகி இறை பக்தி பேண வேண்டும். தன் கருவின் கல்வி வளர்ச்சிக்கு உதவுகின்ற இக்காலம் அக் குழந்தையின் எதிர்கால வாழ்வின் அத்திவாரமாக அமைகின்ற ஒரு பொற்காலமாகும். இக்காலத்தில் தாயானவள் கல்வி நூல்களை வாசிக்க வேண்டும்.

கல்வியியலாளர்கள், உளவியலாளர்கள் வற்புறுத்துவது யாதெனில், ஆரம்பக் கருக்கோலத்தில் குழந்தைகளுக்கு ஊட்டப்படுவது கல்வி ஞானத்தையாகும். மேல்நாடுகளில் குழந்தை பிறந்தவுடன் தாயானவள் தன் குழந்தையின் கல்வியில் கூடிய கவனம் எடுக்கும் நிலையைக் காணமுடிகின்றது. பிள்ளை பிறந்தவுடன் அதனது எதிர்கால வளர்ச்சியில் கல்விக்கு தாயானவள் அளிக்கும் முக்கியத்துவநிலையை நாம் இங்கு உணர்ந்துயர வேண்டும். கிராமத் தாய்மார்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு முன்பாக முன்பள்ளிக் கல்வியிலும் தமது பங்கைச் செலுத்த வேண்டும். ஒரு குழந்தையின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளிப் பருவக் கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது. குழந்தை பாடசாலைக் கல்விக்குப் புகுவதற்கு முன்பாக அக் குழந்தையின் மனப்பாங்கு, திறன், அறிவு, சீராக்கம் பெறும் காலம் இக்காலமாகும். இப்பருவத்திலேயே பாடசாலை முன் அனுமதி நடத்தைக் கோலம் சீராக்கமடைகின்றது.

ஒழுங்கமைக்கப்பட்ட முன்பள்ளியில் ஆண்டு ஒன்றுக்கு குழந்தை முறைசார் கல்வியைத் தொடர்வதற்கு முன்பாக இக்கல்வி திட்டமிட்டு அளிக்கப்பட வேண்டும். இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காக்கம் செய்யும் கல்வியே குழந்தையின் ஆரம்பக்கல்விக்கு உறுதுணையாக அமைகின்றது. தாயானவள் முன்பள்ளியின் செயற்பாட்டை உணர்ந்து அதற்கேற்ற விதத்தில் குழந்தையின் வீட்டுச் சூழலை இசைவாக்கம் செய்ய வேண்டும். வீட்டுச் சூழல் முன் பள்ளியில் கற்ற கல்வியை வசதிப்படுத்துவதாய், தொடர்ந்து ஈடேற்றம் செய்வதாய் அமைய வேண்டும்.தாயானவள் குழந்தைக்கு அறிவுறுத்தல்களையும், நல்வழி நடவடிக்கைகளையும் செய்ய வழிகாட்ட வேண்டும். இக்காலமே வாய்மொழி மூலமான் மொழி அபிவிருத்தியாகும் காலமாகும். இப்பருவத்தில் குழந்தைக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குள் அலுவல்களைச் செய்து முடிக்கும் எண்ணக்கரு,நேரம், இலக்கங்கள், பாவனை, ஆக்கப் பாட்டுச் சித்திரம், இசை, சிறு கூட்டத்தில் இசைந்து பேசும் பேச்சு ஆகியன விருத்தியுற வழிசெய்யப்பட வேண்டும்.

இப்பருவத்திலே தாயானவள் குழந்தை அபிவிருத்தி சம்பந்தமான உரையாடலைச் செய்ய வழிப்படுத்தல் அவசியமாகும். சமூக அபிவிருத்திச் செயற்பாடு, பயமும் கவலையும் நீங்குதல், உள்ளார்ந்த பழக்க வழக்கங்களைப் போக்குதல், விரலை வாய்க்குள் வைத்திருத்தலைத் தவிர்த்தல், மலசலம் கழிக்கும் பயிற்சி, மலசலம் கழித்த பின் சவர்க்காரம் போட்டுக் கை கழுவுதல், தொடர்பாடல், திறன்விருத்தி ஆகியன ஏற்படுத்த வேண்டும். இத்தகைய வசதி நிலைகள் கிராமப் பிள்ளைகளுக்கு மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. இவற்றுக்கு மையப்படுத்தப்பட்ட நகரத்தில் உள்ள ஸ்தாபனங்கள் கூட்டுறவு அமைப்புக்கள் இவற்றைப் போக்க உதவலாம். பெற்றோர்கள் தாமாக தமது வீட்டில் வைத்து இவைகளை வழங்கலாம். குறிப்பிடக்கூடிய கல்வித்திறன் தாய்மாருக்கு அவசியம். சுயமாக உதவும் திறன் உருவாக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்காய் ஓய்வுநேர நடவடிக்கைகளைத் தாய்மார் அதிகரிக்கச் செய்தல் அவசியமாகின்றது. எண்கணிதம், மொழி, சித்திரம் ஆகிய பாடங்களுக்கு சுய உதவும் திறன் மூலம் கல்வி வளர்க்கப்படல் அவசியமாகும். பிள்ளைகள் பெற்றோர்களால் மகிழ்வூட்டப்படல் அவசியமாகும். பிள்ளைகளுக்காக உதவும் சேவைகளுடன் பெற்றோர் நேரடித் தொடர்புடையவர்களாக அமைய வேண்டும்.

முன்பள்ளிச் செயற்பாட்டுடன் ஆரம்பக் கல்வியின் செயற்பாடு பற்றிய அறிவும் தாய்மாரைப் பொறுத்தமட்டில் அவசியமாகின்றது. தரம் ஒன்றில் கற்கும் மாணவனைப் பொறுத்தமட்டில் பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்பினால் மட்டும் போதாது. அப்பிள்ளையின் பாடசாலை செல்லும் தகுதியைப் பெற்றோர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும். பிள்ளையைத் தாயானவள் ஊக்குவிக்க வேண்டும்.பிள்ளை பாடசாலை சென்று கல்வி கற்றுவர வீட்டுச் சூழலால் ஊக்குவிப்பதோடு பாடசாலைச் சூழலாலும் கவர்ந்து எடுக்கப்பட வேண்டும்.

இதில் முக்கிய இடத்தைத் தாயானவள் எடுத்துக் கொள்கிறாள். ஒரு வீட்டுத் தாய்க்கு ஆரம்பக் கல்வியின் பெறுமானம் நன்குணர்த்தப்படவேண்டும்.இதனைத் தாயானவள் உணர்ந்து கொள்வது அவசியமாகின்றது.பிள்ளையின் கல்வி வாழ்க்கையில் ஆரம்பக்கல்வி அடி அத்திவாரக் கல்வி ஆகின்றது. ஔவைப்பாட்டி இதனை உணர்ந்தே "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்றார். இளமைக் கல்வியே சிறந்த கல்வியாக அமைய வேண்டும் என்பதனைத் தாயானவள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். தாய்மை நன்கு கனிந்த உள்ளம் படைக்க வேண்டும். பிள்ளையின்பால் கல்வி அளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் தாய்மை என்ற ஊற்றுப் பிரவா கித்துப் பெருக வேண்டும்.

தாய்மை பிள்ளையின் உள்ளத்தை வெல்ல வேண்டும். உளப்பாங்குக்கேற்ப பிள்ளையைப் கடிந்து நோக்காது ஊக்கு விக்கும் மனப்பாங்குடன் செயற்பட வேண் டும். பிள்ளையின் மனதை அழகியல் செயற் பாட்டால் வளப்படுத்த வேண்டும். உடலியற் செயற்பாடு உறுதி உள்ளதாகவும் கல்வியை உள்வாங்கக் கூடிய உடல் உறுதியையும் குழந்தைக்குத் தாய் அளிக்க வேண்டும்.

இத்தகைய பொதுப்பணி தாய் மாருக்குக் கூறப்பட்டாலும் கிராமத் தாய்மா ரைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கே ஆரம் பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர் கல்வி அளிப்பதில் கூடிய பங்கு உள்ளது. கிராமச் சூழலில் தகப்பன் குழந்தையின் கல்வியைப் பற்றிக் கூடுதலான அக்கறை காட்டாத நிலையே காணப்படுகின்றது. கூடுதலான தந் தையர்கள் கல்விப் பெறுமானம் பற்றி உணர்ந்து கொள்வதில்லை. குறிப்பாக தாம் உழைக்கும் வருமானத்தில் கூடிய பங்கைக் கல்விக்குச் செலவு செய்யத் தவறி விடுகின்றனர்.

கல்விக்குக் கூடிய நிதியை ஒதுக்கிக் கொள்வதோடு, பிள்ளையின் கல்வி பெறக் கூடிய நிலைக்கு இரக்கம் காட்டலும் அவசி யமாகின்றது. தாய்மார் கல்விக்கு முக்கியத்து வம் அளிக்கும் நிலையை சகல கல்வி நிலைகளிலும் உருவாக்குதல் சிறப்பு ஆகும். தாயே கல்வியின் விடயத்தில் பூரண பொறுப்பை கிராமப் புறங்களில் எடுக்க வேண்டிய நிலை ஒன்று உருவாகி உள்ளது. ஆனால் சில குடும்பங்களில் தாயும் தந்தை யும் கல்வியின் பெறுமானத்தை அறியாமல் குழந்தைக்குக் கல்வியை அளிக்கத் தவறி விடுகின்றனர். ஒவ்வொரு பெற்றோரையும் அழைத்து அவர்களது போக்கை இனம்கண்டு குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு அவர்கள் ஊடாக வழிபிறக்கச் செய்ய வேண்டும். ஒரு பெண்ணுக்கு கல்வி அறிவூட்டுவது பத்து ஆண்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதற்குச் சமமாகும். *

**கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்**
**கழையிடை ஏறிய சாறும்,**
**பனிமலர் ஏறிய தேனும்,– காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்,**
**நனிபசு பொழியும் பாலும் – தென்னை**
**நல்கியும் குளிரிள நீரும்,**
**இனியன என்பேன் எனினும் – தமிழை**
**என்னுயிர் என்பேன் கண்டீர்!**

– பாரதிதாசன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வருடம் ஆரம்பநெறி “B” ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "C" ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னம்பிக்கையோடு வாழ்வோம்

திருமதி செ.றூபேட்யேசுதாஸ்
ஆரம்பக் கல்வி 2 ஆம் வருடம் D பிரிவு

'இடைவிடாது தடைப்படாது துணிவுடன்
செயலைச் செய்து வந்தால் விதியும் விலகி விடும்'
- எமர்சன்

தன்னம்பிக்கை ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கையில் ஓர் உரமூட்டும் பண்பாக விளங்குகின்றது. தன்னம்பிக்கை காந்தம் போல் கவரும் தன்மை கொண்டது. அதாவது தன்னம்பிக்கை உள்ளவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியையும் வாய்ப்பையும் வசதியையும் கவர்ந்து செழுமை காண்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் இலட்சியவாதிகளாகவும் அதை அடைபவர்களாகவும் காணப்படுவார்கள். மேலும் இப்பண்பு மனித உறவை மெருகூட்டி நிலைபெறச் செய்கின்றது. புதிய உறவுகளை உருவாக்கக் கூடிய துணிவையும் செயற்றிறனையும் கொடுக்கின்றது.

தற்காலத்தில் நான் சமுதாயத்தில் வாழுகின்ற ஒரு மனிதன். நான் எங்கே இருந்து வந்தேன்? எங்கே போகின்றேன் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் என் உள்ளத்தில் ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. அதாவது என் உள்ளம் நல்லதைச் செய்ய வேண்டும் என்று சொல்கின்றது. ஆனால் மனதில் ஒரு பதட்டம் நான் நடந்து வந்த பாதையில் சந்தித்த மனிதர்களைப் பார்த்தால் அங்கே எப்போதும் நன்மைத் தனத்தைக் காண முடியவில்லை. மாறாக பலர் வாழ்விழந்த நடைப்பிணங்களாக வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்களாக தங்களையே இழந்தவர்களாக் இருப்பதையே காண்கின்றேன்.

தன்னம்பிக்கை வாழ்க்கையின் உயரத்திற்கு இட்டுச் செல்லும் ஏணி என்பதை முதலில் உணர வேண்டும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் "

என்பது உலகப் பொதுமறையாகக் கருதப்படும். திருக்குறள் மூலம் தமிழ் முனிவர் எமக்குத் தந்த தவமொழியாகும். பிறப்பில் இருந்து இறப்பு வரை மனிதரை இதமாய் தன் வாழ்விற்கு இட்டுச் செல்லும் பேரொளிப் பிளம்பே தன்னம்பிக்கை ஆகும். எம்மால் முடியாதது என்று எதுவுமே இல்லை. நாம் மனது வைத்தால் எதனையும் சாதிக்கலாம். என்ற எண்ணம் மேலோங்கப் பெற்றவர்கள் தமது முயற்சிகளால் வெற்றி பெற்றுள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு'

என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். உள்ளத்தினால் நாம் உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருந்தால்த் தான் பலசாதனைகளைப் படைக்க முடியும்.

உதாரணமாக வானத்தில் வட்டமிடுகின்ற பருந்தின் பார்வை தான் குறிவைத்திருக்கும் இரையின் மேல் தான் இருக்குமே தவிர தரையில் இருக்கின்ற ஆயிரம் பொருள்கள் மீது இருக்காது. ஒரு முறை தனது இரையைத் தவறவிட்டாலும் அடுத்தமுறை தவற விடுவதில்லை. அதே போல சிலந்தி கூட தனது வலையைக் கட்டுவதற்கு ஒரு சுவரில் இருந்து அடுத்த சுவரிற்குத் தாவும் போது எத்தனை முறை விழுகின்றது. ஆனால் இறுதி வரை தனது முயற்சியைக் கைவிடுவதில்லை. தனது வலையைப் பின்னிய பின்பு தான் ஓய்கின்றது. எனவே மனிதர்களாகிய நாம் எந்தத் துறையில் வெற்றிபெற வேண்டும் என்றாலும் தோல்வியைக் கண்டு துவண்டு விடாது தளராத மனதுடன் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும். தான் மேற்கொள்ளும் காரியத்தை தன்னால் சாதிக்க முடியும் என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதற்குத் தன்னம்பிக்கையே அவசியம்.

நான் சமுதாயத்தில் வாழுகின்ற மனிதன் என்ற உணர்வைத் தருகின்ற வாழ்க்கைப் பிரச்சினைகளில் தெளிவையும் துணிவையும் தருகின்ற ஒரு பண்பான காரணியாக தன்னம்பிக்கை இருக்கின்றது. எனவே அதை எமதாக்குவோம். உலகத்தின் சிக்கல்களில் சிக்கி வாழ்விழந்தவர்களாக வாழாது வாழ்வின் சவால்களை ஏற்று வாழ தன்னம்பிக்கை உடையவர்களாக வாழ்ந்து வாழ்வில் நிறைவு காண்போம்.

'யானையின் பலம் தும்பிக்கையில்
மனிதனின் பலம் நம்பிக்கையில்'

*

"கலைமலருக்கு எமது நல்வாழ்த்துக்கள்"
காலத்திற்கேற்ப கண்ணைக் கவரும்
அற்புதமான டிசைன்களில் பெற்றிட

முத்துமாரி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்

ஓடர் நகைகள் குறிந்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில்
செய்து கொடுக்கப்படும்.

முத்துமாரி நகைமாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பனையும் ஒப்பனையாளரும்

திரு. உ. பாரதி
2 ஆம் வருடம் சித்திரநெறி

**ஒப்பனை என்றால் என்ன?**

நாடகத்திலோ அல்லது சினிமாவிலோ அன்றி கிராமியக்கலையிலோ ஒரு பாத்தி ரத்தை ஏற்பவரை பாத்திரத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைப்பது ஒப்பனையாகும். ஒரு ஒப் பனையாளர் மதிநுட்பம் நிறைந்தவராகவும், கற்பனையாளராகவும் கலைரசனை உடைய வராகவும் நீண்ட பொறுமைசாலியாகவும் இருத்தல் வேண்டும்.

**ஒப்பனைகள் எவ்வாறு அமைகின்றன?**

i) பகல் வெளிச்ச ஒப்பனை (DAY LIGHT MAKEUP)

ii) மின்ஒளி ஒப்பனை (LIGHT MAKEUP)

iii) புகைப்படக் கருவிக்கான ஒப்பனை (PHOTOGRAPH MAKEUP)

iv) ஒலி, ஒளி நாடாவிற்கான ஒப்பனை ( VIDIO MAKEUP)

என இவ்வாறு அமைகின்றது. ஒப்பனையாளர் நாடகக் கதையை அறிந்து நெறியாள்கை செய்பவரோடு இணைந்து ஒப்பனையைச் செய்தல் வேண்டும்.ஒப்பனை இரண்டு முறை களில் அமைகின்றது.

i) மரபு ரீதியான ஒப்பனை

ii) நவீன ஒப்பனை

நவீன ஒப்பனை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாததினால் மரபுரீதியான ஒப்ப னையே நிலைத்து நிற்கிறது. முன்னய காலத் தில் இயற்கைப் பொருள்களைக் கொண்டே உடலுக்குத் தீங்கு விளைவிக்காமல் பாத்தி ரங்களிற்கு ஏற்றவாறு ஒப்பனை மேற்கொள் வார்கள். இன்று இரசாயனக் கலவை நிறைந்த ஒப்பனைப் பொருள்களால் அலங்கரிக்கப்படு வதால் தோல் சுருக்கம், கண்பார்வை குறை தல் போன்ற பக்கவிளைவுகள் ஏற் படுகின்றன.

எனவே ஒப்பனையாளர்கள் ஒப்பனைப் பொருள்களை நன்கு அறிந்து பக்கவிளைவு கள் அற்ற ஒப்பனைப் பொருள்களைப் தேர்ந் தெடுத்தல் வேண்டும். ஒப்பனைப் பொருள் களாக வர்ணச் சாந்துகள், கண்ணிமைப் பூச்சுக்கள், தாடி , மீசை, கிரீடம் இவைகளை அறிவதோடு தலையலங்காரம் உடையலங் காரம் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். அது மட்டுமன்றி தமிழ்நாட்டு நாடகம், வட நாட்டு நாடகம், மேற்கு நாட்டு நாடகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கு நாட்டு நாடகம், துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம், கூத்துக்கள், கிராமியக் கலைகள் இவை பற்றியும் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் நாட்டுக்கு நாடு வேறு பட்ட உடைகள், வேறுபட்ட நகைப் பொருள்கள், பயன்படுத்தப்படுவதனால் அந்தக் காட்சி களில் அந்தப் பாத்திரத்தைத் தாங்கி நிற்ப வரைப் பொருத்தமான முறையில் ஒப்பனை செய்து பார்க்கலாம்.

ஒரு ஒப்பனையாளர் இயற்கையைக் கூர்ந்து அவதானிப்பவராக இருத்தல் வேண்டும். மனதில் பாத்திரங்களைக் கற் பனை செய்தால் வயது முதிர்ந்தோர், நடுத்தர வயது, குழந்தைகள், முடவர், குருடர், சமயம் சார்ந்தோர் இவர்களை உருமாற்றம் செய்து பாத்திரத்திற்கேற்றவாறு அமைக்க முடியும். ஆடைகள், நாட்டிற்கு நாடு வித்தியாசப்படும். எனவே மேற்குநாட்டு ஆடைகள், கிழக்குநாட்டு ஆடைகள் பற்றியும் அறிந் திருக்க வேண்டும். நாடகத்திலும் நடனத்திலும் ஒப்பனையாளர்கள் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றார். சினிமாவில் ஒப்பனையாளர்கள், உதவி ஒப்பனையாளர்கள் என் போர் இருப்பர்.

ஒப்பனை செய்யும்போது பாத்திரத்தை ஏற்பவரின் உடலின் தோல் அமைப்பை அறிவதோடு அவருடைய தோல் நிறத்தையும் அறிந்திருத்தல் வேண்டும். ஏனெனில் அவருக்கு ஏற்றவாறு வர்ணக்கலவையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தியாவில் உருமாற்றத்திற்கு அந் தந்தப் பாத்திரத்திற்கு ஏற்றவரை அந்தந்த இடத்து மக்களின் அமைப்பிற்கேற்றவாறு ஒப் பனை செய்கிறார்கள். இதற்கான உதாரணம் நரைத்த முடியுடைய ஒருவருக்கு நரைத்த முடி தேவை எனில் உண்மையான முடியிலேயே முடி தயாரிக்கப்படுகின்றது. மேலைத் தேய நாடுகளில் இறப்பர்ப் பொருள்களில் தயாரிக்கப்படுகின்றது. எமது நாட்டில் பிள் ளைக் கற்றாளையில் தயாரிக்கப்படுகின்றது. மேலும் வயது முதிர்ந்தோருக்கான தோல் சுருக்கத்தை ஏற்படுத்துவதற்கு இந்திய ஒப் பனையாளர்களால் இயற்கைப் பொருள்களி னால் உருவாக்கப்பட்ட பசை பாவிக்கப்படு கின்றது. மேற்குலக நாடுகளில் பிளாஸ்ரிக் முக மூடிகள் ஒட்டப்படுகின்றது. எமது நாட்டில் வர் ணங்களால் கோடுகள் வரையப்படுகின்றன.

இன்று அழகுக் கலை என்ற போர்வை யில் மணப்பெண் அலங்காரம் இரசாயனச் சேர்வைப் பொருள்களினைப் பயன்படுத்துவ தால் முகத்தின் ஒளிர் தன்மையும், முகப்பொ லிவையும் குறைக்கின்றது. மாறாக இயற் கைப்பொருள்களாகிய பப்பாசி, தயிர், கஞ்சி, வேப்பம்துளிர், தேசிக்கோது இவையே முக அழகின் ஆயுளை நீட்டிச் செல்கின்றது. எமது சமூகம் மேலைத்தேய ஒப்பனையை அறிந்து வருகின்றது. இந்தியாவில் இயற்கைப் பொருள் கள் கொண்டு ஒப்பனை செய்யப்படுகின்றது. மேலைத்தேய வர்க்கத்தினரும் தற்போது இயற்கைப் பொருள்களாலான முறையைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். எனவே நாமும் இயற்கைப் பொருள்களால் ஒப்பனை செய்து பயன் பெறுவோமாக. *

**குழந்தை பிறந்ததும் ஒரு வாரம் வரை விளக்கு வெளிச்சத்தில் படுக்க வைப்பதால் குழந்தைக்கு மஞ்சள் காமாலை வருவதில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "A" ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "B" ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையம்

செல்வி சி.சியோசினி
ஆரம்பக்கல்வி 1ஆம் வருடம் B பிரிவு

இன்றைய உலகில் கணனி ஓர் முக்கிய இடம் வகித்துள்ளது. இன்று உலகில் கணனித் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் படிப்படியான முன்னேற்றம் காரணமாக தகவல் தொடர்பில் ஏற்பட்டிருக்கும் ஓர் மைய மாக இணையம் அமைகிறது. இன்று சுமார் 150 நாடுகளில் 15 கோடிக்கு மேற்பட்ட பார் வையாளரை வைத்திருக்கின்றது இணையம்.

ஒரே இடத்தில் அல்லது வேறுபட்ட இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணனிப் பொறிகள் (Computer) ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு தமக்கிடையே உள்ள தக வல்களையும், தரவுகளையும் பரிமாற்றும் தகவல் தொடர்புச்சேவையே இணையம் (Internet) ஆகும். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் அபரிமிதமான கண்டுபிடிப்பு இந்த இணையமாகும். இந்த இணையம் மிகத்தொலைவில் இருக்கும் தனித்தனி கணனிப் பொறிகள் சிறு வலையமைப்பு (Net Work) எனச் சுருக்கமாக அழைக்கலாம். அதாவது கணனிகள் பலவற்றை இணைத்து அவற்றில் பிரதான ஒரு கட்டுப்பாட்டில் செயற் படுத்துவதே வலையமைப்பு ஆகும்.

அமெரிக்காவில் ஆரம்பத்தில் (Darpa net) உருவாக்கப்பட்டது. பின் இதில் பல்வேறு குறைகள் இருந்ததால் 1972ஆம் ஆண்டு ARPA NET (Adbanced Vesearch Project Agenoy) எனும் அமைப்பு உருவாக்கப் பட்டது.

இணையம் 1969ஆம் ஆண்டு அமெ ரிக்காவில் உருவாக்கப்பட்டது. இது ஆரம்பத் தில் அமெரிக்க பாதுகாப்புத் துறையினரின் இராணுவ இரகசியத்தை பரிமாற்றிக் கொள் ளவே பயன்பட்டது.

ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் தகவல்களை வேகமாகவும், சரியாகவும் அறிய இணையம் உதவுகின்றது.

உலகெங்குமுள்ள Computer களை இணைக்கவே 1986 ஆம் ஆண்டு National Science Foundation Net உலகை வலம் வந்தது. இதை வலையமைப்பின் தாய் என வும், விண்ட் சென்ட் சொ்ஃப் இணையத்தின் தந்தையாகவும் அழைக்கப்படுகின்றது. ஆரம் பத்தில், இணையத்தின் தகவல் பரிமாற்றத் தின் வேகம் 56 kbps ஆகக் காணப்பட்டது. தற்போது 1.5 MPS ஆக அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனிகளை இணைப்பதற்கு MAN, WAN, LAN ஆகியன உருவாக்கப்பட்டன. ஓர் இடத்திலிருக்கும் கணனிகளை ஒன்றிணைப்பதை LAN (LOCAL AREA NET WORK) எனவும் இது விரிவு பெற்று நகரத்திலுள்ள கணனிகளை இணைக்க MAN, (Metro Area Net Work) பயன்படுகின்றது. தூர இடங்களில் இருக்கும் கணனிகளை இணைக்க WAN (wide Area Net work) உருவாக்கப்பட்டது.

வலை அமைப்பின் பிரதானமானது கணனி சேவர் (Server) எனவும் ஏனைய துணைக் கணனிகளை கிளைண்ட் (Client) எனவும் அழைப்பர். இங்கு Server என்றழைக்கப்படும் கணனியே பிரதான தகவல் தளமாகவும், துணைக் கணனிக்குத் தேவையான கட்டளைகளையும் வழங்கிக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும்.

கணனியானது தொலைபேசி ஊடாக Server உடன் இணைக்கப்படுகிறது. இவ்வாறு இணைப்புக்களை ஏற்படுத்த Modem உதவியாக உள்ளது. இது கணனிகளில் உருவாக்கப்படும் Signal ஐ Digital ஆகவும் அதே போன்று தொலைபேசி புரிந்து கொள்ளும். Signal Analogue ஆகவும் மாற்றப்படுகிறது வலை அமைப்புக்காக ஆகும்.

இணையத்தின் மூலம் கல்வி வர்த்தகம் போன்ற பல்வேறு துறைசார்ந்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதியும் காணப்படுகிறது. மின்னஞ்சல் மூலமும் தகவல்களை அனுப்பி தகவல்களைப் பெறலாம்.

இணையத்தின் இணைப்பைப் பெறுவதற்கு கணனி மோடம் (Modem), தொலைபேசி இணைப்பு தேவையான Soft Wore ஆகியன தேவையாகும். இந்த Modem ஆனது கணனிக்கு உள்ளேயோ அல்லது வெளியிலோ இணைக்கப்பட்டு இருக்கும்.

இணையமானது Peer to Peer என்ற அடிப்படைத் தத்துவத்தில் இயங்குகிறது. இணையத்தின் கணனிகள் கேபிள் மூலம் இணைக்கப்பட்டு இருக்கும். இணையமானது நிலத்துக்கு அடியிலும் கடலுக்கடியிலும் கேபிள்கள் மூலம் இணைக்கப்பட்டு இருக்கும். மற்றும் கண்ணாடி நார் இழைகள் மூலமும், செயற்கைக் கோள் மூலமும் இணையத்தில் இணைப்பை ஏற்படுத்தக் கூடியதாகக் காணப்பட்டது.

இந்த இணையத்தை Cyber Space Information Supper High Way எனப் பெயரிட்டு அழைப்பர்.

Modem களின் வளர்ச்சி காரணமாக தகவல் பரிமாற்றத்தின் அளவு அதிகரித்துள்ளதுடன் இன்று Voice mail, Video Conference போன்றனவும் அமைக்க ஏதுவாய் அமைந்துள்ளது.

மின்னஞ்சல் (e -Mail) ஆரம்பத்தில் காணப்பட்டாலும் Internet கண்டு பிடிக்கப்பட்ட பின்னர்தான் அதன் வளர்ச்சி அபரிமிதமானதாக அமைந்தது என அறியமுடியும்.

உலக வலை அமைப்பு மையத்தில் உள்ள தகவல்களைப் பார்வையிடுவதற்கு எமக்கு பிரவுஸர் (Browser) எனப்படும் கணனி மென்பொருள் (Computer soft Ware) அவசியமாகும். Net Scape, Explorer என்பவை பிரபலமான Browser ஆகும்.

உலக வலை மையத்தை உருவாக்கியபெருமை சுவிற்சலாந்து நாட்டைச் சேர்ந்த ரிம் பெர்னர்ஸ் லீ (Tim Bezners Lee) என்ற Soft Ware பொறியியலாளரையே சார்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தின் இணைப்பில் பல சேவர்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றையெல்லாம் இணைத்த வலை அமைப்புத் தான் "வெப்" (Web) என அழைக்கப்படுகிறது.

Webன் ஆரம்பம் 1980 களில் ஆகும். 1989ம் ஆண்டுக்குப் பின்பே Web இணையத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

உலகளாவிய நிலையில் இருக்கும் தகவல் தளங்களை இணையம் மூலம் இணைப்பதை Web என அழைப்பர். Web என்பது இணையத்தின் ஒரு பகுதியாகும். web என்பது உலகளாவிய ரீதியில் இருக்கும் தகவல் தளங்களை இணைப்பதாகும்.

இணையம் மூலம் ஒரு தகவல் or செய்தியைப் பரப்புவதற்காக தகவல் தளத்திற்கே வெப் சைற் (Web Site) என அழைப்பர்.

Web Siteன் ஒரு பக்க தகவலே வெப் பேஜ் ஆகும். பல வெப் பேஜ்கள் சேர்ந்தது ஒரு தகவலாகவும் இருக்கக் கூடும்.

கைப்ப ரெக்ஸ் மாக்கப் லான்கு வேஜ் (Hyper Text markup Language) என்பதன் சுருக்கம் HTML ஆகும். இந்த மொழியை பயன்படுத்தி web page உருவாக்கப்படுகின்றது. இது தவிர "யாவா" (Java) என்ற மொழி (Language) பயன்படுகிறது.

Web page ன் ஒரு பக்கமே Home Page ஆகும். இது எப்போதும் ஆரம்பப் பக்கமாகக் காணப்படுகிறது.

உலகில் உள்ள தேவையான தகவல்களைப் பெற Web Site Address அதாவது Web siteன் முகவரி தேவை ஏற்படும் இணையம் முகவரிகளாக www air lanka com, www ceylon net, www thamil com என எமக்குத் தேவையான Address மூலம் தகவல்களைப் பெறலாம்.

உலகில் இன்று இணையம் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ள கணினிகள் தமக்கிடையிலான டிஜிற்றல் துடிப்புக்களின் மூலம் கணிப் பொறித் தகவல்களையும், மனிதனது சிந்தனையையும் ஒருங்கிணைக்கும் தன்மையை ஏற்படுத்தி உள்ளது.

இத்தகைய இணையத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தகவல் தொடர்பில் ஒரு பரிணாம வளர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என்று கூறினால் மிகையாகாது. Web Site Address களாக

1. www.web ulagam com
2. www.inayam com
3. www.tamil soft wore org
4. www.tamil web com
5. www. tamilcdn. com
6. www. kalpam. com

*

உலகிலேயே அதிகப் பக்கங்களுடன் வந்த பத்திரிகை நியூயார்க் டைம்ஸ் ஆகும் . 1956 ஆம் ஆண்டு மே ஐந்தாம் திகதி —516 பக்கங்களுடன் வெளிவந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை எவ்வாறு வெடிக்கின்றது?

திருமதி ஜெ. சிவமூர்த்தி
ஆரம்பக்கல்வி 2 ஆம் வருடம் A பிரிவு

பூமியின் உட்பாகத்திலிருந்து தீப்பிழம்பாகவும் வாயுக்களாகவும், புகை மண்டலங்களாகவும், நெருப்பு ஊற்றுக்களாகவும் வெடித்துச் சிதறி வெளிக்கிளம்பும் எரிமலையின் சூடேறியபாகம் அண்டியுள்ள தரைப் பகுதிகளையோ அல்லது கடற்பகுதிகளையோ பாதிக்கச்செய்து விடுகின்றன. எரிமலையின் வாய்ப்பகுதி வழியாக தீக்குழம்புடன் தூசிகள் வாயுக்கள் நிறைந்ததாகவே அவை வெளியேறுகின்றன.

எமது பூமியில் 530 க்கும் அதிகமான சக்தி வாய்ந்த எரிமலைகள் உள்ளதாக அறியப்படுகின்றது. அவை எந்த வேளையிலும் வெடித்துச் சிதறும் தன்மையினைக் கொண்டுள்ளன. இவை பூமியின் மேற்பகுதியில் இல்லாது கடலின் அடியிலும் காணப்படுகின்றன. வருடாந்தம் ஏறக்குறைய 25 எரிமலைகளின் தாக்கம் பூமியின் மேற்பரப்பில் நிகழ்கின்றது. அவற்றில் குறிப்பாக இத்தாலி நாட்டிலுள்ள ஸ்ரொம்பொலி (Stomboli) மலையைக் கூறலாம். அடிக்கடி அந்த மலையில் எரிமலை வெடித்துச் சிதறும் சம்பவம் நடைபெறுகின்றது.

இவை எவ்வாறு ஏற்படுகின்றது என்றால் பூமியின் அடிப்பாகத்தில் சூடேறிய பாறைகளும் உலோகப் பாளங்களும் உள்ளதால் அவற்றிடையே ஏற்படும் மிதமிஞ்சிய சூடேற்றம் காரணமாக அவை யாவும் உருகி குழம்பாக அதிக அமுக்கத்துடனும் அதிவேகத்துடனும் மேலெழுந்து வெளித் தள்ளப்படும். வாய்ப்பகுதியில் வெடித்துச் சிதறிய கலவைகள் தீப்பிழம்பாகப் பீரிட்டுப் பாயும் நிலை ஏற்படுகின்றது. உள்பகுதியில் உள்ள பாறைகள் உலோகப் பொருட்கள் உருகும் போதே வாயுக்களும் உருவாகின்றன. இத்தகைய கலப்பு வாயுக்களையும் உருகிய பாறைகளையும் மக்மா (Magma) என அழைக்கப்படும். ஏனென்றால் இவை வாயுக்களின் குமிழ்களாகவும் (Bubbles) அங்கு படிமானமாகவும் சுற்றி இருக்கும். பாறைகளை விடவும் உருகிய பாறைகள் பலம் குறைந் ததாகவும் பாரமற்றதாகவும் இருக்கும்.

இந்த மக்மா எனப்படுவது பூமியின் மேற்புறத்தை நோக்கியதாக நீண்ட பள்ளமான பாதையை ஏற்படுத்தியவாறு கலவைகளுடன் உயர்ந்து செல்லும். சில மக்மா அமைவிடமானது மூன்று கிலோ மீற்றர் ஆழப் பகுதிகளுக்கு கீழே உள்ளன. பூமித் தட்டுக்களில் பல வெடிப்புக்களுடன் கூடிய பலமிழந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளும் இருப்பதால் கீழ்ப்பகுதியில் ஏற்படும் பலமான உதைப்புக்கள் அழுத்தங்கள் காரணமாக பலமிழந்த பகுதிகளுக்கிடையே மக்மா குகை போன்ற வழியை வெடிப்புக்களூடாக ஏற்படுத்திக்கொண்டு மேலெழுகின்றது. மக்மா வெடித்துச் சிதறும் போது எரிமலையாகத் தோற்றம் பெறுகிறது. மக்மாவிலிருந்தெழும் வாயுக்களுடன் சூடேறிய லாவா (Lava) என்ற குழம்பும் சேர்ந்து சூடேறிய லாவா மிக இளகிய "சூப்"போன்றதாய் இருந்தால் அவை வேகமாகப் பாய்ந்து பரந்த பிரதேசங்களுக்குப் பரவி சேதங்களை அதிகரிக்கும். பசுபிக் சமுத்திரத்தின் ஹவாய் மோனாலோவா எரிமலைகளின் தாக்கம் இவ்வாறே நடைபெறுகின்றது. ஜப்பானிலுள்ள பிஜி மலையில் ஏற்படும் எரிமலையானது வித்தியாசமானது. அதன் லாவா தடித்த "ஷிரப்" போன்று அகன்ற குழாயிலிருந்து தள்ளுவது போல் மலையின் நாலாபக்கங்களூடாகவும் பொங்கி வழிந்தோடும் தன்மையுடையது. சில சமயங்களில் மக்மாவிலுள்ள சூடேறிய வாயுக்கள் கசிந்து மேற்புறப் பாறையிலிருக்கும் தண்ணீரைச் சூடாக்குவதாலும் கொதித்த நீர் ஜெட் வேகத்தில் மேலெழுந்து வெடிப்பை ஏற்படுத்துகின்றது. *

"கலைமலர்
கலைமணம்
கமழ
வாழ்த்துகின்றோம்."

சிவா
பிறதேர்ஸ்

* கட்டடப் பொருள்கள்
* இரும்பு வகைகள்
* PVC பைப்

T.P: 222 5116
பலாலி வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

"கலைமலர் தமிழர்களின்
இதய மலராகட்டும்."

அழகிய தங்க நகைகளைச் செய்து
பெற்றுக்கொள்ள நீங்கள் நாட
வேண்டிய ஸ்தாபனம்



மயூரிகா
நகைத் தொழிலகம்



தங்கப்பவுண் நகை வியாபாரம்

நவநாகரிகத்துக்கேற்ற கண்கவர்
நகைகளுக்கு இருபாலைச்சந்தியில்
முதன்நிலை புரியும் நகையகம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து
கொடுக்கப்படும்.

உரிமையாளர்: R.S ராஜ்
T.P. 0777-039128
பருத்தித்துறை வீதி,
இருபாலைச்சந்தி, கோப்பாய்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் அதன் சிறப்பும்

செல்வி.க. பிறேம்னி
2 ஆம் வருடம் சங்கீதநெறி

உலகம் தோன்றிய அந்த நாளிலேயே பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டான ஒலியினை த்வனி என்றனர். அந்த த்வனியின் கிளையாகத் தோன்றியதே நாதம். செவிக்கினிய ஒலியே நாதம். இறைவனே அந்த நாத வடிவமாக இருக்கின்றான் என்கின்றன நமது புராணங்கள்

"நாத விந்து கலாதி நமோ நம"

நாதங்கள் என்பவை தான் ஸ்வரங்கள். அதுதான் த்வனி. ஸ்வரம் என்பது தனக்குத்தானே சுயமாக ரஞ்சகமாக ஒலிக்கப் படுவது, ஸ்வயரஞ்சகம் என்பதன் சுருக்கமே ஸ்வரம் என்பதாகும்.

இசை, சங்கீதம் என்றெல்லாம் வழங்கப்படுகின்ற நாத சேர்க்கை. இனிய ஓசையின் சுருக்கமே இசையாகவும், நல்ல பாடலாகவும் (சம்+கீதம் -சம் என்றால் நல்ல, கீதம் என்றால் பாடலாகும்.) பொருள் படும். இசை ஒவ்வொரு நாட்டின் பாரம்பரியத்தினையும் பண்பாட்டினையும் வெளிப்படுத்தும் கலையம்சமாகும்.

ஒரு நாட்டின் கலாசாரமும் பண்பாட்டு வளர்ச்சியும் இசையினை ஆதாரமாகவே கொண்டு சிறப்படைகின்றன. விஞ்ஞான முறைப்படி உரங்களைத் தூவி வளர்ப்பதற்குப் பதிலாக இசையின் மூலமே செடி, கொடிகளையும் கூட வளர்க்க முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளதால், இசை ஒரு புறம் விஞ்ஞான வளர்ச்சிக்கு அடிகோலும். மறு புறம் இனிய இசை செவிக்கு விருந்தாக அமையும். மழையைப்பொழிவிக்கவும், மன உணர்ச்சிகளை மாற்றவும், விலங்குகளையும், பறவைகளையும் தன்வயப்படுத்தவும் வல்லது இசையென்றால் இதன் சிறப்பிற்கு இணைவேறில்லை. இசைக்கு மட்டுமே இறைவனும் வயப்படுவான்.

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி"

என்ற வரிக்கிணங்க பாரத இசை பழம்பெரும் இசை என்பதும், நாம் அதற்கு உரியோர் என்பதும் நம்முடைய தனிப்பெரும் பெருமை. இன்று உலக அரங்கிலே எத்தனை விதமான மேலைநாட்டு இசை முறைகள் வளர்ந்திருப்பினும் ஆத்மார்த்தமாக பழுத்த மரத்தை நாடிவரும் பறவைக் கூட்டம் போல் மேலை நாட்டார் பலரும் நம் பாரத நாட்டினை நாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து பயிலும் இசை பாரத இசையே. பாரத இசை மூன்று வகைப்படும்.

1) இந்துஸ்தானி இசை
2) கர்நாடக இசை
3) தமிழிசை

இன்று தென்னிந்திய இசை என்று வழங்கப்படும் கர்நாடக இசையும், வட இந்திய இசை எனப்படும் இந்துஸ்தானி இசையுமே சிறப்பான பாரத இசையாகும்.

பாரத இசை தெய்வீகமானது. இந்த இசையினைத் தெய்வங்களே இசைப்பது போல், நம் புராண இதிகாசங்களில் சித்தரிக்கப்படுள்ளதால் நமது இசையின் சிறப்பு மேலும் அதிகமாகிறது. நடனம் ஆடிடும் நடராஜப்பெருமான், விநாயகப் பெருமான், கண்ணபிரான் இவர்களால் நாட்டியத்தின் மேன்மையும். புல்லாங்குழல் இசைக்கும் கண்ணனால் குழலின் மகத்துவமும், மத்தளம் இசைக்கும் பிரமதேவன், நந்திதேவனால் தாளத்தின் சிறப்பும், வீணை வாசிக்கும் கலைமகளால் யாழின் சிறப்பும் சேர்ந்து மக்களின் மனதில் இசைக் கருவிகளுக்கு ஒரு தெய்வீகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. இசைக் கருவிகளை காணும் மக்கள் யாவரும் அதனைத் தொட்டு வணங்குவதே அதன் சிறப்பாகும் இனிமையான ஓசை என்பதன் சுருக்கமே இசையாகும். இந்த இசை கேட்பவரின் மனத்தினை மயக்குவதற்கு மட்டும் அல்லாமல் பல வித மாற்றங்களையும் உண்டாக்குகின்றது.

இந்த வகையில் இசையால் மயங்காதது அதாவது வசமாகாத எதுவும் இவ்வுலகில் இல்லை. மனிதர், விலங்குகள், பறவைகள், ஊர்வன, மரம், செடி கொடிகள் ஏன் கல்லுக்கூட வசமாகும். சிவனை இசையால் சாமகானம் பாடி வசமாக்கியவன் இராவணன். அவன் மட்டுமல்ல தேவார முதலிகள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரம் பாடி இறைவனை வசமாக்கி பல தொண்டுகளை ஆற்றியுள்ளார்கள். இதிலிருந்து இசையின் சிறப்பை அறிய முடிகின்றது. *

"கலாசாலையின் அற்புத படைப்பாம் கலைமலருக்கு
எமது கனிவான வாழ்த்துக்கள்."

விஜய் போட்டோ



✦ கலர் போட்டோ
✦ வீடியோ
✦ பந்தல்
✦ ஓட்டோ சேவை








T.P : 0777 - 148704
0777 - 283609

கோண்டாவில் றோட்,
இருபாலை,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# போதைப் பொருள் பாவனையால் அழிவை நோக்கிச் செல்லும் மனித இனம்

செல்வி சரஸ்வதி வேலுப்பிள்ளை
ஆரம்பக்கல்வி 2ஆம் வருடம் D பிரிவு

உலகில் கோடான கோடிப் படைப்புக்கள் உள்ளன. அவற்றில் அதிசிறப்புக் குரியதும், நன்மை தீமைகளைப் பிரித்தறியக் கூடிய பகுத்தறிவைப் பெற்ற ஒரே படைப்பு மனித இனம்தான்.

இவ்வகையான சிறப்புமிக்க மனித இனம் தனக்குத்தானே தீங்குகளையும்,கெடுதிகளையும் தேடிக் கொள்கின்றது. அவற்றால் துன்பங்களையும்,நெருக்கடிகளையும் அனுபவிப்பது மட்டுமல்லாமல் தானாகவே அழிந்து கொண்டிருக்கின்றது. இதுதான் இன்றைய உலகில் பெரும் கவலைக்குரிய விடயம்.

அந்த வகையில் மனித சமுதாயம் எதிர் கொண்டுள்ள தீங்கை எடுத்துப் பார்த்தால் அது தானாகவே தோற்றம் பெறவில்லையென்பதும்,மனிதனின் பிழையானதும், முறையற்றதுமான செயற்பாடுகளின் விளைவாகவே பலவிதமான தீங்குகள் உருவாகியுள்ளன. குறிப்பாக நோய் நொடிகளை எடுத்துப் பார்த்தாலும், ஆயுத மோதல் காரணமான விளைவுகளை ஆழமாக நோக்கினாலும் இந்த உண்மைகள் புலப்படும்.

மனிதனின் ஆரோக்கியத்திற்குத் தேவையான சகலவித வழிகாட்டலும் தெளிவான முறையில் இருக்கின்றன. அவற்றை முறையாகப் பெற்றுக்கொள்ள வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். இதற்கென அறிவு என்கின்ற கொடை கிடைக்கப்பெற்றனவாகவே மனிதன் படைக்கப் பெற்றிருக்கின்றான்.இருந்தும் இவ்வறிவை மனிதன் சரியான முறையில் பயன்படுத்துவதில்லை. தன் மனம் போன போக்கிலேயே பெரும்பாலும் செயற்படுகின்றான். அதனால்தான் பல்வேறு விதமான கெடுதிகளுக்கும், தீங்குகளுக்கும் அவன் முகம் கொடுக்கின்றான். இதில் ஐயம் இல்லை.

அந்த அடிப்படையில் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் இப்போது அதிகளவு பேசப்படுகின்ற போதைப்பொருட் பாவனையால் ஏற்படும் விளைவுகளையும் எச். ஐ. வி. அல்லது எயிட்சை எடுத்துப் பார்த்தாலும் அதற்கும் மனிதனின் முறையற்ற செயற்பாடுகள் அடிப்படைக் காரணம் என்பது தெளிவாகும். இவற்றின் தீங்குகளிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்வதற்காகப் பரவலான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால் அவை முழுமையான வெற்றியை இன்னும் அளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வருடம் ஆரம்பநெறி "C" ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வருடம் ஆரம்பநெறி "D" ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுவாகப் போதைப் பொருட்கள் மனித உடலுக்கு ஏற்றவையல்ல. அவற்றில் மனித உடலுக்குத் தீங்கு ஏற்படுத்தக்கூடிய பல இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கிஉள்ளன. அதனால் இப்போதைப் பொருள்களைப் பாவிக்கும்போது பெரும்பாலும் சுயநினைவை இழக்க நேரிடும். இது சமுக சீர்கேடுகளிலும், முறையற்ற பாலியல் தொடர்புகளிலும் ஈடு படுத்துவதற்கும் ஊக்கமளிக்கும் முறையற்ற பாலுறவானது எச்.ஐ.வி. பரவுவதற்கான பிர தான வழியாக விளங்குகின்றது.

இதே நேரம் உடலின் சீரான இயக் கம் சிறுகச் சிறுகப் பாதிக்கப்படும். உடற் கலங்களும் சிதைவுறும், உடலாரோக்கியம் காலப்போக்கில் சீர்கெடும், அதனால்தான் போதைப் பொருள் பாவனை தடைசெய்யப் பட்டிருக்கின்றது. அவற்றைத் தடுத்துக்கொள் ளும்படி மருத்துவ நிபுணர்களாலும், சமுக நலன் விரும்பிகளாலும் அறிவூட்டப்படுகின் றது. ஆயினும் போதைப் பொருள்பாவனை குறைவடைந்திருப்பதாகத் தெரியவில்லை. கணிப்பீடுகளும், புள்ளி விபரங்களும் இதன் பாவனை அதிகரித்துச் செல்வதையே உறு திப்படுத்துகின்றன.

இன்றைய காலகட்டத்தில் போதைப் பொருள் பாவனை பலவிதமான முறையில் இடம்பெறுகின்றது. அதில் ஊசிகளையும், சிறிஞ்சிகளையும் பயன்படுத்தி மேற்கொள் ளும் முறையும் ஒன்றாகும். இம்முறையானது இப்போது முழு உலகையும் கிலிகொள்ளச் செய்திருக்கும் எச்.ஐ.வி.பரவுவதற்கான முக் கிய வழிகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.எவ் வாறெனில் இவ்வகையான போதைப்பொருள் துஷ்ப்பிரயோகத்தில் பலர் இணைந்துதான் செயற்படுகின்றனர். அப்போது ஒரு ஊசியை யும் ஒரு சிறிஞ்சரையுமே சகலரும் பகிர்ந்து கொள்வர். அவற்றை இவர்கள் முறைப்படி தொற்று நீக்கம் செய்து பகிர்ந்துகொள்வார் களென எதிர்பார்க்க முடியாது.

இதன்காரணத்தினால்தான் போதைப் பொருள் துஷ்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர் கள் வாழுகின்ற எல்லா நாடுகளுமே எச். ஐ. வி. அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கின்றன. குறிப்பாக ரஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், இந்தியா, ஆஜன்ரீனா, ஸ்பெயின், மியான்மார் போன்ற நாடுகளில் தீவிரமாகப் பரவுவதற்கு இதுவும் ஒரு காரணியாக மாறி யுள்ளது.

உலகில் நூற்றுப்பதின்நான்கு நாடு களில் போதைப்பொருட் துஷ் பிரயோகத்தின் மூலம் எச்.ஐ.வி.பரவியுள்ளது மட்டுமல்லாமல் தற்போது எச்.ஐ.வி.க்கு உள்ளாகி இருப்பவர்க ளில் அரைவாசிக்கும்மேற்பட்டோர் போதைப் பொருள் பாவனையாளர்களாக விளங்கியவர் கள் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோல் இலங்கையிலும்போதைப் பொருள் துஷ்ப்பிரயோகத்தில் ஈடுபடுபவர் கள் இருக்கத்தான் செய்கின்றனர். அவர்கள் எவ்வளவு தொகையினர் என்பது சரியாகக் கூற முடியாது. ஆனால் முழு உலகிலும் அறு பது லட்சம் முதல் ஒரு கோடி பேர்வரை போதைப் பொருள் துஷ்பிரயோகததில் ஈடு படுபவர்கள் இருக்கின்றனர் என மதிப்பிடப் பட்டுள்ளது.

ஆகவே போதைப்பொருள் துஷ்ப்பிர யோகத்தில் ஈடுபடுபவர்கள் எச்.ஐ.வி. அச் சுறுத்தலுக்கு முகம் கொடுத்தே ஆகவேண் டும்.அதிலிருந்து தவிர்த்துக் கொள்வது ஆக்க பூர்வமானகாரியம் என்ற முடிவுக்கு வரக்கூடிய தாகவுள்ளது. அதனால் போதைப் பொருட் பாவனையிலிருந்து தவிர்த்துக் கொள்ள ஒவ் வொருவரும் முயற்சிசெய்ய வேண்டும். இதன் மூலம் எச்.ஐ.வி அச்சுறுத்தலையும்,போதைப் பொருள் பாவனையின் விளைவான பாதிப்புக் களையும் தவிர்த்துக்கொள்ளலாம். *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விழுமியங்களைப் பேணுவதன் அவசியம்

திரு. கா. தருமசீலன்
ஆரம்பநெறி 2 ஆம் வருடம் B பிரிவு

சமுதாயத்தில் தொன்றுதொட்டுப் பேணப்பட்டு வந்த பழக்கவழக்க ஒழுக்க நெறியின் சட்டக் கோவைகளே சமூக விழுமியங்களாகும். இவ்சமூகவிழுமியங்கள் இனம், மொழி, சமயம், சாதி என்பவற்றிற் கேற்ப வேறுபட்டுச் செல்லும். இன்று உலகம் சுருங்கினாலும் அந்தந்த இனம், தமது சமூக விழுமியங்களாகிய கடமை, கண்ணியம், சடங்கு, சமயம், ஒழுகலாறு, தாராண்மை, பெரியோருக்குக் கீழ்ப்படிதல், பொறுமை, சகிப்புத்தன்மை, அன்பு போன்ற நெறிகளைக் கடைப்பிடித்தல் அவசியமாகும். தமது சமூகத்திற்குப் பொருந்தும் வகையிலேயே ஏனைய உலக சமூக விழுமியத்தை இணைக்க வேண்டும். (பொருந்தாததைக் கைவிட வேண்டும்.) அவ்வாறன்றி இணைத்தால் தீமையாகவே முடியும்.

ஒழுக்க விழுமியங்களைத் துன்ப துயரம் வந்தாலும் ஒவ்வொருவரும் பேண வேண்டும் என்பதை வள்ளுவர்

"ஒழுக்கம் விழும்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்ற குறள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார். மனப்பயிற்சி, உடற்பயிற்சி மூலமே ஒழுக்க விழுமியத்தை உயர்த்த முடியும். இது ஒருவனைத் தெய்வநிலைக்கு இட்டுச் செல்லும். சமூக விழுமியத்தைப் பேணாது விடின் சமூக விழுமியத்தை மீறியவருக்கும் அச் சமூகத்திற்கும் நீங்காத பழியாக மாறும். ஒருவன் விழுமியத்தை மதிக்காது விடின் அது இன்னொருவனுக்குப் பாதகமாக அமையும்.

ஒருவனுடைய வாழ்க்கையில் அவன் இம்மைக்கும் மறுமைக்கும் சமூகவிழுமியங்களைப் பேணும் தன்மையே உதவும். ஒருவன் விழுமியங்களைச் சரியாகப் பேண வேண்டுமாயின் உலகத்தைப் பற்றியும் உலக மக்கள் வாழ்க்கை முறை பற்றியும் , சமய விழுமியங்களைப் பற்றியும் தெய்வக் கோட்பாடு பற்றியும் அறிய கல்வி என்ற கடலில் இறங்க வேண்டும். இறங்கினால் மட்டும் போதாது. கற்ற கல்விக்கேற்ப ஒழுக வேண்டும். இவ்வாறு அவன் ஒழுக ஒழுக தாமரை நீர் உயருவது போல் அவன் உலகில் சான்றோனாக உயர்த்தப்பட்டு அவன் மக்களுக்கு அருமருந்தாகப் பேணப் படுவான். சமுக விழுமியத்தைப் பேணாதவர்கள் சமுதாயத்தில் விசத்தை வைத்திருக்கும் நச்சுப் பாம்பாக இருப்பார்கள். கொடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசமாகிய தீயபண்புகளை நீக்கி ஒருவன் அமுதமாகிய நல்ல பண்புகளைப் போற்றி வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

"எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "

என்பதற்கேற்ப விசமிகளின் தீய எண்ணங் களை அறியாது தனிமனிதனும் சமுகமும் பேராதிக்கத்திற்கு ஆட்பட்டு அடிமைப்பட்டு நசுக்கப்படுகிறது.

ஒரு சமுதாயத்தில் வாழ்பவர் ஏனைய சமூகத்திற்குப் போட்டி போட வேண்டுமாயின் அச்சமூகத்திலுள்ளவர்கள் ஆற்றல் வாய்ந் தவர்களாக,அறிவு நிறைந்தவர்களாக ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதோடு ஒருவரை ஒருவர் பேணி தனக்கும் தனது நாட்டிற்கும் தனது ஆற்றலை பயன்படுத்த வேண்டும்.

கண்ணபிரான் பகவத்கீதையில் சிறந்த விழுமியங்களைப் பற்றிக் குறிப்பிடும் போது ஆசையோடு கடமை ஆற்றுவது கொந்தளிக்கும் கடலுக்கும், ஆசையற்ற கடமை அமைதியான கடலுக்கும் ஒப்பிடுவர். இதனால் சுயநலம்விட்டு பொதுநலமாக தர்மசிந்தனையோடு, இரக்க சிந்தனையோடு கடமை ஆற்ற வேண்டும். இக்காலத்தில் மனிதன் தனது அடிப்படைத் தேவையை விட்டு ஆடம்பரத் தேவைக்காக வறட்டுப் பெருமைக்காக தர்மம் நீதியைக் கைவிட்டு நிம்மதி இழந்து போட்டி, பொறாமை, எரிச் சல் காமுகனாகவும் காமப் பாடலை இரசித்துத் திரியும் புல்லராகவும் பெரும் பான்மை மனிதர்கள் திரிகின்றார்கள். பலம், பலவீனத்தைப் பார்த்து ஏமாற்றிப் பிழைக்கும் நரிகளாக மாறிவிட்டார்கள். நரிகளிடம் இருந்து மனிதன் தப்பவேண்டுமாயின் மனிதன் மனிதத்தன்மையுள்ளவன் கடவுள் என்னும் கருணை வள்ளல் எங்கள் அருகாமையில்தான் உள்ளான். அவனிடம் ஒவ்வொருநாளும் அவரவர் சமய முறைக் கேற்ப இறைவன் இறையருளாளர் வகுத்துத் தந்த பாதையே எல்லாப் பாதையிலும் சிறந்த பாதை. நம்மை ஆபத்திலிருந்து காப்பது, அறிவுப்பசி போக்குவது, ஆசைப்பசி நீக்கு வது, ஞானப்பசி தீர்ப்பது, எமக்கு அருள் மழை பொழியக் காத்திருக்கின்றான் இதைச் சமயத்தில் ஊன்றியவர்கள் புரிந்து கொள்வர்.

கல்விச் சமுதாயம் ஓடும் நீரோட்டம். ஒவ்வொருவர் பற்றி வைத்திருக்கும் நம்பிக்கை நான் வாழுவேன், நாம் வாழு வோம் என்று உறுதி பூண்டு சிறந்த வழி களைக் கையாண்டு மன உழைப்பு, உடல் உழைப்பு போன்ற உழைப்பின் மூலம் நம் பிக்கை என்ற முதுகெலும்போடு சமூக விழுமி யங்களைப் பேணி வாழ வேண்டும்.

சமூகவிழுமியத்தில் ஆசிரியனது பங்கு முக்கியமானது. ஆசிரியர் தொடர்ந்து கற்க வேண்டும். கற்பிக்க வேண்டும் உயர் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்ய வேண்டும்.ஆலோசகராக மாணவரை உயர்த் தும் ஏணிப்படியாக, சட்டதிட்டங்களை மதிப் பவராக, உண்மை அரசியலை உணர்ந்து அவ்வரசுக்காக, அம்மக்களுக்காக ஆசிரியத் துவம் மிளிர வேண்டும்.

மேலை நாடுகள் உயர்ந்ததற்கும் சிறந்த ஆசிரியத்துவமே காரணம். எமது நாடு உயர சிறந்த அசிரியவாண்மையை ஏற்படுத்திச் செயற்படும் வீரராக ஆசிரியர் விளங்க வேண்டும். இவ்வாறு ஆசிரியரும் உயர் விழுமியங்களை நடைமுறைப்படுத்து பவராக இருக்க வேண்டும். நாம் அனைவரும் விழுமியச் சுடரை மதித்து நடப்பது அவசியம். *

பறவைகளுக்கு வியர்வைச் சுரப்பிகளே கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுமுறைகள்
(Leaves)

திரு. கா. நந்தகுமார்
ஆரம்பக்கல்வி 2 ஆம் வருடம் D பிரிவு

அலுவலரது விடுமுறைகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளேயன்றி உரிமைகள் அல்ல. இவ்விடுமுறைகள் பின் வருமாறு வகைப்படும்.

1. அமைய விடுமுறை (Casual Leave)
2. ஓய்வு விடுமுறை (Vacation Leave)
3. சுகயீன விடுமுறை (Sick Leave)
4. வெளிநாட்டு விடுமுறை
   அ) கல்விக்கான வெளிநாட்டு விடுமுறை
   ஆ) உத்தியோகத்திற்கான வெளிநாட்டு விடுமுறை.
5. விசேட விடுமுறை (Special Leave)
6. கடமை விடுமுறை (Duty Leave)
7. சம்பளமற்ற விடுமுறை (Nopay Leave)

**அமைய விடுமுறை** (Casual Leave)

அரச அலுவலர்கள் சந்தர்ப்ப வசத்தால் தமது உத்தியோகத்திற்கு சமூகமளிக்காது விடுமிடத்து அவர்கள் தனிப்பட்ட தேவை, அவசியம் காரணமாக பெற்றுக் கொள்ளும் பொருட்டு இவ்விடுமுறை வழங்கப்படும். ஆண்டொன்றிற்கு 21 நாட்கள் இவ் விடுமுறை வழங்கப்படும்.

**ஓய்வு விடுமுறை** (Vacation Leave)

அலுவலர் தொடர்ந்து தமது கடமையைப் புரிவதால் சலிப்படைவார்கள். அவர்களுக்கு சிறிது ஓய்வு கிடைக்குமானால் அவர்களது சலிப்பு மாற்றப்பட்டு தமது பணியில் அக்கறை செலுத்த முடியும். இக் காரணத்தாலேயே இவ்விடுமுறை வழங்கப்படுகின்றது. பொதுவாக பணியாளர்களுக்கு ஆண்டொன்றிற்கு 24 நாட்கள் வழங்கப்படுகின்றது. சில வகைப்பணியாளர்களுக்கு அவர்களின் சேவை வாரத்திற்கு ஏழு நாட்களாகக் காணப்படும் போது அவர்களுக்கு 28 நாட்கள் வழங்கப்படுகின்றது. ஒரு ஆண்டிற்குரிய விடுமுறையில் எஞ்சியவை அடுத்த ஆண்டில் சேர்த்துப் பயன்படுத்த முடியும்.

**சுகயீன அல்லது பிணி விடுமுறை**
(Sick Leave)

ஒரு உத்தியோகத்தர் சுகயீனம் காரணமாக அலுவலகத்திற்கு சமூகமளிக்காதிருந்தால் அது சுகயீன விடுமுறை என அழைக்கப்படும். இரண்டு நாட்களிற்கு மேல் சுகயீன விடுமுறையில் நின்றால் வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அரச அல்லது ஆயுள்வேத அல்லது தனிப்பட்ட வைத்திய சான்றிதழை ஏற்றுக் கொள்ளலாம். திணைக்களத் தலைவர் ஒரு பணியாளரின் தேகநிலை கருதி தேவையேற்படும் சந்தர்ப் பத்தில் அல்லது வழமையாக 3 மாத சுகயீன விடுமுறையில் நிற்பவரை அவர் சேவைசெய்ய உடல்நிலை சரியாக உள்ளதா என்பதை அறிய அவரின் சம்பளம் நிறுத்தப்பட்டு அரச வைத்திய சபைக்குத் தோற்றுமாறு வேண்டு தல் செய்யலாம்.திணைக்களத் தலைவரி னால் பொது 142 படிவத்தில் வைத்திய சபை உள்ள பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு விண்ணப்பத்தினை அனுப்பி வைப்பார்.3விசேட வைத்தியர்களைக் கொண்ட வைத்தியசபை குறிப்பிட்ட உத்தி யோகத்தரைப் பரிசோதனை செய்து அவர் தொடர்ந்து அரசசேவையில் சேவையாற்றத் தகுதியான உடல்நிலையை உடையவராக அல்லது இலகுவான கடமைகள் வழங்கப் படவேண்டுமா அல்லது கடமையாற்றத் தகுதி யற்றவரா எனச் சிபார்சு செய்யும். அத்துடன் தங்களது சிபார்சில் உத்தியோகத்தரின் விடுமுறை வைத்திய விடுமுறையா எனச் சிபார்சு செய்யும். சிறுபணியாளர்கள் ஓய்வு விடுமுறைக்கு உரித்தற்றவர்கள். 24 நாள் சுக யீன லீவு பெறலாம். ஆசிரியர்கள் 20 நாட் கள் சுகயீன விடுமுறை பெறலாம்.

### பிரசவ விடுமுறை

திருமணமான பெண் அரச உத்தி யோகத்தருக்கு பிரசவ விடுமுறை வழங்கப் படுகின்றது. தற்போது உயிருடன் பிரசவிக் கும் முதல் இரு குழந்தைகளுக்கும் 12 வாரங் கள் என்ற அடிப்படையில் வழங்கப்படுகின் றது. இந்த 84 நாட்களும் இக்காலப் பகுதி யில் வரும் சனி, ஞாயிறு போன்ற வார இறுதி நாட்கள் சேர்க்கப்படாது கணிக்கப்படும். குழந்தை இறந்து பிறந்தால் அல்லது குழந்தை பிறந்து 6 வாரம் செல்லு முன் இறந்தால் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட பிரசவங்களுக்கு 6 வாரம் பிரசவ விடுமுறை வழங்கப்படுகின்றது. வழங்கப்படும் 12 வார விடுமுறையில் பிரசவ வைத்திய நிபுணரின் சிபாரிசுக்கமைய பிரசவத் திகதிக்கு 2 வாரம் முன்பிருந்தே இவ் விடுமுறையைப் பெற லாம். தற்போது பதிவு செய்யப்படாது திரு மணங்கள் நடைபெறுவதால் வன்முறையால் சட்டப்படி பிரசவிக்காத பிரசவங்களுக்கும், குறிப்பிட்ட பிள்ளை குறித்த அலுவலருக்குப் பிறந்துள்ளது என நிருபணமாகும் பட்சத்தில் அரச அலுவலருக்கு வழங்கப்படும் சலுகை இப்பிரசவத்திற்கும் வழங்கப்படுகின்றது.

தற்போது பொ.நி.சு 16 /99 க்கமைய சம்பளமற்ற பிரசவ (விசேட) விடுமுறை அனுமதியளிக்கப்படுகின்றது. இதற்கு ஒரு குழந்தை பிறப்பதற்கு ஆகக்கூடிய 6 மாத காலம் சம்பளமற்ற பிரசவ (விசேட) விடு முறை வழங்க முடியும். இது உத்தியோகத் தரது சேவைக் காலத்தில் ஆகக்கூடியது ஒருவருட காலத்திற்குப் பெறலாம்.

### வெளிநாட்டில் கல்வி கற்பதற்கான சம்பளமற்ற விடுமுறை

பொதுவாக சேவையிலுறுதிப்படுத் தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வழங்கப் படுகிறது. திணைக்களத் தலைவர் குறிப்பிட்ட அலுவலர் இக்கற்கை நெறிக்குச் செல்வ தால் அவரின் சேவை வினைத்திறமையுடை யதாக அமையும் எனக்கருதும் பட்சத்தில் இக்கற்கைநெறி உத்தியோகத்தரின் தொழில் தொடர்பானதென்றும் உத்தியோகத்தர் இக் கற்கை நெறிக்குத் தகுதியானவர் எனவும் உறுதிசெய்யும் பட்சத்தில் இது வழங்கப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டில் தொழில்பார்ப்பதற்காக சம்பளமற்ற விடுமுறையினை அனுமதிப் பதற்கான நிபந்தனைகள்

சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட 4 வருட சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோ கத்தர்களுக்கு வெளிநாட்டிற்குச் சென்று தொழில்பார்த்து தனது வருமானத்தை அதி கரிக்கும் நோக்கத்திற்காக ஒரு சலுகையாக இவ்விடுமுறை அனுமதிக்கப்படுகிறது. குறிப் பிட்ட உத்தியோகத்தர் வெளிநாடு செல் வதற்கு முன்பாக அரசிற்குச் செலுத்த வேண் டிய நிலுவைகள் யாவற்றையும் செலுத்துதல் வேண்டும்.

### விசேட விடுமுறை (Special Leave)

பின்வரும் சந்தர்ப்பங்களில் விசேட விடுமுறை வழங்கப்படுகின்றது.

1. இஸ்லாம்மத உத்தியோகத்தர்களுக்கு சமய அனுட்டானங்களுக்காக பி.ப.1.00 மணியிலிருந்து 2 மணித்தியாலங்களுக்கு மேற்படாது வெள்ளிக்கிழமைகளில் வழங் கப்படுகின்றது.

2. உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ விளை யாட்டு வீரராகவோ அல்லது வீராங்கனை யாகவோ இலங்கையின் பிரதிநிதியாக செல்லும் போது அல்லது பயிற்சியளித் தல், கண்காணித்தல் சம்பந்தமாகச் சர்வ தேச பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் போது விசேட விடுமுறை வழங்கப்படு கின்றது.

3. கருத்தரித்த 5 மாத முடிவில் இருந்து குழந்தை பிறக்கும் வரை ½ மணித்தியா லம் பிந்திவரவும்.½ மணித்தியாலம் முந் திச் செல்லவும் அனுமதிக்கப்படுகிறது.

4. குழந்தை பிறந்து 6 மாதங்களுக்கு பாலூட்டுவதற்கு 1 மணித்தியாலம் விடு முறை வழங்கப்படுகிறது.

### கடமை விடுமுறை (Duty Leave)

உத்தியோகக் கடமை தொடர்பாக சேவை நிலையத்திற்கு வெளியே கழிக்க வேண்டிய தேவையேற்படுமிடத்தில் கடமை விடுமுறை வழங்கப்படுகின்றது.

உதாரணம்:

1. அலுவலகக் கடமை தொடர்பாக காணிக் கச்சேரிக்குச் செல்லும் போது.
2. அலுவலக வேலை தொடர்பாக நீதிமன்றம் செல்லும் போது.

### சம்பளமற்ற விடுமுறை (Nopay Leave)

பின்வரும் காரணங்களுக்காக சம்பள மற்ற விடுமுறை வழங்கப்படுகிறது.

1. சகல விடுமுறைகளும் முடிவடைந்ததும், வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக் காத பட்சத்தில் அல்லது ஒரு தண்ட னையாக சம்பளமற்ற விடுமுறை வழங்கப் படுதல்.
2. வெளிநாட்டில் தொழில் புரிவதற்காக.
3. வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக. *

* உசாத்துணை நூல்

அரசதிணைக்கள ஸ்தாபன வேலைகளும் அலுவலக நடைமுறைகளும்.

தொகுப்பு
1. திரு.தங்கேஸ்வரராஜா - ஜெயராஜ் (நிர்வாக உத்தியோகத்தர்,பிரதேச செயலகம்,வவுனியா.)
2. திரு. நமசிவாயம் - கமலநாதன் (நிர்வாக உத்தியோக்கதர் ,மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அலுவலகம்,வவுனியா.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHILD ABUSE

Mr.R. Perinpanathan
Primary 2nd Year A

In almost all countries the rights of children are Violated. It is termed as child abuse. Stage agencies as well as armed gangs abuse children. The abuse could be cruel punishments, torture and this appear oven in the family. Children suffer abuse through practices such as manual labour and prostitution. Although there are lows against child abuse the abuse of the children continues to exist.

Poverty and the break down of families have left millions of children home less or on the streets where they have to look after themselves. Thuo they are subjected to different kinds of environmental situations which change their whole life. The children on the streets are enforced to violence and the mercy of criminals. Education for these children are denied there fore they grow up uneducated with hatred and ill - feeling towards the country and people. They turn as Criminals. robbers. and thieves.

Some parents in village, areas try to keep children from attending school. They keep their children as helpers in their farm. This tendency keeps the children uneducated youths. They become less. Mannerd stupid and less understanding. these parents don't understand that keeping back a child from education is more harmful to the child in future. They don't understand the success of educated youths in life. These youths are left out in social life as poor ignorant youths.

Poor parents with a lot of children send their children to work and to earn for them. They are employed in factories, rich houses, work shops and hotels. These poor



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

children are given more are beaten, tortured and given severe punishments and they are given penalty too.

An abused child may become a dangerous citizen of the community. Because his or her potential talents are spoiled at early age or stage. So then the person automatically loses his morality. And he is also mentally affected.

The poverty in the undeveloped countries has made children frustrated. Because of their scarcity of food and clothing they have a tendency to go after movements.

Now the world organizations such as UNO, UNHCR have taken several useful measures to safeguard the infant children from child abuse. *

***Love is a product of habit lucretius***
De Rerum Natura

"நாளைய உலகில் நல்இலக்கியமாய்த்
திகழ நல்வாழ்த்துக்கள்."

நவீன அழகிய
சிங்கப்பூர் நகைகளுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

சிங்கப்பூர் ஜுவல்லறி







93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 - 4590260



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டாம் வருடம் நுண்கலை நெறி ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாம் வருடம் நுண்கலை நெறி ஆசிரிய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

27082 PL

# HOW TO LEARN ENGLISH

Mrs.Ida.Arunthavanathan
Primary 2nd Year,A

English is considered as an international language and English is spoken all over the world. It links all countries together. So most of the people in the world desire to learn English. In our county all subjects are taught in mother tongue at schools. In primary classes students. learn English with great pleasure. But in secondary classes students begin to hate English Language. Why?

Our mother tongue Tamil is a rich language There are two hundred and forty - seven alphabets to represent two hundred and forty - seven phonemes in Tamil. An alphabet represents one phoneme only. So if anyone knows all the alphabets he can read and write Tamil properly. But English is completely a quite different language. There are only twenty - six alphabets in English to represent about forty - five phonemes. Certain alphabets represent two or three phonemes. Example(10 arm(a:) (2) at (a), (3) all () : 1)(4) accident x as there is no correlation between the letters and the phonemes. Those who learn English as a second language find it very difficult to pronounce the words properly. Silent letters and omitted letters are another problem faced by Tamil learners of English. E.g:(1) knife (naif(2) I' II. The irregular plural and the irregular past tense are also an acuate problem for a learner of English.

**The word order in English is as follows:-**

(1) subject (2) Verb (3) object In Tamil the word order is different (1) Subject (2) object (3) Verb. The word



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

order confuses the pupils to a great extent. If anyone desires to learn English he should make some earnest efforts to speak read and write English properly. "Practice makes us perfect" so let's practice English every where to learn English without anguish, Each and everyone should read English books and magazines. we should read English books and magazines. We should write letters in English and speak English every where. Besides we should do translation. (English into Tamil and Tamil into English) Teachers can guide and help us. We should memorize the spelling of difficult words. All teachers of English should motivate each and every student to learn English should to learn English for a bright and prosperous future. At homes parents should encourage their children to learn more English.

Taking English for our consideration it is growing language and new words are still borrowed from other language sand technical terms are created. So by developing the vocabulary or range of words in English language. students are able to understand the beauty and deepness of English language. To learn English well students should increase their word power. Practice makes us perfect; as it is said, when we study English we should have some equipments with us. A good dictionary, standard books on grammar, a correct guide to pronunciation a small encyclopedia, works of famous writers should be available in the study - room of a student .This is a useful method for "How to learn English" *

*Those marriages generally abound most with love and constancy that preceded by a long courtship.*

-Joseph Addison, The Spectator, Dec. 29 1711

*When a match has equal partners. then I fear not.*

- Aeschylus, Prometheus Bound



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOSQUITOES

Miss.T. Kalaivany
Primary 2nd Year,A

There are about 2000 species of mosquitoes. These two -winged insects are the carriers of several of dangerous diseases. The fight against mosquitoes is an unending problem. They are found from the tropics to the Arctic circle and from lowlands to the peaks of high mountains .Mosquitoes. have long, slender wings and are unusual among flies in having small scales over most of the wing veins. The body is narrow. The long and antennae have numerous whorls of hair, short in the female and long and bushy in the male. in one large group of male. In one large group of mosquitoes, the mouthparts of the female are long, adapted for piercing and for sucking blood. The male, which feeds on nectar and water, has rudimentary mouth parts. Females of this group prefer the blood of warm blooded animals. When they bite, they inject some of their salivary fluid into the wound, causing swelling and irritation. They inject infectious Micro-organisms and thus transmit such diseases such as Malaria, Yellow fever, Dengue, and Filariasis.

Female mosquitoes lay their eggs. Only in water, some species lay their eggs in running water, others in wood land pools. marshes, swamps, estuaries, or in containers such as rain barrels. The larvae are know as wrigglers because of their wriggling motion in the water. A large number of mosquitoes eggs and larvae destroyed by small fish. Mosquitoes may be controlled by eliminating their breeding places or by spraying these places with Oil or insecticides.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The common house mosquitoes is a carrier of encephalitis. Other species are the factors for spreading of yellow fever and dengue. Several species of a related group transmit Malaria. This group is characterized by palpate, or sense organs on the mouth parts that are as long as the female. The wings of these mosquitoes are spotted with white and dark areas. These mosquitoes rest with the head and the sucking tape lies horizontally parallel to the surface on which they are resting and with the body bent at an angle to this surface; other mosquitoes, including the common house mosquitoes rest with the body parallel and with the head at an angle to the surface.

Another species the Asian tiger mosquitoes has caused health experts concern. since this fierce biter can spread a type of encephalitis, dengue fever and other diseases.

It is found that even powerful pesticides could not eliminate these dangerous insects completely.The modern researches should be attempted to eliminate these species from the environment. *

*With best compliments from.*

***Cat***
***your best friend!***




Get your catcard from the nearest Commercial Bank Branch.

**Commercial Bank.**
**'Our interest is in you."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு
(சிறுகதை)

செல்வி.யசோதா சிவப்பிரகாசம்
ஆரம்பக்கல்வி 1ஆம் வருடம் B பிரிவு

காலைக் கதிரவனின் உதயமும் பறவைகளின் இசைகளும் சங்கவியை தூக்கத்திலிருந்து எழுப்பியது. அவசரமாக எழும்பியவளை சுவரில் இருந்த கடிகாரம் ஆறு மணி என்பதையும் விளம்பரப்படுத்தவே தாயைத் தேடி அடுக்களைப்பக்கம் சென்றாள். " பாவம் அம்மா எனக்காக எதையும் செய்வாள் இன்றும் கூட வேளைக்கே எழும்பிவிட்டா"தனக்குள்ளே எண்ணிக்கொண்டு சென்றவளின் காலடி அரவம் கேட்டு அடுப்பைப் பற்ற வைத்துவிட்டுத் திரும்பிய கனகம் " சங்கா இன்று ஸ்கூலில் உனக்குப் பேச்சுப்போட்டி என்றால் ஏதும் படிச்சுப்பாத்திட்டுப் போவன்" கனகம்சொல்லி முடித்ததும்" அம்மா நடுவர்கள் தரும் தலைப்பில் உடன்தான் பேசவேண்டும். அவர்கள் என்ன தலைப்பைத் தருவார்களோ நான் எதை என்று படிச்சுப் பார்க்கிறது" சொல்லிக் கொண்டே கிணற்றடிப் பக்கம் போனாள்.

சங்கா பேச்சில் புலிதான்.பேச்சுப் போட்டிக்கென்று போய் எங்கையும் தோல்வி கண்டதில்லை. இருந்தாலும் இன்றைய போட்டியில் என்ன நடக்குமோ மனதுக்குள் கடவுளை வேண்டிக்கொண்டாள்கனகம். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பாடசாலைக்குத் தயாராகி வந்தவளிற்கு தாயின் காலை உணவும் காத்திருந்தது. உணவை உண்ணத் தொடங்கியவள் " அம்மா நீங்களும் சாப்பிடுங்கோ அப்பதான் எனக்கும் சாப்பிட்டது போல இருக்கும்" சங்கவியின் பேச்சை மறுக்க முடியாத கனகம் மகளுடன் சேர்ந்து சாப்பிட்டு முடித்தாள். கையில் ஒரு கொப்பியை மட்டும் எடுத்துக்கொண்டு "அம்மா நான் போயிட்டுவாறன் " சொல்லிக்கொண்டே சாலையில் இறங்கி பாடசாலையை நோக்கி நடக்கலானாள்.

மகள் செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டே நின்றாள் கனகம். நீண்ட கருங்கூந்தலும் குங்குமச் சிவப்பழகும் காலை இளம் சூரிய ஒளிபட சங்காவின் அழகு கனகத்தையே அசத்தி விட்டது. சங்கா வழக்கமாகச் சென்றுவரும் சாலைதானே. வழியில் சிந்துவையும் அழைத்துக் கொண்டுதானே செல்வாள். பயப்பட ஒன்றும்இல்லை.தனக்குள்ளே ஒருவித தெம்பை வரவழைத்துக் கொண்டு வீட்டு வேலைகளைக் கவனிக்கலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்திற்கு மாறாக சங்கவியின் பாடசாலை ஒரே கோலாகலமாக இருந்தது. முதல்தர பாடசாலை ஆனபடியால் தமிழ்த் தினப்போட்டி அங்கேயே நடைபெறக் காத் திருந்தது.ஏனைய இடங்களில் இருந்தும் பாட சாலை மாணவர்களும், ஆசிரியர்களும் வரு கைதந்துகொண்டிருந்தனர் மண்டபங்களிற்கு இலக்கங்களும் நிகழ்வுகளும் போடப்பட்டி ருந்தன. அவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டு பாடசாலை வளவினுள் மோட்டார் வண்டியுடன் நுழைந்தார் கேசவன் ஆசிரியர். கேசவன் ஒரு மாதத்திற்கு முன்புதான் யாழ் மாவட்டத்தில் இருந்து பட்டதாரி நியமனத் தில் விஞ்ஞானமாணிப் பட்டதாரியாக இந்த மாவட்டத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு நிய மனம் பெற்று வந்தவர். அதனால் கேச வனுக்கு இந்த இடங்களெல்லாம் சரியாகப் பழக்கப்படவில்லை.

மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டு அலுவலகத்தை நோக்கி விரைந்தவரை எதிர் கொண்டான் மாதவன். “மச்சான் நீயா எங்கட மாவட்டத்திற்குப் புதிதாக நியமனம் பெற்று வந்தது” என்று சொல்லிக் கேசவனின்கையைப் பற்றிக் குலுக்கினான். கேசவனுக்கு மாத வனைக் கண்டதும் அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. இருவரும் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது சந்தித்து நட்புக்கொண்ட உற்ற நண்பர்கள். "மாதவன் உன்னை இன்று சந்திப்பேன் என்று நினைக்கவே இல்லை” என்று சொல்லி முடிப்பதற்கிடையில் மச்சான் எங்கட மாவட்டத்திற்குச் சில பட்டதாரிகள் வேறு மாவட்டத்தில் இருந்து நியமனம் பெற்று வந்ததாகக் கேள்விப்பட்டனான். ஆனால் நீ வந்திருப்பாய் என்று நினைக்கவே இல்லை. சரி அதெல்லாம் இருக்கட்டும் கேச வன் அப்பா எப்படி இருக்கிறார்.கேசவனைச் சந்தித்த சந்தோஷத்தில் மாதவன் தனது உள்ளத்தில் எழுந்த நினைப்புக்களையெல் லாம் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

சில நாட்களாக அப்பாவிற்கு உடம்பு சரியில்லை. அதனால் நானும் இங்கு சரியா கத் தங்கி நிற்பதில்லை. அடிக்கடி வீட்டிற்குப் போய் வருவதுதான் வழக்கம். இப்ப கொஞ் சம் பரவாயில்லை. முகத்தை எங்கோ திருப் பிக் கொண்டு பதிலைச் சொல்லிக்கொண்டே போனான் கேசவன். "மச்சான் அப்பா ஒரு டாக்டர் அவருக்கே வருத்தமா. மாதவா முட் டாள் தனமாகப் பேசாதே நோய் என்பது டாக்டர், ஆசிரியர், விவசாயி என்று பார்த்து வாருவதில்லை. Hospital இலில் இருந்து வரும் போது மழையில் லேசாக நனைஞ்சதால் வந்தது அவ்வளவுதான்.நான் கூடவே இருந்து கவனிச்சதால் எல்லாம் சரியாய்ப் போச்சு. இவ்வளவும் சொல்லி முடிப்பதற்கிடையில் கேசவனின் முகம் எத்தனையோ அர்த்தங்களை வெளிப்படுத்துவதுபோலக் காணப்பட்டது.

மாதவா பெத்தவங்களைத்தான் என் னால் கவனிக்க முடியவில்லை. வளர்த்து என்னை இந்த நிலமைக்குக் கொண்டுவந்த வங்களைக் கவனிக்கவேண்டியது என்னோட பொறுப்புத்தானே. கேசவனின் மனசைப் புரிந்து கொண்ட மாதவன் பேச்சை வேறு திசைக்கு மாற்றினான். "கேசவா எப்படி பாட சாலை பிடிச்சிருக்கா" ரொம்பப் பிடிச்சிருக்கு மாதவன். எங்கட இடத்தைப் போல இல்லை. இங்குள்ள மாணவர்களில் ஒரு சிலரைத் தவிர அநேகமான பிள்ளைகள் ஆசிரியர் சொற்கேட்டு அவர்களிற்கு மதிப்புக் கொடுத்து நடப்பது நிறையவே உண்டு இவ் வளவும்.பேசி முடிப்பதற்குள் அலுவலகத்தை வந்தடைவதற்கும் நேரம் சரியாகவே இருந்தது.

அலுவலகத்திலும் தமிழ்த்தினப் போட் டிக்கு நடுவர்களாக வருகை தந்த ஆசிரியர் களும் பாடசாலைகளினுடைய அதிபர்களும் கூடியிருந்தனர். புன்னகையோடு கேசவன் அனைவரிற்கும் வணக்கத்தைத் தெரிவித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். விழாவின் தலைவர் குருமூர்த்தி "கேசவன் சேர் உங்களின் வரவைக் காத்துக் கொண்டே பேச்சுப்போட்டி ஆரம்பிக்காமல் இருக்கிறது" சொல்லிக் கொண்டே பேச்சுப் போட்டி நடத்துவதற்கான போட்டியாளர்களின் இலக்கங்கள் அடங்கிய புள்ளி வழங்கும் தாள்களை கேசவனிடம் நீட்டினார். கேசவனும் புன்னகை தவழ்ந்த முகத்துடன் நடுவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

கேசவன் பேச்சில் கெட்டிக்காரன். பாடசாலைக் காலத்தில் இருந்து பல்கலைக் கழகத்திலும்கூட சிறந்த பேச்சாளன். கேசவனின் பேச்சு ஆரம்பித்தால் பார்வையாளர்கள் அமைதியாகவே இருந்து கேட்பார்கள். கேசவனின் திறமைக்கும் அவருக்கு வழங்கப்பட்ட நடுவர் பொறுப்பும் பொருத்தமாகவே இருந்தது. கேசவன் பயிலுடன் எழுந்தான். அவரின் பின்னே ஏனைய நடுவர்களும் மண்டப இலக்கம் மூன்றினுள் நுழைந்தனர்.

கேசவன் போட்டியாளர்களின் இலக்கங்களை அழைத்து ஒழுங்குபடுத்திக்கொண்டு இருந்தார். போட்டியில் கலந்து கொள்ள நின்ற சங்கவிக்கு கேசவனின் தோற்றமும் அழகும் நிறமும் தந்தையைப் போல இருந்தது. நினைவை மறக்க முயற்சித்தாலும் கேசவனைப் பார்க்கப் பார்க்க தந்தையின் ஞாபகமே சங்கவியைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் சென்றது.

1996ஆம் ஆண்டு காலப்பகுதி யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் எமக்கு அழகிய வீடு இருக்கும்போது ஒரு நாள் வெள்ளிக்கிழமை நானும் அம்மாவும் நல்லூர்க் கோயிலைத் தரிசித்துவிட்டு வீதியால் வந்து கொண்டிருந்தோம். வானத்தில் அசுர வேகத்தில் பறந்து வந்த சகடை விமானம் இரண்டு நகரையே அதிர வைத்த வண்ணம் தாழப் பறந்து குண்டுகளை வீசின. பீதி கொண்ட நானும் அம்மாவும் வீடுகள் மரங்கள் என்று பதுங்கிப் பதுங்கி விழுந்தெழும்பி வீடு சென்று சேர்ந்தால் அங்கே கண்ட காட்சி என்னையும் அம்மாவையும் கதிகலங்க வைத்தது. விமானம் போட்ட குண்டிற்கு வீட்டின் ஒரு பகுதி உடைந்துபோன நிலையிலும் அதைவிட அதிர்ச்சி தரக்கூடியதாக அன்புலன்ஸ் வண்டி பலத்த காயம்பட்ட அப்பாவையும் அண்ணாவையும் ஏற்றிக்கொண்டு அபயக்குரல் எழுப்பிய வண்ணம் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.இவை எல்லாவற்றையும் பார்த்த எனக்கும் அம்மாவிற்கும் சுய நினைவே இல்லை. நினைவு திரும்பியதும் அம்மா பக்கத்து வீட்டுக் காரின் உதவியுடன் யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்று அப்பாவையும் அண்ணாவையும் பார்த்துக் கொண்டு வந்தார். அன்றிலிருந்து சில நாட்களாக வைத்தியசாலையும் கோயிலும் வீடுமாக மாறி மாறித் திரிந்த அம்மா நான்காம் நாள் வைத்திய சாலைக்குச் சென்ற போது எதிரே வைத்தியர் சிவானந்தன் சந்தித்தார்.

என்ன சொல்வது எப்படிச் சொல்வது சொல்லாமலும் விட முடியாது தானே. சொல்லித்தான் ஆகவேண்டும். தயக்கத்துடன் "அம்மா நான் எவ்வளவோ முயற்சி செய்தும் உங்கள் கணவரையும் மகனையும் என்னால் காப்பாற்ற முடியவில்லை". நடந்தசம்பவத்தை நானும் அம்மாவும் எப்படித் தாங்கிக்கொள்வோம். எந்தக் குறையும் விடாமல் குடும்பத்தைக் கவனித்து வந்த அப்பாவும், எட்டு வயதுச் சிறுமியாக இருந்த எனக்கு துணையாக பாசமாக இருந்த அண்ணாவும் பிரிந்துசென்ற பிரிவு என்னையும் அம்மாவையும் பைத்தியமாக்கி விடும்போல் இருந்தது. எத்தனையோ பேர் ஆறுதல் சொல்லியும் எம்மால் ஆறுதல் அடைய முடியவில்லை.

இப்படியொரு ஆறாத்துயரில் இருந்த எமக்கு அடுத்த துன்பமும் தொடர்ந்தே ஏற்பட்டது. யாழ் நகரை இராணுவம் ஆக்கிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மித்துக்கொண்டுவர மக்களெல்லாம் புலம் பெயர்ந்து கொண்டனர். நானும் அம்மாவும் கையில் அகப்பட்டவற்றைக் கொண்டு வன்னிக்கு வந்தவர்கள்தான் அப்படியே வன்னியிலேயே இருந்து கொண்டோம்.

இத்தனை நினைவுகளும் சங்காவின் மனதில் திரைப்படம்போல் ஓடிக்கொண்டிருக்க அவளது கண்களில் நீர் நிறைந்தன. அண்ணா அண்ணா என்று அண்ணாவிற்கு பின்னும் முன்னும் திரிந்தும் அப்பாவின் செல்லப்பிள்ளையாக இருந்த சங்கவிக்கு எப்படித்தான் அவர்கள் நினைவு வர அழாமல் இருக்க முடியும்.கண்களிலிருந்து நீர் கன்னத்தில் வடிய நினைவிலிருந்து திடுக்குற்ற சங்கவி அவசரமாக கண்ணீரை யாரும் அறியாதபடி துடைத்துக்கொள்ள போட்டிக்கு இலக்கம் அழைக்கச் சரியாகவே இருந்தது.

தன்னைச் சுதாகரித்துக்கொண்டு நடுவர்களின் முன் சென்றவளிற்கு " காலமும் கல்வியும்" நடுவர்களால் தலைப்பு வழங்கப்பட்டதும் ஐந்து நிமிடங்களின்பின் பேச ஆரம்பித்தவளின் வாயிலிருந்து காளமேகம் கவி பாடியதுபோல வார்த்தைகள் வெளிவந்தன. நடுவர்களெல்லாம் தம்மை மறந்த நிலையில் சங்கவியை ஒரே பார்வையாகப் பார்த்த வண்ணமிருந்தனர்.

சிலரிற்கு மனதில் குழப்பம் ஏற்பட்டால் வார்த்தைகளும் குழம்பிப்போய்விடும். ஆனால் சங்கவிக்கு அப்படியல்ல. சங்கவி இப்படி ஒரு பேச்சைப் பேசுவதற்கு அந்தச் சமயம் அவளுடைய மனம் புண்பட்டு இருந்தது தான் காரணமாக இருந்திருக்கலாம். பேசி முடித்ததும் சங்கவியால் தன்னையே நம்ப முடியவில்லை. ஒரு வேளை என்னுடைய நாவில் கலைவாணி தான் வந்திருந்தாளோ என எண்ணிக் கொண்டாள். சங்கவியைத் தொடர்ந்து ஏனைய போட்டியாளர்களின் பேச்சு நடைபெற்றுக்கொண்டிருந்தது.

ஆனால் கேசவனின் மனமோ ஒரு நிலைப்பட்ட நிலையில் காணப்படவில்லை. ஏதோ அடிக்கடி அவர் மனதை வருடியது. இருந்தபோதும் தனது மனதை வலிந்து கட்டுப்படுத்திக்கொண்டு போட்டியை வெகு சிறப்பாக நடாத்தி முடித்தவர் இறுதித் தீர்ப்பினை நடுவர்கள் மூவரும் சேர்ந்து எடுத்துக்கொண்டனர். புள்ளிகளின் அடிப்படையில் முதலாம் இடம் சங்கவிக்கே கிடைத்தது. போட்டியை நிறைவு செய்து கொண்டு அலுவலகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த கேசவனுக்கு சிந்தனை முழுக்க சங்கவியைப் பற்றியதாகவே இருந்தது.சங்கவி சங்கவி என்று மனதுக்குள் அவள் பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்த கேசவனுக்குத் தான் தேடிக் கொண்டிருந்த சங்காவின் ஞாபகம் வந்தது. கண்கள் பனித்துக் கொண்டன.கேசவன் சேர் என்ன அமைதியாகி விட்டீர்கள் அருகில் வந்த மகேஷ் சேரின் குரல் கேசவனைக் குழப்பியதும் சிறிய ஒரு புன்னகையுடன் சுயாதீனமாக உரையாற்றிய வண்ணம் அலுவலகத்தை அடைந்தனர்.

போட்டியில் கலந்துகொண்ட சங்விக்கோ மனம் பலதையும் எண்ணிச் சஞ்சலப்பட்டுக் கொண்டு இருந்தது. எனது பேச்சு எத்தனையாவதோ அதைவிடப் பெரும் சங்கடம் கேசவனைப்பற்றிய எந்த விபரமும் தெரியாதவளிற்கு அவரைக் கண்டது முதல் அவருடன் பேசவேண்டும்போலவும் சின்னவயதில்பிரிந்த தந்தையுடன் பேசிய ஆறுதலாவது கிடைத்து விடும் போல அவளிற்கு ஆசையாக இருந்தது.ஆனால் ஒருபொழுதும் பேசிப் பழக்கப்படாதவருடன் எப்படிப் பேச்சைத்தொடுப்பது.

தனது வகுப்புத் தோழிகளுடன் மதிய உணவிற்காகச் சென்றுகொண்டிருந்த சங்கவி அதே உணவிற்காகச் சென்றுகொண்டிருந்த ஆசிரியர் கூட்டத்தில் கேசவனையும் கண்டாள். அவளின்பார்வை அவனை விட்டுவிலக முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாமல் இருந்தது. அந்தச் சமயம் கேசவனின் பார்வையும் சங்கவி மீது விழுந்தது. கேசவன் தன்னை மறந்து சங்கவியைப் பார்த்து புன்னகை பூத்தார். சங்கவி எதை எதிர்பார்த்தாளோ அதைத் தான் நிறைவேற்றிவிடலாம் என்ற தெம்பு அவள் மனதில் எழவே மகிழ்ச்சி அவளைத் தூக்கிவாரிப்போட்டது.

தனது நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்ட கேசவனை எதிர்கொண்டாள் சங்கவி. " சங்கவி உமது பேச்சு நன்றாகவே இருந்தது. குரல், முகபாவனை, வார்த்தைகள் எல்லாமே மிகப்பிரமாதமாக இருந்தது." கேசவன் சொல்லி முடித்ததும் பதிலுக்கு ஓர் புன்னகையோடு நன்றி சேர் என்று . சொல்லி முடித்தவள் "எனக்கு எத்தனையாம் இடம் என்பதை நீங்கள் சொல்லலாமா"? சங்கவியின் கேள்வி கேசவனின் மனதை நெகிழச் செய்ததுடன் அவளின் ஆவலையும் அவனால் அறிய முடிந்தது. அதனால் கேசவனால் எப்படிச் சொல்லாமல் இருக்க முடியும். சங்கவி உமது பிரிவில் நீர்தான் முதலிடம் என்று சொல்லிக் கொண்டே சங்கவியின் முகத்தை நேராகப் பார்வையிட்டான் கேசவன். அவள் முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் பிரகாசித்தது.

அப்பொழுது கேசவனிற்கு சங்கவி போட்டியில் கலந்துகொள்ளும்போது இருந்த கலங்கிய விழிகளும் தற்போதுள்ள பிரகாசமான முகமும் மாறி மாறி நினைவிற்கு வரவே அதனை அறியவேண்டுமென்ற ஆவலில் அவன் ஏதோ ஒரு உரிமையோடு சங்கவியின் கலக்கத்திற்கான காரணத்தைக் கேட்டு விட்டான் கேசவன். அப்பொழுதுதான் சங்கவிக்கு விளங்கியது தனது நிலையை கேசவன் கவனித்திருக்கிறான் என்று. சொல்லுவதில் ஒன்றுமில்லை சேர் ஒருவருக்கிருக்கும் கவலைகளையும் சோகங்களையும்இன்னொருவருக்குச் சொல்லுவதால் அதைக்கேட்டு அவர்களும் கவலைப்படுவதை நான் பெரிதாக விரும்பவில்லை.சங்கவி அது பரவாயில்லை. எனக்குக்கூட எத்தனையோ கவலைகளும் சோகங்களும் உண்டு. தமிழர்களாகப் பிறந்த நாம் இவற்றையெல்லாம் அனுபவிக்க வேண்டுமென்றுதான் பிறந்திருக்கிறோம். இப்பதான் ஒரு சமாதானமென்று வந்து கொஞ்சம் பரவாயில்லாமல் நிம்மதியாய் இருந்தாலும் முன்னைய வடுக்கள் ஆறப்போவதில்லை.இவ்வளவையும் கேட்டசங்கவி தனது மனதிற்குள் உறைந்து கிடந்த சம்பவத்தை மளமளவென்று கூறி முடித்தாள்.அவள் கண்களில் இருந்து கண்ணீர் நிலத்தில் விழுந்து சிதறியது.

சே..சே...யாரும் பார்த்துவிடப் போகிறார்கள். சங்கவி உமக்கு மட்டும்தான் இப்படிக் கவலையா? உலகத்தில் எத்தனையோ பேர் இருப்பார்கள். கூடுதலாக எமது நாட்டில்தான். ஏன் நான்கூட இப்படித் தானே. உமக்கு அம்மா என்றாலும் இருக்கிறா. என்ர நிலை அம்மா அப்பா யாருமே இல்லை. யாரோ வளர்த்தவர்களோட இருக்கிறன். சேர் நீங்களும் சொல்லுவது உண்மையா? அப்படி என்ன நடந்தது. பொறுமையிழந்தவளாகத் திடீரென்று கேட்டுவிட்டாள்.

சங்கவி எனக்கென்று அப்பா, அம்மா, தங்கை,வீடு,வாசல் என்று எல்லாமே இருந்தது.அம்மா,அப்பா,தங்கை என்றால் எனக்கு உயிர். எமது குடும்பத்தைப் பார்த்து ஆசை கொள்ளாதவர்கள் யாருமே இல்லை. இந்த நாவூறோ என்னவோ எனது குடும்பத்தை நாசமாக்கவென்று வந்ததுதான் சிறீலங்கா அரசின் விமானங்கள் அந்தச் சமயம் அம்மாவும் தங்கையும் கோயிலுக்குச் சென்றிருந்தார்கள். நானும் அப்பாவும் தான் வீட்டில். விமானங்கள் தாழப் பறந்து குண்டுகளை வீசின. அதன்பின் என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை விழித்துக்கொண்டபோது வைத்தியசாலையில் இருக்கின்றேன் என்று மட்டும் எனக்குத் தெரிந்தது. கை, கால்களில் மருந்திடப்பட்டிருந்தது, உடம்பெல்லாம் ஒரே வலியாக வலித்தது. அம்மா, அப்பா என்று முனகிக் கொண்டு கிடந்தேன். அப்பொழுது எனது கைகளை வந்து பற்றிக்கொண்டார். டாக்டர் சத்தியமூர்த்தி.தம்பி அழக்கூடாது. இன்னும் சிலதினங்களில் குணமாகி வீட்டிற்குச் சென்றுவிடலாம்.அவர் எப்படித்தான் கனிவாகக் கூறினாலும் என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நான் மீண்டும் அம்மா வேணும், அப்பா வேணும், தங்கை வேணும் என்று புலம்பியபடியே இருந்தேன். ஒரு பலனும் இல்லை. இரண்டு மூன்று தினங்களென்று இரண்டு வாரங்களின்பின் டாக்டர் சத்தியமூர்த்தி எனது கட்டிலுக்கு வந்தார். அருகே அமர்ந்து கொண்டு எனது முதுகை வருடிவிட்டபடி கூறத்தொடங்கினார்.

கேசவா உன்னோடு காயம்பட்டு வந்த உன் தந்தையை எங்களால் காப்பாற்ற முடியவில்லை. நீயும் உன் தந்தையும் அநுமதிக்கப்பட்ட அதேநாள் இன்னொரு நோயாளியும் அனுமதிக்கப்பட்டான். அவனுக்கும் உனது பெயர்,வயது,தோற்றம், தந்தையின் பெயரும் கூட உன்னைப் போலவேதான் சாயலும் உன் தந்தை இறந்த அதேதினம் அவனும் இறந்து போனான். அந்தச்சமயம் நான் வெளியூர் சென்றிருந்தேன். சத்தியமூர்த்தி ஏதோ புலம்பிக்கொண்டிருப்பது போல இருந்தது. நான் உயிரற்றவனைப் போல மரத்துப்போன மனசுடன் கிடந்தேன் அவர் தொடர்ந்து கொண்டே போனார். இருவரது உடல்களும் உனது அம்மாவிடம் ஒப்படைக்கப்பட்டது. நாட்டில் ஒரே பதட்டகரமான நிலை. உனது அம்மா என்ன செய்வாள். உடல்கள் அன்றைய தினமே அடக்கம் செய்யப்பட்டது. இந்தத் துயரத்தைத் தாங்க முடியாத உனது தாயும் சகோதரியும் ஊரைவிட்டே போய் விட்டதாகக் கேள்விப்பட்டேன். அதன் பின் தான் நீயும் கோமா நிலையில் நினைவுக்கு வந்தசமயம் நானும் வெளியூரில் இருந்து வந்து சேர்ந்தேன்.நடந்த சம்பவத்தை எல்லாம் தெரிந்து கொண்டேன்.

சத்தியமூர்த்தி இவ்வளவும் சொல்லி முடிப்பதற்கிடையில் நான் அழுதேன், குளறினேன். சத்தியமூர்த்தியை பலவாறு திட்டினேன். அடிப்பதற்குக்கூடச் சென்றிருப்பேன். ஆனால் அவர் எனது நிலையை நன்கு உணர்ந்து கொண்டவராய் என்மீது கோபப்படவில்லை. எமது கவனக்குறைவால்தான் இவ்வளவும் நடந்து போச்சு. என்மீது தான் தப்பு. நீ கவலைப்படாதே எல்லாவற்றுக்கும் உனக்கு நான் இருக்கிறேன். நீ எனது வீட்டிற்கே வா.எனது குழந்தையைப்போல உன்னையும் கவனிப்பேன். உனது அம்மா தங்கையையும் உனக்குக் கிடைப்பதற்கு உதவி செய்வேன். அவரது பேச்சைக்கேட்டு அவர் வீட்டில் வாழ்ந்தவன்தான் நான். உண்மையில் அவர் எனக்கு எந்தக்குறையும் விடவில்லை. எனக்கோ அம்மா,தங்கை வேணும்போல இருந்தது.நானும் அவர்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தேன். இதுவரைக்கும் முடியவில்லை. இவ்வளவு காலமும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் முடங்கி யாழ் குடாநாட்டிற்குள்ளேயே கிடந்தேன். இப்ப வந்த சமாதானத்தால் போக்குவரத்துக்குத்தானே பிரச்சினை இல்லை.இனி. எப்படியாவது கண்டு பிடித்துவிடுவன். கேசவனின் கண்களில் இருந்து கண்ணீர் தாரைதாரையாகக் கொட்டியது.சங்கவியும்கூட கண்ணீரிலேயே நனைந்து நின்றாள்.

சங்கவி உனது பெயரைத் தெரிந்து கொண்டதில் இருந்து எனக்கு ஒரே தங்கையின் ஞாபகம்தான். எனது அம்மாவும் தங்கையும் கிடைத்து விடுவார்களா? கேசவனின் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த சங்கவிக்கு உண்மையெல்லாம் விளங்கிக் கொண்டது. மனதைத்தைரியப்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு உங்களிற்கு கேசவன்தானே பெயர், அப்பா நாகராசா அம்மா கனகம் அப்படித் தானே சங்கவியின் கேள்விகள் கேசவனை வியப்பில் ஆழ்த்தினாலும் அவையெல்லாம் உண்மையாகவே இருந்தன. அப்படி யென்றால் நீங்கள்தேடும் தங்கை நான்தான், எனது தங்கை சங்கவி... சங்கவி.. நீயா எனது தங்கைகேசவன் சங்கவியைக் கட்டி அணைத் தான். சங்கவி கேசவனின் தோளில் சாய்ந்த படி அண்ணா..அண்ணா வார்த்தைகள் தடு மாற இருவருமே கண்ணீரில் மிதந்தனர்.

கேசவன் சங்கவியின் நாடியைப் பற்றி நிமிர்த்தியபடி சங்கா எனக்கு எவ்வளவு சந் தோசமாக இருக்கு தெரியுமா? நீ எவ்வளவு வளர்ந்திருக்கிறாய் என்னால் நம்பவே முடி யடிவில்லை. சங்கா நான் இப்ப அம்மாவைப் பார்க்க வேணும்,அம்மாவின் கையால் சாப் பிடவேணும்,விம்மலுடன் கூறியவனின்கையை மெதுவாகப் பற்றிய சங்கவி அண்ணா அதைத் தான் நானும் நினைத்தேன். வீட்டிற்குப் போய் அம்மாவிடமே சாப்பிட்டுவிட்டு வரலாம்.

மோட்டார் வண்டி சங்கவியையும் சுமந்து கொண்டு காற்றெனப் பறந்தது.வண்டி வீட்டு வாசலை அடைந்ததும் இந்த நேரம் இங்கு யாராக இருக்கும் என்று கனகம் நினைப் பதற்கிடையில் அம்மா அம்மா நான் போட்டி யில் முதலிடம். அதற்காக கிடைத்தற்கரிய பரிசு கொண்டுவந்திருக்கிறேன். சொல்லிக் கொண்டேஅவனின் கையைப்பற்றி இழுத்துக் கொண்டு வந்தாள் சங்கவி. மகளின் மகிழ்ச் சியைக் கண்ட கனகம் ஏதேதோ நினைத்துக் கொண்டு வரவே எதிர்கொண்ட கேசவன் தாயைக் கண்டதும் கட்டி அணைத்துக் கொண்டான். அம்மா.... அம்மா உங்கள் மகன் கேசவன் கிடைத்துவிட்டேன். நான் கிடைத்து விட்டேன். கனகத்திற்கு எதுவுமே விளங்கவில்லை. கேசவனின் முகம் மட்டும் அவளிற்கு அறிமுகமானதாகத் தெரிந்தது. அதற்கிடையில் நடந்த சம்பவத்தையெல் லாம் விபரமாகக் கூறிமுடித்தாள் சங்கவி. கனகத்திற்கோ மகிழ்ச்சி தூக்கிவாரிப் போட் டது. கனகம் கேசவனின் மார்பில் சாய்ந்தபடி கேசவா எனக்கினி என்ன குறை . என்பிள்ளை கிடைத்ததே போதும். கேசவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள். அவர்கள் இரு வரையும் பார்த்து உள்ளக்கழிப்போடு புன்ன கைத்தபடி நின்றாள் சங்கவி. * (யாவும் கற்பனை)

உடம்பிற்குள் அதிர்ச்சி அலைகளைச் செலுத்துவதன் மூலம் சிறுநீரகத்திலுள்ள கற்களைக் கரைக்கலாம் என்று மியூனிச் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்டும் தமிழில்

கல்வயல் வே. குமாரசாமி
*பகுதி நேர விரிவுரையாளர்*
ஆசிரியர் கலாசாலை கோப்பாய்

வீண் கதை பேசி இருந்தது போதும்
விலங்கு நொருங்கிட எம்
மாண்புகள் மீண்டும் மலர்ந்தொளி வீசிட
மானிட சிந்தனைகள்
வேண்டும் இதைப் பணி பூண்ட மனத்தினர்
வீரிய மோ டெழுக!
நீண்ட துயர் இனி மாண்ட தெனச் செயல்
நித்தியமும் விளைக!

நாறிய தென்று நரம்பறு நாக்கினர்
நஞ்சழல் வார்த்தைகளை
பாறி விழும் வகை பார் அதிரும்படி
பாரிய வேகமுடன்
சீறி எழுந்து சினந்து சிதைந் தவை
சென்று தொலைந்திடவே
ஊறிய நன்நெறி சேர் இள வாலையர்
ஒன்றிணைந்தே எழுக!

சற்று நிமிர்! மனச் சஞ்சல முற்றுளர்
சங்கதி கை கழுவி
குற்ற மெனக் குறை கூறுதலை விடு!
குண மணி கண்டணிக!
அற்புதம் எத்தனை சித்து விளைத்திடும்
ஆயிரம் பாயிரமாய்
முற்றி முகத்தொளி பெற்ற தனக்குவை
முற்ற மெலாம் நிறையும்

எங்கள் சுதந்திர தேவி இதைப் புரி
என்றுமை வேண்டுகிறாள்
தொங்கிற வாழ்க்கையை விட்டுநம் காலினில்
தோளினில் தாங்கு! பலம்
கங்குல் கிழித்தெழு! சத்திய வேள்வி
கனன்று கொடும் பகையை
அங்குல மங்குல மாக அழித்திடும்
அறநெறி முறை நிமிர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விசாரா ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவ முதல்வர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் இனிவருமா?

*முத்தமிழ் மன்றக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற புதுக்கவிதை*

திரு. நா.கமலேஸ்வரன்
ஆரம்பக்கல்வி -1 ஆம் வருடம் C பிரிவு

அச்சமின்றி
ஆசையாய் அன்போடு வாழ்ந்த நாள்
அமைதியாய் எங்கெங்கும் திரிந்த நாள்
என்று வரும் எம்மை
இனிமைப்படுத்தும்?

தந்தை தாயுடன்
தனயன் மகளுடன்
சுதந்திரமாகப் பேசிப் பழகி
சுவைத்திட்ட நாட்கள்
எப்போ வருமோ?

பள்ளி செல்லும் பருவமதில்
பாசத்துடன் விடைபெற்று
ஊர் வீதியில் ஓடி ஓடி
உற்சாகத்துடன் பள்ளி சென்ற
அந்த நாள் இனி வருமா?

பாட்டன் பூட்டி ஒற்றுமையாய்ப்
பாசாங்குக் கதைகள் சொல்ல
வேடிக்கை விளையாட்டாய்
விருப்புடனே கேட்டிருந்தோம்
விடுகதைகள் உபகதைகள்
புத்திமதிகள் பொது அறிவு
அப்பப்பா எத்தனை எத்தனை
அந்த நாள் இனி வருமா?

கூடியிருந்து குறும்புகள் செய்து
வந்தோம்
பாடினோம் ஆடினோம்
பட்டாசும் கொளுத்தினோம்
வேடிக்கையில் விறுவிறுத்தோம்
உத்வேகத்தில் பொங்கினோம்
அந்த நாள் இனிவருமா?
கிட்டிப் புள்ளும், கிளித்தட்டும்
கிராமத்து விளையாட்டாம்
தொட்டுப் பிடித்தல்
எட்டுக் கோடு
தொடராகப் பல விளையாட்டு
இன்று, கிட்டவும் காணவில்லை
அதனை எட்டவும் முடியவில்லை
ஏனோ உடல் மறுக்கிறது
அந்த நாள் இனி வருமா?
பள்ளியில் பாடங்கள்
படிப்பிக்க வாத்தியார்
பின்னால் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு விளையாட்டு
குத்துதல், குறும்பு
கட்டுதல், கழற்றுதல்
அப்பப்பா எத்தனை குறும்புகள்
இவை எப்போது இனி வரும்?

பள்ளி விளையாட்டில்
பம்பரமாய் சுற்றிடுவோம்
இல்ல விளையாட்டில்
இன்புடனே முன் நிற்போம்
வெள்ளி சனி வேறெந்த
நாள் வரினும்
துள்ளி நின்றிடுவோம்
மைதானத்தில்
துவைத்து விளையாடிடுவோம்
வெற்றி பெற்றால் ஒரு மகிழ்ச்சி
வெற்றி பெற்றோர்க்கு
இரு மகிழ்ச்சி
சுற்றி நின்று
சுந்தரப் பாட்டுச் சொல்லி
வேடிக்கை காட்டும் அந்தப் பருவம்
இனி எப்போது எமக்கு?

வீட்டில் பொய் சொல்லி
வேளைக்கு நான் எழுந்து
ஊர் வேலி மரங்கள் எல்லாம்
உட்கார்ந்து காத்து இருந்து
வீதியால் செல்வோர்க்கு
விட்டு வைத்த குறும்புகள்
கல் எறிந்து, குழை முறித்துப்
பொறிக் கிடங்கு வைத்து
வேடிக்கை பார்க்கும்
குறும்பான எம் மனங்கள்
அன்று போன்று இன்னொரு நாள்
என்று? எமக்கு? எங்கே?

ஊர்க் கோயில் என்று சொன்னால்
உறவினரோடு நண்பர்கள்
உற்சாகம் கொண்டு,
பாதி இரவில் வீடு சென்று
வரச் சொன்னால்,
வீதியில் கிடந்து
விம்மி விம்மி அழும் காட்சி
கோபத்தால் அம்மா ஏச,
குறும்பாகச் சிரிக்க வைத்து
வேடிக்கை காட்டும் அந்த நாள்
இனி எந்த நாள்?

கல்வி கற்கையில் நண்பர்கள்
கருத்தான ஆசான்கள்
கற்றலை வழிநடத்தும்
காவியத்தின் உருவங்கள்
நிழலாகும் நெஞ்சங்கள்
நிம்மதியைத் தந்த அந்த நாட்கள்
இனி எமக்கு எந்த நாட்கள்?

உறவினரோடு கூடி
உட்கார்ந்து கூழ் குடித்து
மகிழ்வாக வாழ்ந்த
மகிழ்ச்சியான நாட்கள்
இனி வருவது எப்போது?
போரின் அவதியால்
பொடிப் பொடியான
எம் இடங்கள்
எப்போது உயிர் பெறும்?
எப்போது எமக்கு விடிவு வரும்?
ஏக்கத்துடன் காத்துக் காத்து
ஏமாந்து நிற்கும் எங்களுக்கு
அந்த நாள் இனி எந்த நாள்?

சமாதானம் வந்ததென்று
தம்பட்டம் அடிக்கும் எமக்கு
நிம்மதியாய் நித்திரை செய்ய
நிரந்தர வீடில்லை
குளிர்மை, குதூகலம்
கொண்டாட்டம் என்றெல்லாம்
குலாவித்திரிவதற்கு
நிம்மதியான நாட்கள்
நிரந்தரமாய் வந்திடுமா?
ஏங்குகிறோம் நாமெல்லாம்
அந்த நாள் இனி வருமா?

*

**முற்றும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரட்டும் மானிட நேயம்

முத்தமிழ் மன்றக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற மரபுக்கவிதை

திருமதி ஜெ. விஜயகுமார்
ஆரம்பக்கல்வி -1 ஆம் வருடம் B பிரிவு

மானிட னாகப் பிறந்து விட்டாய்
மானிட நேயம் தொலைத்து விட்டாய்
மானத் தமிழன் என்றே உரைப்பாய்
மானங் காக்க மறந்தே நிற்பாய்.

கொள்ளை களுக்கும் அஞ்சிட மாட்டாய்
கொலைகள் செய்யவும் தயங்கிட மாட்டாய்
பிறரின் சொத்தை அபகரித் திடுவாய்
பிரியம் காட்டி நடித்தே விடுவாய்.

ஒன்றே குலமாம் என்றே சொல்வாய்
ஒற்றுமை தனக்கு வேட்டே வைப்பாய்
வாய்ச் சொல்லில் வென்றே நிற்பாய்
வாழ்க்கை முழுதும் கெடுதியே செய்வாய்.

கள்ள மனம் கொண்டே நிற்பாய்
கபட மனத்தினன் ஆகி நிற்பாய்
பள்ளம் கொண்ட உள்ளம் தனிலே
பாவக் குணத்தை அடைத்தே வைப்பாய்.

ஏன்தான் இந்த வாழ்க்கையே என்பாய்
ஏரைப் போன்று உதவிட மாட்டாய்
வாய்பல சொல்லிப் பிழைத்தே கொள்வாய்
பொறுமை தனை இழந்தே நிற்பாய்

நாங்கள் அனைவரும் ஒன்றென வாழ்வதால்
நலங்கள் பலவும் பெருகிடக் கண்டும்
நான்தான் நான்தான் என்றே நிற்பாய்
நஞ்சு விதையினைத் தூவியே நிற்பாய்.

காலன் வைப்பான் கணக்கென அறிந்தும்
காலனுக்கே கணக்கும் வைப்பாய்
சுறு சுறுப்பான உலகம் தனிலே
சோம்பேறியாகத் தூங்கிநீ நிற்பாய்.

உள்ளம் தனிலே தூய்மையும் இல்லை
உதடுகள் தனிலே உண்மையும் இல்லை
கள்ள மானிடன் எனநீ வாழ்கிறாய்
கருதாய் மானம் களங்கமே கொண்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் மானம் பெரிதெனப் பேசுவாய்
பெண்மை தனையே அழிக்கத் துணிவாய்
கண்ணை மூடிப் பூனைபால் குடிப்பது
காலம் முழுதும் கருதிய உண்மைதான்.

மேகத்தைப் போல மழையினைப் பொழிந்து
மேதினி காக்க மறந்தே விடுவாய்
தாகம் தணிக்கும் தண்ணீராகி
தரணி மாந்தர்க் குதவிட மாட்டாய்.

இத்தனை காரியம் செய்தே விட்டு
இகமதில் நீயும் இனிதாய் வாழ்வையோ!
கற்ற கல்வியின் பயனைப் பெறவே
காலம் முழுவதும் இழிசெயல் நீக்கு!

ஒற்றுமையாக வாழ்ந்திட முனைவாய்
ஒரு மனதாகச் சேர்ந்தே விடுவாய்
அற்றது கயமை! அன்பின் அணைப்பில்
அகிலம் முழுவதும் மானிடம் மலரும்

*

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு**

*With best compliments from.*

**To Youth**
**With Love....**

**18 + இளைஞர் சேமிப்பு கணக்கு என்பது என்ன?**

18-35 வயதுக்கிடைப்பட்ட இளைஞர் / யுவதிகளுக்கென பிரத்தியேக அனுகூலங்களையும் நன்மைகளையும் உடைய சேமிப்புக் கணக்கு.

**வட்டி வீதம்**

சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்குரிய வட்டி வீதத்தை விட 0.5% கூடிய வட்டி வழங்கப்படும்.




**✶ விசேட அனுகூலங்கள்:**
- திருமணப்பரிசாக தங்கப்பவுண்
- காப்புறுதி
- முதல் குழந்தைக்கு வங்கிக் கணக்கொன்று
- புலமைப்பரிசில்
- கடன்அட்டை (Credit Card)
- ATM (Card) அட்டை
- கடன் வசதிகள்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

*Bank of ceylon,*
*A live to your needs.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அழகு

திருமதி ம.முருகவேல்
ஆரம்பக்கல்வி –2 ஆம் வருடம் B பிரிவு

அடிமுடி தெரியாத அற்புதம்
ஆக்கியோன் நான் என எவரும்
இறுமாப்புடன் உரிமை கொள்ளாச்சொத்து
கட்டணம் ஏதுமின்றி காணும் வரை
இலவசமாய் இன்பம் தரும் ஊற்று
அதுவே பூமித்தாய் பெற்ற இயற்கை அழகு!

ஆதாமும் ஏவாளும் ஆடி மகிழ்ந்ததும்
மிருக குணம் தொலைந்து மனிதம் பிறந்ததும்
இசையும் கலையும் இனிதாய் பிறந்ததும்
புதியன புதியன எல்லாம் பிறந்ததும்
பூமித்தாய் பெற்ற இயற்கை அழகிலே!

வெள்ளி ஓடையெனத் துள்ளி நதி நீர் ஓடுவதும்
துள்ளிக் குதித்து மீனினம் ஆடி மகிழ்வதும்
இடை இடை நிற்கும் கரும் பாறையில் மோதி
சலசலத்து சங்கீதம் பாடி நதி நகர்வதும்
பூமித்தாய் பெற்ற இயற்கை அழகே!

விண்ணை முட்டும் உயரம்
பெருவீரன் நெஞ்சையொத்த உறுதி
கண்ணை உறுத்தும் கருமை
பலவளம் கனதியாய் தரும் மலையின் அழகும்
பூமித்தாய் பெற்ற இயற்கை அழகு!
வானம் தொடும் முயற்சியின் நீட்சி
சூரியச் சூட்டின் வெக்கை தாங்கி
பல இனப் பறவை படுத்துறங்கும் இல்லம்
கீச்... கீச்... என கீதம் கேட்கும் சரணாலயம்
மந்திகள் குந்தியிருந்து கும்மாளம் கொட்டும்

மானும் மரையும் இன்னும் பலவும்
மறைந்தே வாழும்
பற்று முற்றும் துறந்து ஞானம் தேடும் முனிவன்
பர்ணசாலை அமைத்து தியானம் செய்யும் இல்லம்
வனப்பு மிகு வனங்கள் அனைத்தும்
பூமித்தாய் பெற்ற இயற்கை அழகு!

ஞாயிற்றுத் தீக்கோளை சூடி
அண்ட வெளியாய் பரந்து விரிந்து
பூமித்தாயையும் தன்னுள் அடக்கி
நிலா என்னும் அழகுப் பதுமை பவனிவர
இடையிடை முகில்கள் திரை போட்டு மறைக்க
முத்து மாணிக்கங்களாய் நட்சத்திரங்கள் ஜொலிக்க
வான மெனும் அண்ட வெளியின் அழகே அழகு!
இது இறைவன் தந்த இயற்கை அழகு! *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமாது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# விடியலாய் வந்தாய் எம் தலைவா!

திருமதி ச. பாலச்சந்திரன்
ஆரம்பக்கல்வி -2 ஆம் வருடம் C பிரிவு

கிழக்கு வானம் விடிந்த போதும்
எங்கள் வாசல் மட்டும் விடியாத
ஒரு சமூகமாகவே அன்று
நாங்கள் புறக்கணிக்கப் பட்டிருந்தோம்.

துயரங்களைச் சுமந்த சமூகமாகவே
எவர் கண்ணிலும் புலப்படாமல் - அன்று
நாங்கள் இருட்டுலகில் இன்னல்களை
இணையில்லாமல் சுமந்து வந்தோம்.

உரிமைகள் மகுடங்களால் சூட்டப்பட்டபோதும்
நாங்கள் அகதிகளுக்கு வரைவிலக்கணமாய் வாழ்ந்தோம்
அப்போது வேர்விட்டது உன் உதயம்
உன்னுடைய உரிமைக்குரலுக்கு கருவானோம்.

பெற்றோர் பெற்றெடுத்த எங்களை - நீ
தத்தெடுத்தாய் - நாங்கள் முத்தெடுத்தோம்
உன்னொருவனின் வாய்பேச்சு வாள் வீச்சாய்
எங்களுக்காகவே நீ போராடினாய்.

ஒரு விடிவெள்ளியாய் எங்கள் வாசல்களை
இன்று உன் சிந்தனையால் விடிய வைத்தாய்
சிற்பியாயிருந்து எம் உணர்வுகளை
சிற்பமாய் செதுக்கி வைத்தாய்.

எல்லோரும் பதவிகளை மகுடமாய் சுமக்க
நீ மட்டும் ஒரு சமூகத்தையே
உன் தலை மேல் சுமந்து
பலமுள்ள சமூகத்தை படைத்தாய்.

முகம் இழந்தவர்களாய் வாழ்ந்த எங்களை
முகவரிகள் ஆக்கி எழுத வைத்தாய்
உணர்வுகளுக்கு உரமூட்டி உயிர்ப்பித்து
தன்னம்பிக்கையை நெசவு செய்து தந்தாய்.

நாங்கள் தன் மானத்தை வாங்கினோம்
நாடு போற்றும் மக்கள் ஆகினோம்
நேற்று ஒரு சமூகத்தை நீ சுமந்தாய்
இன்று சரித்திரம் உன்னைச் சுமக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல ஆசான்

செல்வி. சி.சிவகௌரி
ஆரம்பக்கல்வி –2 ஆம் வருடம் C பிரிவு

தாயுமாவான் தந்தையுமாவான்
வைத்தியனுமாவான் நல்ல தோழனுமாவான்
வழிகாட்டியாவான் நல்வழி காட்டிடுவான்
அன்பாளன் பண்பாளன் அறிவாளன்
குணாளன் தயாளன் நற்சிந்தனையாளன்
யாரிவன்? நல்லாசானிவன்.

கற்றறிந்து கற்பித்திடுவான்
பொறுமை காத்து கல்வி ஊட்டிடுவான்
சுயநலமின்றி பொதுநலம் காத்திடுவான்
நற்சான்றோனை வளர்த்திடுவான்
யாரிவன்? நல்லாசானிவன்

ஏழை எளியோனென ஒதுக்கான்
சாதி மதபேதம் பார்க்கான்
கல்வியில் பல நுட்பங்கள் நுழைப்பான்
இனிய தேனெனக் கல்வியைத் திணிப்பான்
யாரிவன்? நல்லாசானிவன்.

கடமை, கண்ணியம் தவறான்
நேர்மை, நேரம் விலகான்
ஒழுக்கக் கோவையைக் காப்பான்
பாரினில் நல்ல சமுதாயத்தை விதைப்பான்
யாரிவன்? நல்லாசானிவன்.

பள்ளிச் சொத்தைப் பேணுவான்
சிறார்களைச் சமநிலையில் காண்பான்
ஊண் உறக்கம் பாரான்
இளைய சமுதாயத்தின் ஞான விளக்காவான்
யாரிவன்? நல்லாசானிவன். *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் உரிமை

திருமதி சி. விக்னேஸ்வரன்
ஆரம்பக்கல்வி -1 ஆம் வருடம் C பிரிவு

சமாதானமே நில்;
உனக்கு எத்தனை பொறுமை.
பெண்ணின் உளம் அறிய
இத்தனை காலமா?
எத்தனை வருடம் நீ
ஆண் தலைமையில் ஒளிந்தே
கிடந்திருப்பாய்?
பெண்ணைக் கண்டதும் நீ
சட்டென ஒளி வீசுகின்றாயே!
இதற்குத்தானா நீ
காலங்களுக்கிடையே முடங்கிக்
கிடந்தாய்.
சமாதானத்தில் நீ
பெண்ணின் உரிமைகளையும்
மறப்பாயோ சொல்.
இவளுக்கெனப் போடப்பட்ட
கட்டுக்களை எல்லாம்
அறுத்தே நீ மலர்வாய்.
சட்டம் இவளுக்கிட்ட கட்டுக்களும்
உயிரியலால் சுற்றியுள்ள
கம்பிகளும்
பெண்ணிவளின் ஆற்றலை
மறைத்தே சபிக்கின்றன.
கட்டுக்களை அகற்றிடவே
சமத்துவ தோழியே வருவாயடி
பெண்ணிற்கும் சமாதான பூவிற்கும்
எத்தனை பொறுமையும்
பெருமையும் என
உலகு வியந்திடவே விடிந்திடுவாய்
விடியலைத் தாங்கிய
சமாதானமே வருக
பெண் பெருமை பாடும்
உலகை நீ காணவே
விரைந்தோடி வருக. *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடத்தை மாற்றம்

திரு. ந.ஸ்ரீகாந்தன்
ஆரம்பக்கல்வி 1 ஆம் வருடம் A பிரிவு

மனிதன்
மனிதனாக வாழ
மாநிலத்தில்
மன்னுயிர்களுடன்
மகிழ்ச்சியோடு வாழ
மறந்து விட்ட மனிதன்
மாறு வேடம்
போடுகின்றான்.

மனதில் மாற்றமில்லை
இறை அன்பு
இதயத்தில் இருந்தும்
இன்னல் கண்டு
இதய வேதனை அடைந்தும்
இவை தொல்லை என எண்ணி
இறை அன்பை
ஈடு வைப்பர்
இதயத்தை இரும்பாக்கி
ஈற்றில் விலகி நிற்பர்.

தீட்சைகள்
கேட்டென்ன?
திருநீறணிந்தென்ன?
திரு ஞானஸ்நானம்
பெற்றென்ன?
என் நடத்தையில்
மாற்றமில்லை
நரம்புகளில்
உணர்வில்லை

நாடித்துடிப்பில்
நயமில்லை
நம்மிதயத்தில்
நம்மவர்க்கிடமில்லை
வேற்றினத்தை வேரோடு
வெறுக்கின்றோம்
வெளியில் சொல்ல
வெக்கப்படுகின்றோம்
ஐந்தறிவு அதுகளும்
அப்படித்தான்
அடுத்து ஓரறிவு
அதிகம் எம்மவர்க்கு
உதுகளும் இப்படித்தான்.

இருக்க ஒருவன்
இடங்கேட்டால்
படுக்கையும்
கேட்பானோ? என்று
பதறும் இவன் மனம்
பாவம் அவன் மனம்
பகிர்ந்து கொள்ளுங்கள்
பாசங்களை
பரமனை பார்க்கலாம்
அவனுருவில்
நடத்தையை மாற்றுங்கள்
நல்வாழ்வு
நம் கையில்.

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளெல்லாம் ஒரு பாட்டு

செல்வி தி. லூர்தகவி
சங்கீதநெறி -2 ஆம் வருடம்

இசையே இன்னிசையே இனிமை தரும் இசையே
இயல் இசை நாடகத்தின் இனிமை நீ இசையே
மண் சேர் புனல் போல மனம் சேர் மகிழிசையே
மண் மாந்தர் தம் வாழ்வில் பின்னிப் பிணை இசையே
முத்திக்கு வழிகாட்டும் முழுமைக்கு முதற்பாட்டு
முத்தான இறைவனுக்கு எத்தாலும் துதிப்பாட்டு
தரணியில் தாழ் பதிக்க வரும் போது ஒரு பாட்டு
தாய் உதிரம் பாலாக்கித் தரும் போது தாலாட்டு
குஞ்சுக் கரங்கள் விஞ்சும் சாளைப்பாட்டு
செஞ்சாந்தில் செய்கால்கள் சீரடிக்கு ஓர்பாட்டு
பல்லாங்குழியதனைப் பலமாக்க தனிப்பாட்டு
தோழருடன் தோள் சேர்த்து விளையாட விற்பாட்டு
பூப்புநீர் பறைசாற்ற பாட்டி நலங்கும்பாட்டு
பூவையர் இதயமதை வசமாக்க இசைப்பாட்டு
கருத்தைக் கவர்ந்திட்ட காதலுக்கு எசப்பாட்டு
வெறுப்பைக் காட்டி மனம் வாட்டுவோர்க்கு வசைப்பாட்டு
பணம் தேடப் பாடாய்ப்படும் போது பல பாட்டு
பிணமதுவாய் பாடை தனில் படுத்துறங்க..... ஒப்பாரிப்பாட்டு. *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர கிரகணம்

திருமதி மரியசீலன் மேரி அஜந்தா
ஆரம்பக்கல்வி -2 ஆம் வருடம் C பிரிவு

குளிர்ச்சியான
அந்த......
நிலவைப்பார்த்து
குதூகலித்து
இந்த இளைஞன்
கரங்களைக் குவித்து
கும்பிடு போட்டு
பின்னர்.....
கண்ணடித்துக் கொண்டான்
சிரித்திருந்த அந்த
வெண்ணிலவு
திகைத்து விட்டு
பின்னர்.....
அழுது விட்டது.
பெண்ணிலவாக
அப்போது.....
அதன் கண்கள்
சிவந்து கொண்டதுவே!
அது தான் இன்றைய
சந்திர கிரகணம். *

**புவியிற் சமூகம் இன்பம்**
**பூணல் சமத்துவத்தால்**
**கவிழ்தல் பேதத் தாலடி – சகியே**
**கவிதழ்தல் பேதத் தாலடி!**

**புவி வேகம் கொண்டு செல்லும்**
**போதில் உடன் சொல்லாதார்!**
**அவிவேகம் கொண்டாரடி – சகியே**
**அவிவேகம் கொண்டாரடி.**

~ பாரதிதாசன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது செல்வாய் தென்றலே........

செல்வி. ஜெகதீஸ்வரி துரைராசா
ஆரம்பக்கல்வி –2 ஆம் வருடம் C பிரிவு

தூது செல்வாய் தென்றலே
புலத்தின் குரல் இதுவென
பொய்மை வாழ்க்கை வாழ்கிறோம்
புரிய வில்லை வாழ்க்கையே
தூது செல்வாய்....

அன்னை மடியில் தூங்கிய
நினைவு இன்னும் நீங்கல
தங்கை அண்ணன் கூடியே
உண்ட நாட்கள் மறக்கல
தூது செல்வாய்....

அன்பு காட்டும் தந்தையின்
அடியும் இங்கு வலிக்கல
அரவணைத்து அணைத்திடும்
அன்புத் தந்தை இங்கில்லை
தூது செல்வாய்....

பொய்மை உறவு இங்குண்டு
பெயரும் புகழும் அதற்குண்டு
பந்தம் என்று இங்கில்லை
பணம் தானே பெரிதம்மா
தூது செல்வாய்....

அண்ணன் அக்கா கூடியே
ஆடி ஓடி அந்த நாள்
நினைக்கும் பொழுது இனிக்குது
இன்று இல்லை அந்த நாள்
துன்பச் சுமையே தாங்கியே
துடிக்கும் ஜீவன் நான் அம்மா
எங்கள் துயரம் புரியுதா
செல்லு தென்றலே அங்கு நீ
தூது செல்வாய்.... *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவச் செல்வங்களுக்கு .......

திரு. இ. திவ்வியபாலன்
ஆரம்பக்கல்வி -2 ஆம் வருடம் C பிரிவு

காலை எழுந்து வணங்கம்மா
கருத்தாய் பாடம் படியம்மா
வேலை உணர்ந்து செய்யம்மா
நன்றாய் பொழுதைக் களியம்மா.

வீட்டோர் மெச்ச நடவம்மா
மேலோர் போற்ற விளங்கம்மா
நாட்டில் வாழப் பழகம்மா
நலமும் புகழும் வருமம்மா.

அன்பும் பண்பும் பேணம்மா
அயலார் தம்மை மதியம்மா
துன்பம் செய்தல் விலக்கம்மா
துணை செய முந்தி நில்லம்மா.

தீயோர் நட்பைத் தவிரம்மா
செய்வினை தெரிந்து செய்யம்மா
உய்யும் வழியும் இதுவம்மா
உயர்வும் நலமும் தருமம்மா.

*

யோசிப்பதானால் நிதானமாக யோசியுங்கள்
செயற்படுவதானால் உறுதியோடு செயற்படுங்கள்
விட்டுக்கொடுப்பதானால் பொறுமையோடு விட்டக்கொடுங்கள்
எதிர்ப்பதானால் திடமாக எதிருங்கள்.
- ***கோல்டன்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட வா நிலவே

செல்வி. க. சசிலேகா
ஆரம்பக்கல்வி -2 ஆம் வருடம் D பிரிவு

கடலோரம் நண்டெல்லாம்
கனிவோடு விளையாடும்
காகங்கள் கரைந்தொன்றாய்
கதை சொல்லி விளையாடும்.

கருங் குயிலோடு மயில் சேர்ந்து
கவி பாடி விளையாடும்
மலர் மீது வண்டெல்லாம்
தேனுண்டு விளையாடும்.

மலையோடு மேகங்கள்
தினம் கொஞ்சி விளையாடும்
நதியோடு இளம் தென்றல்
பண்பாடி விளையாடும்.

பூனை நாய்களெல்லாம்
அன்போடு விளையாடும்
விலங்கு பறவையெல்லாம்
விளையாட நான் கண்டேன்.

என்னோடு விளையாட
இவ்வுலகில் யாருமில்லை
அன்னை தந்தை இல்லை
அன்பு கொள்வார் எவருமில்லை.

அநாதை என்று என்னை
ஆதரிப்பார் இங்கில்லை
விளையாட வருவாய் என்று
இன்றும் நான் காத்திருப்பேன். *

கடும் சினம் கொள்பவனோடு நட்புக் கொள்ளாதே
எரிச்சல் கொள்பவனோடு தோழமை கொள்ளாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி கனேசம்மா வீனஸ்குமார்
ஆரம்பக்கல்வி முதலாம் வருடம் A பிரிவு

தங்கப் பாப்பா ஓடிவா!

தரணி வாழப் பாடிவா!

ஊர்ந்து வரும் எறும்பைப் பார்

உண்மை புரியும் தெரிந்து கொள்!

சின்னத் தம்பி இங்கே வா!

சிரித்து வாழ ஆடி வா!

கூடித் தின்னும் காக்கை பார்!

கூடி வாழணும் நீயும் பார்!

தம்பி தங்கை எழுந்து வா!

தானம் செய்ய நிமிர்ந்து வா!

நாளும் நாளும் போராடு!

நல்ல கல்வி நீ பெறுவாய்!

*

கொடை இல்லாத சிக்கனம் பேராசை

சிக்கனம் இல்லாத கொடை ஊதாரித்தனம்

**– வெண் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீக் கீக் கிளியக்கா

திருமதி சி.விக்னேஸ்வரன்
ஆரம்பக்கல்வி -1 ஆம் வருடம் C பிரிவு

கீக் கீக் கிளியக்கா
கிட்டக் கொஞ்சம் வாவக்கா
பூக்கள் நிறைந்த சோலையில்
போவோம் இங்கே வாவக்கா.

மாம்பழங்கள் தருகின்றேன்
வடிவாய் கோதித் தின்னலாம்
நாம் அழகுச் சோலையில்
நல்லாய் திரிந்து பழகலாம்.

பச்சை அழகு மேனியும்
பவளம் போன்ற வாயதும்
இச்சை கொள்ள வைக்குதே
இனிமை சேர்த்துக் கொள்ளுதே. *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகறை

திருமதி ஜெ.விஜயகுமார்
ஆரம்பக்கல்வி -1 ஆம் வருடம் B பிரிவு

தினமும் மெல்ல வருகின்றாய்!
தெரிசனம் அள்ளித் தருகின்றாய்!
துயிலை மெல்லக் களைகின்றாய்!
தூய்மையை நெஞ்சில் விதைக்கின்றாய்!

மலர்களை மலர்ந்திடச் செய்கின்றாய்
மண்ணில் கவர்ச்சியைப் பெய்கின்றாய்
பார்த்தவர் மனங்களை இழுக்கின்றாய்
பாரினில் விடியலைத் தருகின்றாய்

விடியல் தன்னால் இருளகற்றி
விளங்கும் இன்னிசை பொழிகின்றாய்
கொடிய துயரம் தனை நீக்கி
கொண்டு வருவாய் சமாதானம் .

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POEM
# TIME IS GOLD

Mr.S.Sinkarasha
2nd Year Primary C

Work while you work
Play while you play
That is the way
To be happy and gay

One thing at a time
And let it be well
Is the best of all rules
As many can tell.

All that you do
Do with yours might
Things done by halves
Are never done right.

Moments are useless
When trifled away
So work while you work
And play while you play.*

*Polygamy may well be held in dread,*
*Not only as a sin but as a bore.*
Lord Byron, Don Juan

*It is better to marry than to burn.*
Bible, I Corinthians 7:9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தலைமுறையினரும் முதியோரும் பற்றிய ஓர் உரையாடல்
### (உரையாடற் சித்திரம்)

திரு.கு. சுமுகலிங்கம்
ஆரம்பநெறி 2 ஆம் வருடம் A பிரிவு

(குமார் "வயோதிபர்' இல்லம்' ஒன்றிலே இருக்கும் தன்னுடைய உறவினர் ஒருவரைப் பார்த்துவிட்டு வருகின்றான். இல்லத்தின் வாசலிலே குமாரின் நண்பன் கரன் எதிர்பாராத விதமாக எதிர்ப்படுகின்றான்.)

**கரன்:** ஓ! குமாரா? அன்றும் உன்னை இங்கே தான் சந்தித்தேன். இன்றும் இங்கே சந்திக்கின்றேன் ஏதோ வயோதிபர் இல்லத்தின் மீது அளவற்ற காதல் கொண்டு விட்டாய் போல் இருக்கிறது. எனக்கென்றால்...

**குமார்:** ஏன் நிறுத்திவிட்டாய் சொல் எனக்கு..

**கரன்:** எனக்கோ... ம்.. இந்த வயோதிபர் இல்லத்தினை இடித்துத் தரைமட்ட மாக்க வேண்டும்.எரியூட்டிச் சாம்ப லாக்க வேண்டும். இப்படி ஒரு வயோ திபர் இல்லம் இருப்பதனால் தானே எம்மைப் பெற்று தாலாட்டி சீராக சிரமப்பட்டு வளர்த்த பெற்றோரை அநாதையாகக் கொண்டு போய் முதி யோர் இல்லத்தில் சேர்த்து விடுகின் றார்கள் இப்படி ஒன்று இல்லை என்றால் என்ன செய்வார்கள்.

**குமார்:** நிறுத்து ஏன் ஏன் உனக்கு என்ன தீங்கு செய்தன? ஏன் இவ்வளவு ஆவேசப்படுகிறாய்?

**கரன்:** எனக்கு ஒரு தீங்கும் செய்ய வில்லை. ஆனால் எம்முடைய சமுதாயத்திற்கு வாழையடி வாழையாக நாம் பேணி வந்த ஒழுக்க நெறிக்கு,பண்பாட் டுப் பெருமைக்கு, மனிதாபிமா னத்துக்கு அவமானச் சின்னமாக விளங்குகின்றன. சாபக்கேடாகத் தோன்றுகின்றன அல்லவா?

**குமார்:** என்ன கரன் நீ என்ன சொல்லு கின்றாய்?

**கரன்:** பின்ன என்ன? இந்த வயோதிபர் இல்லத்திலும் விடுதியிலும் வாழ்பவர்கள் யார்? சிறிது சிந்தித்துப்பார் குமார். அவர்கள் தானே உன்னையும் என்னையும் போன்ற இளைய சந்ததியின ரைப் பெற்று வளர்த்து உருவாக்கியவர்கள். அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி கல்வியூட்டி, ஒழுக்கம் புகட்டி உயர்த்தியவர்கள் அல்லவா? எத்தனை எத்தனை தியாகங்களைச் செய்து எம்மையெல்லாம் வளர்த்தவர்கள். அவர்கள் இல்லை என்றால் இன்றைய இளஞ்சந்ததியினரை உருவாக்கி இருக்க முடியாதே.

**குமார்:** நீ சொல்வது சரிதான் கரன் இந்த வயோதிபர் இல்லங்களும் விடுதிகளும் இல்லை என்றால் கொஞ்சம் சிந்தித்துப்பாரன். இளைய சந்ததியினர் அவர்களை எவ்வளவு பாடு பட்டாயிலும் பேணிக் காத்திருபார்கள்; சுமையாகக் கருதியிருக்க மாட்டார்கள். மனிதாபிமானத்துடன் நடந்திருப்பார்கள். இதைப்பற்றி நீ என்ன சொல்கிறாய்?

**கரன்:** (சிரித்து) என் அபிப்பிராயப்படி ஒரு கோணத்தில் நோக்கினால் வயோதிபர் இல்லங்களும் விடுதிகளும் வேண்டும். இன்னொரு கோணத்தில் நோக்கினால் அவை வேண்டாம்.

**குமார்:** ஏன்? என்ன வேண்டும் வேண்டாம் என்று இரண்டு பக்கமும் பாடுகிறாய்? (எரிச்சலுடன்)

**கரன்:** இல்லை, இல்லை குமார் நான் இரண்டு பக்கமும் பாடவில்லை இளந்தலைமுறையினர் தமக்கு வாழ்வும், வளமும் அளித்த வயோதிபரைப்பேணிப் பாதுகாக்கத் தான் வேண்டும். இது அவர்கள் ஒவ்வொருவரதும்தலையாய கடமை. இது எங்கள் பண்பாடு எங்கள் ஒழுக்க நெறி ஆனால்...

**கரன்:** ஆனாலும்... இளைய தலைமுறையினர் எல்லோரும் உன்னைப் போன்று இருக்க மாட்டார்கள். நீ உனது எழுபத்திரண்டு வயதுடைய தந்தையையும், அறுபத்தேழு வயதான தாயையும் பேணிப்பாதுகாக்கிறாய் அவர்கள் சீறிச் சினந்து பேசினாலும் நீ சிரிக்கிறாய். சகித்துக் கொள்கிறாய். என்றாலும் நல்லவனான உனக்கு உலகப் போக்கு அவ்வளவாக விளங்கவில்லை.

**குமார்:** என்னடா கரன் என்னைக்கிணற்றுத் தவளை என்று எண்ணிக் கொண்டாய் போல இருக்கின்றது அப்படியோ? (ஆத்திரத்துடன்)

**கரன்:** மன்னித்துக் கொள் குமார் அப்படித் தானே நினைக்க வேண்டி இருக்கிறது. ஏனென்றால் இந்த வயோதிபர் இல்லத்தில் உள்ள வயோதிபர்களோடு சிறிது பழகிய அனுபவத்தைக் கொண்டுதான் சொல்கிறேன். முதியோர்கள் அனைவரும் ஒரே தரத்தினரும் அல்லர். இளந்தலை முறையினர் எல்லோரும் உன்னைப் போன்று நல்லவர்களும் இல்லை.

**குமார்:** அப்படியானால் சற்று விபரமாகச் சொல்.

**கரன்:** இந்த வயோதிபர் இல்லத்தில் கார்த்திகேசு என்ற ஒருவர் இருக்கிறார். அவருடைய கண்களிலே கண்ணீர் மல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன சொல்லுகின்றார். தெரியுமா? இந்த வயோதிபர் இல்லம் தமக்கொரு சுவர்க்கபுரி என்கின்றார்.

**குமார்:** அந்த வயோதிபருக்கு ஏதும் மூளைக் கோளாறாய் இருக்கலாம் என்று சிரித்தபடி கூறினான் குமார்.

**கரன்:** இதனைக் கேட்ட கரன் அப்படி ஒன்றும் அவருக்கு இல்லை குமார் அவர் நல்ல சித்த சுவாதீனம் உள்ளவர். அவருக்கு ஒரே ஒரு மகள். அவர் அந்த மகளுக்காக பெரும் கஸ்ரப்பட்டு உழைத்து அந்த உழைப்பைச் சீதனமாக்கி தன்னுடைய மகளை ஒரு உத்தியோகஸ்தனுக்குக் கட்டிக் கொடுத்தார். அவர் உழைத்துக் கொடுக்கும் காலம் வரையும் அவரைப் பராமரித்தான் மருமகன். அவர் இயலாத நிலையை அடைந்ததும் அவரைக் கேவலமான முறையில் நடத்தினான் பாவம் மகளானவள் என்ன தான் செய்ய இயலும்? தந்தையை வயோதிபர் இல்லத்தில் கொண்டு வந்து இணைத்து விட்டாள்.

**குமார்:** ஐயோ பாவம் அல்லவா அவனும் ஒரு மனிதனா?

**கரன்:** நான் சொல்வதை நம்பினால் நம்பு குமார். இன்றைய இளைய சந்ததியினர் பலர் பல பல காரணங்களால் அவனைப் போன்று மாறிவிட்டார்கள். உன்னைப் போன்று ஒரு சிலர் தான் உள்ளார்கள். குமார் இன்னொரு சம்பவம் சொல்கிறேன் கேள். அவர் பெயர் பொன்னம்மா அவருக்கு நான்கு ஆண், ஒரு பெண் மொத்தமாக ஐந்து பிள்ளைகள். அவருக்கு ஐம்பது வயதிலே கண்பார்வை மறைந்து விட்டது அதன்பின் அவரை ஏழரைச் சனி பிடித்தது. ஐந்துபிள்ளைகளும் அவர் பார்த்தால் என்ன இவர் பார்த்தால் என்ன என்று தட்டிக் கழித்தனர். இறுதியாக வேறு புகலிடம் ஏது?

**குமார்:** என்ன கொடுமை ஏன்தான் இப்படிச் செய்கிறார்களோ? இன்றைய இளைய தலைமுறையினரும் எதிர்காலத்திலே முதியவர்களாக வரமாட்டார்கள் என்றா இப்படி எல்லாம் செய்கிறார்கள். இதனை உணர வேண்டாமா?

**கரன்:** சிரித்தபடி எதிர்காலம் பற்றி உணர சிந்திக்க எல்லாம் நேரம் இல்லையே வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிட்டது. தான் தான் தன் சுகம் என்று சுயநலம் ஏற்பட்டு விட்டது. இந்நிலையில் வயோதிபரை பெரும் சுமையாக கருதும் முறை ஏற்பட்டுவிட்டது.

**குமார்:** ஐயோ! கரன் இந்த மனப்பாங்கு இப்படியே வளர்ந்து கொண்டு போனால் எதிர்காலம் மிகப் பெரும் பயங்கரமான நிலையில் இருக்கப் போகின்றதே மனிதாபிமானம் செத்துவிடுமோ? இதற்கு விடிவுகாலமே இல்லையா?

**கரன்:** விடிவு காலம் இருக்கிறது தான்! ஆனால் அதற்கு முதியவர்களும் மனம்மாற வேண்டும்.

**குமார்:** என்ன கரன் முன்பு கூறினாய் வயோதிபர் இல்லம் வேண்டும் என்று. இப்போ அதை விடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கரன்:** சரி சரி நீ என்ன என்றாலும் சொல்லு முதியவர்களை இன்றைய இளைய தலைமுறையினர் பேணிப்பாது காத்தே ஆக வேண்டும் இது ஒவ்வொருவருடையதும் தலையாய கடமை.

**குமார்:** ஆமாம் நீ சொல்வதும் உண்மை தான்

**கரன்:** அதுதான் எனது முடிவான கொள்கையும். சரிசரி அதோ பஸ் வருகின்றது நான் போய் வரட்டுமா?

(கரனும். குமாரும் செல்கின்றனர். தத்தம் வழியில்)

*

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**


"கலைமலரின் மணம் திக்கெட்டும், பரவட்டும்."

SHOBITHA ELECTRONICS & STATIONERY

சோபிதா எலக்ரோனிக் அன் ரேசனறி





♣ *Dealersin T.V,*
♣ *Deck,*
♣ *Radio,*
♣ *CD Player,*
♣ *Audio CD,*
♣ *Video CD,*
♣ *Dud CD,*
♣ *MP₃ CD and Stationery*

*No: 71, K.K.S.Road, Chunnakam.*

With Best Compliments:

**NEW SCIENCE HALL**
**Kannathiddy Road,**
**Jaffna.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செருப்புடன் ஒரு பேட்டி

திருமதி த. கௌரிபாலன்
ஆரம்பக்கல்வி –2 ஆம் வருடம் D பிரிவு

**கேள்வி:** உங்கள் இனத்தைப்பற்றி நீங்களே ஏதேனும் உரைக்க முடியுமா?

**பதில் :** உழைப்பதற்காகவே விலைக்கு வாங்கப்படும் அடிமைகள் நாங்கள்! மனிதரின் பாதங்களுக்குப் பயண வாகனங்கள்.
கடைவீதிகள் காட்டிக் கொடுக்கக் "காலணி" ஆதிக்கத்தால் கைது செய்யப் படுகின்றோம்.
உள்ளே ஒருவர்
இருக்கிறாரா இல்லையா என்று அறிவிப்போர் நாங்களே
பித்தளை போர்டுகள் பின்னால் வந்தவை.
நாங்களோ
வெகுகாலமாக அந்த வேலையைச் செய்கின்றோம்!
காலடியில் மிதிபட்டுக்காலமெல்லாம் உழைத்தாலும்
வாசலில் மட்டும் வாசம் புரிகின்றோம்.....
உழைப்பதற்காகவே விலைக்கு வாங்கப்படும்
அடிமைகள் நாங்கள்!

**கேள்வி:** காலில் மிதிபடுவதற்காய் கண்ணீர் விடுகின்றீர்களே உங்களைக் கைகளில் தூக்கி நாங்கள் கௌரவிப்பது இல்லையா?

**பதில் :** சில சமயங்களில்.....
கைகளில் தூக்கி காப்பாற்றி வைப்பது மீண்டும்
எங்களை மிதிப்பதற்காகவே! போகட்டும்.

**கேள்வி:** ஒப்பற்ற உழைப்புக்கு உங்களைத் தானே
உவமானம் சொல்கின்றோம்.?

**பதில் :** உவமானங்களால் மட்டுமே எங்கள் அவமானங்கள் அழிந்து விடுவதில்லை.
அதோடு இழிவு படுத்தவும் எங்களைத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டுகின்றீர்கள்.
சரி சரி........

**கேள்வி:** குறைகளைப்பற்றி உங்கள் இனத்தவர் கூடிப்பேசிடலாமே!

**பதில் :** எவ்வித முன்னறிவிப்பும் இன்றி எங்கள் கூட்டங்களைக் கூட நீங்கள் ஏற்பாடு செய்து விட்டு தீர்மானம் நிறைவேற்ற முன் திடீரென்று கலைத்து விடுகிறீர்களே!

**கேள்வி:** நீங்கள் கூட்டம் கூடும் போது பார்வையாளர்கள் பங்கு கொள்வதுண்டா?

**பதில் :** கோயில் வாசலில்.... வைபவ நெரிசலில்....

நாங்கள் கூட்டம் கூடும் போது எங்களில் கன்னிமை கழியாத புதியவர்களை சில கொள்ளைக்காரர்கள் நோட்டம் போடுகிறார்கள்.

**கேள்வி:** தனியாக உங்களுக்கென்று தத்துவப் பார்வையுண்டா?

**பதில் :** உண்டு

சருகை மிதித்தால் சப்திக்கும். நாங்கள் மலரை மிதிக்கும் போது மௌனம் சாதிக்கிறோம்.

**கேள்வி:** வாங்கிய புதிதில் காலைக் கடிக்கும் வழக்கம் எதற்காக?

**பதில் :** எங்களுக்கும் ரோஸம் இருக்கிறது என்பதைக்காட்டிக் கொள்வதற்காக.

**கேள்வி:** திடீரென அறுந்துபோய் நடுவீதியில் எங்களைத் திண்டாட வைப்பது ஏன்?

**பதில் :** நாங்கள் ஒத்துழையாமை - இயங்காது இருக்கத் தொடங்கும் போதுதான் தெருவோரத் தொழிலாளியின் வயிற்றுப்பாட்டுக்கு வழி பிறக்கிறது.

**கேள்வி:** பழசாகிப் போனதெனும் காரணம்காட்டி
உங்களை நாங்கள் ஒதுக்கி விடும் போது..?

**பதில் :** உங்களால் ஒதுக்கப்பட்டவர் எங்களை உபயோகித்துக் கொள்வர்.

**கேள்வி:** இனிய நினைவுகள் வாழ்வில் ஏதேனும்?

**பதில் :** நாணத்தில் கவிழும் தாமரைக் கண்கள்
உங்களைச் சந்திக்கும் முன்பாக
எங்களைத்தான் சந்திக்கின்றன!

**கேள்வி:** தீவிரமாக எதைப்பற்றியாவது நீங்கள் சிந்திப்பதுண்டா?

**பதில் :** உண்டு!
சில தேசங்களையும்
சில ஆட்சிகளையும்
பார்க்கும் போது
மீண்டும் நாங்களே
சிம்மாசனம்
ஏறிவிடலாமா
என்று
யோசிப்பதுண்டு!

*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய மாணவர் மன்றம் ~ 2003

காப்பாளர் : திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்)

உப காப்பாளர் : திரு. செ. செந்தில்மணி ( பிரதி அதிபர்)

ஆலோசகர் : திரு. இ. மருதலிங்கம் ( சிரேஷ்ட விரிவுரையாளர்)

சிரேஷ்ட மாணவ முதல்வர்கள்:

1) திரு. இ.பேரின்பநாதன்
2) திருமதி ப.சிறீஸ்கரன்

உதவி சிரேஷ்டமாணவ முதல்வர்கள்:

1) திரு.கு.சுமுகலிங்கம்
2) செல்வி ச.நாகதாரணி

செயலாளர்: 1) செல்வி சி.சிவகௌரி

உபசெயலாளர்: திரு. த.செல்வகுமார்

பொருளாளர்: திரு. சி. சத்தியசீலன்

## மாணவ முதல்வர்கள்:

<u>இரண்டாம் வருடம்:</u>

ஆரம்பக்கல்வி A திரு. இ. முருகவேள்
செல்வி து. கலைவாணி

ஆரம்பக்கல்வி B திரு. கா. தர்மசீலன்
திருமதி சி. மகேந்திரராசா

ஆரம்பக்கல்வி: C திரு. கா. உதயகுமார்
செல்வி சி. சிவகௌரி

ஆரம்பக்கல்வி D திரு. கா. நந்தகுமார்
திருமதி பு. சிவகுமாரன்

சங்கீதம் திரு. சி.சிவசத்தியமோகன்
செல்வி தி. லூர்தகவி

நடனம் திருமதி ச. ஜெயராம்

சித்திரம் திரு. நா.ஜெகதீஸ்வரன்
திருமதி ந.கிருஸ்ணபகவான்

மனைப்பொருளியல் திருமதி சௌ.குகனேசன்

<u>முதலாம் வருடம்</u>

ஆரம்பக்கல்வி A திரு. க. உதயகுமார்
செல்வி அ.காமல்மேரிறோச்

ஆரம்பக்கல்வி B திரு. ச. சசிகுமார்
செல்வி செ. வளர்மதி

ஆரம்பக்கல்வி: C திரு. நா. கமலேஸ்வரன்
திருமதி சு. சாந்தகுமார்

சங்கீதம் திரு. யோ. சுதர்சனன்
செல்வி ப. அன்பழகி

நடனம் திருமதி சு. நிரஞ்சன்

சித்திரம் திரு. ப. பிரதீபன்
செல்வி ப. கௌசல்யா

மனைப்பொருளியல்: செல்வி ம.சகாயமரியரதிநேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய மாணவர் மன்ற அறிக்கை

ஆசிரிய மாணவ மன்றமானது கலாசாலைப் பண்பாட்டு விழுமியங்களை மதிக்கத்தக்கவாறு நேரிய பாதையில் வழிநடாத்துவதற்கும், ஆசிரிய மாணவர்களின் வசதி வாய்ப்புக்களைமேம்படுத்தவும் அவர்களின் இன்ப துன்பத்தில் பங்கெடுப் பதிலும் உறுதுணை புரிகிறது. கலாசாலையில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகள், விழாக்களுக்கும் தேவையான முழு ஒத்துழைப்பையும் தக்க நேரத்தில் வெகு சிறப்பாக வழங்கி வருகின்றது.

இம்மன்றமானது நடப்பு வருடத்தில் சிரேஷ்ட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவு உபசாரவிழா, புதிய ஆசிரிய மாணவர்களுக்கான வரவேற்பு விழா உலக ஆசிரிய தின விழா , பாராட்டு விழாக்கள் என்பவற்றைச் சிறப்பாக நடத்தியது. அனைத்து மாணவர்களின் ஒத்துழைப்புடன் எமது மன்றமானது ஒரு ஒலிபெருக்கித் தொகுதியினைக் கலாசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அத்துடன் ஆசிரிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் நாடகப்பட்டறை,வானிலைப் பாசறை, கவிதைப் பட்டறை, தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு, உளவளக் கருத்தரங்கு போன்ற நிகழ்ச்சிகளையும் ஒழுங்குபடுத்தி நடத்தியது. அத்துடன் ஏனைய மன்றங்களினால் நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டி, கண்காட்சி, வாணி விழா. ஒளி விழா நிகழ்ச்சிகள் சிறப்பாகவும், விமரிசையாகவும் நடைபெறுவதற்கு பக்கத்துணை வழங்கி கலா சாலைக்குப் பெருமை சேர்த்துள்ளது.

அத்துடன் ஆசிரிய மாணவர்களின் நன்மை தீமைகளில் பங்குகொண்டதுடன் அவர்களை ஆற்றுப்படுத்தியும் அவர்களின் குறைநிறைகளை இனம்கண்டு அவற்றுக்குரிய ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் வழங்கி அர்ப்பணிப்புடன் செய லாற்றி வருகிறது.

திறமையும், அநுபவமும் மிக்க அதிபர், பிரதி அதிபர் விரிவுரையாளர்களின் நெறிப்படுத்தலில் சிறப்பாக இயங்கிவரும் மாணவர் மன்றம் கலாசாலையின் உயர்வுக்கு உறுதுணை புரிய என்றும் தயாராக உள்ளது.

நன்றி.

**தலைவர்**
*மாணவர் மன்றம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமா மன்றம் ஆண்டறிக்கை ~ 2003 ~2004

| | |
|---|---|
| பெருங்காப்பாளர்: | திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர்) |
| காப்பாளர்: | செல்வி ப. நாகரத்தினம் (விரிவுரையாளர்) |
| தலைவர்: | திரு. சி. சிவசத்தியமோகன் |
| செயலாளர்: | திருமதி கி. கந்தகுமார் |
| பொருளாளர்: | செல்வி இ. புஸ்பலதா |

கலாசாலையில் ஆன்மீகச் செயற்பாடுகளை முன்னின்று வளர்த்தெடுப்பதில் இந்துமாமன்றம் பெரும் பணியாற்றி வருகின்றது. கலாசாலையில் உள்ள சகல கற்கை நெறிகளிலும் உள்ள இந்து சமய ஆசிரிய மாணவர்கள் எமது மன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். வெள்ளிக் கிழமைகளிலும் சமய குரவர் குருபூசைத் தினங்களிலும் யோக மண்டபத்தில் சிறப்புப் பூசைகளும் நற்சிந்தனை வழங்கலும் இடம்பெற்று வருகின்றது.

சென்ற வருட ஆனித் திங்கள் 18ம் நாள் (03.07.2003) திருவாசக முற்றோதல் நிகழ்வும், மறுநாள் மணிவாசகர் விழாவும் இனிதே இடம்பெற யாழ் - பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவன் திரு. ச. சண்முகபாலனின் சிறப்புச் சொற்பொழிவும், கலாசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம் பெற்றது. ஆடித் திங்கள் 20ம் நாள் (05.08.2003) சுந்தரமூர்த்திநாயனார் குருபூசையை முன்னிட்டு யாழ் - பல்கலைக்கழக இந்து நாகரிக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அ. வேதநாதன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மன்றத்தின் சார்பில் ஆசிரிய மாணவர்கள் கீரிமலை, நகுலேஸ்வரம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம் ,மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயம், ஆகிய புனித ஸ்தலங்களுக்குச் சென்று கூட்டுப்பிரார்த்தனை செய்து இறைவனைத் தரிசித்து வழிபட்டமையையிட்டு உள நிறைவடைகின்றோம். அத்துடன் நவராத்திரி விழாவும் வருடா வருடம் எமது கலாசாலையில் நடைபெற்று வருகின்றது. புரட்டாதித் திங்கள் 16ம் நாள் (03.10.2003) நவராத்திரி விழாவில் யாழ்/ இந்துக் கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் சிவத்திரு. க. சிவராமலிங்கம் அவர்களால் ஆன் மீகச் சொற்பொழிவும், ஆசிரிய மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். விஜயதசமி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வித்தியாரம்ப நிகழ்வும் சிறப்பாக இடம்பெற்றது. தென்கிழக்காசிய பிரம்ம குமாரிகள் சமாஜத்தில் இருந்து வருகை தந்த ராஜஜோகினி " மீரா" அவர்கள் ஆன்மீகக் கருத்துக்களை வழங்கியதுடன் ஆசீர்வாதமும் அளித்தமை குறிப்பிடத்தக்கது. என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதவாறு இம்முறை சிவராத்திரி நிகழ்வு சிறப்பாகக் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாகும்.

மேலும் பங்குனித்திங்கள் 19.03.2004ல் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் "சுவாமி ஆத்மானந்தா" அவர்களின் வழிகாட்டலில் பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் " சுவாமி சித்சொரூபானந்தா" அவர்களின் தலைமையில் தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையாரின் திருவுருவச்சிலை பவனிவந்தபோது இன்முகத்துடன் சிறப்பாக வரவேற்றதுடன் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளின் ஆன்மீகச் சொற்பொழிவும் இடம் பெற்றது. அத்துடன் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்த மகளிர் அமைப்பு எழுத்தாளர் திருமதி மஞ்சுளா - ரமேஷ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும், கலாசாலை விரிவுரையாளர் "சங்கீத பூஷணம்" திரு. செ. குமாரசாமி அவர்களின் இன்னிசை நிகழ்வும் கலாசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது. மேலும் இருபாலைக் கற்பகப்பிள்ளையார் கோயிலின் வருடாந்த மகோற்சவத்தின் மூன்றாம் நாள் உற்சவத்தை எமது கலாசாலை நடாத்தி வருகின்றது என்பது , இவ்வாண்டு ஆனித்திங்கள் 9ம் நாள் (23.06.2004) மணிவாசகர் குருபூசையைச் சிறப்பாக நடாத்துவதற்கு இறையருள் கூடியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமயத் தொண்டுகள், பூசை வழிபாடுகள், கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபடுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வழிநடாத்திக் கொண்டிருக்கும் இந்துமா மன்றத்தின் காப்பாளர் செல்வி ப. நாகரத்தினம் அம்மா அவர்களுக்கும், மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விழாவினைக் கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கி தோளோடு தோள் நின்று உழைக்கும் பெருங்காப்பாளர் அதிபர் திரு.ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஐயா அவர்களுக்கும், தேவையான வேளைகளில் எமக்குப் பக்கபலமாக நின்று ஆலோசனைகள் வழங்கி நெறிப்படுத்தும் விரிவுரையாளர்களுக்கும், பலவழிகளிலும் உதவி செய்யும் கல்வி சாரா ஊழியர்களுக்கும், ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் மன்றத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் இந்து மாமன்றத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

சுபம்.

**மன்றச் செயலாளர்**
**திருமதி கி. கந்தகுமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ மாணவர் மன்றம் - 2003

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திரு. A. அந்தோனிப்பிள்ளை (விரிவுரையாளர்)<br>திரு. V. கருணலிங்கம் (விரிவுரையாளர்) |
| ஆன்மீகக் குரு | : | அருட்திரு J.J. மௌலிஸ் அடிகளார்<br>(மறைக்கவி இயக்குநர் யாழ். மாவட்டம்) |
| தலைவர் | : | திரு. A. மங்களதாஸ் |
| செயலாளர் | : | செல்வி T. லூர்தகவி |
| பொருளாளர் | : | திரு. P..இரட்ணராஜ் |

காய்க்காத அத்திமரத்தினை எருவும் நீருமிட்டுக் கனிதரும் மரமாய் மாற்றுவதாகிய மாண்புமிகு பணி ஆசிரியர் பணி. கனி பெறும்வரை காத்திருக்கும் கருணை சேர் இறைவனின் பணியில் அணிவகுக்கிறது. கலாசாலைக் கிறிஸ்தவ மன்றம் அதன் வளர்ச்சிப் படிகள் பலவுள.

தொடர் உருவாக்கமாக 2003 இல் ஆலயத்திருத்த வேலைகள், மின்னிணைப்பு, பீட அலங்காரப் பொருள் சேகரித்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டன. இயக்குநர் அவர்களின் வேண்டுகோளுக்கமைய யாழ். மறை மாவட்ட மறைக்கல்விப் பரீட்சை விடைத்தாள் தொகுதி ஒன்று எமது மன்ற உறுப்பினர்களால் மதிப்பீடு செய்து கொடுக்கப்பட்டது. வாரத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் வழிபாடும், மாதத்தின் முதல் வெள்ளிதோறும், திருப்பலிகளும் இடம்பெற்று வருகிறது.

மன்ற நிகழ்வுகளில் மகுடமாய் அமையும் கிறிஸ்து பிறப்பு விழா 20.11.2003 இல் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக மாகாணத்தலைவர், O.M.I அருட்திரு A. ஜீவேந்திராபோல் அடிகளார் அவர்களும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் பங்குத் தந்தை அருட்திரு. A. செலஸ்ரின் மஸ்கறிஞ்ஞ (O.M.I) அடிகளாரும் கலந்து பெருமை சேர்த்தனர். ரதிலக்ஷ்மி மண்டபத்தில் திருப்பலியுடன் ஆரம்பித்த இந் நிகழ்வில் நடனம், "**இருள் விலகியது**" நாடகம், "**கன்னி பெற்ற கடவுள்**" **நாட்டுக்கூத்து**" என்பன சிறப்பம்சமாய் அமைந்தன. அதிபர் அவர்களாலும், உபஅதிபராலும் மிகச் சிறந்த ஒளிவிழா எனப் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இன்னும் யாழ்ப்பாணத்தின் முக்கிய தேவாலயங்களைத் தரிசிக்கும் தலயாத்திரை செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எமது மன்றம் வளம்பெற எமக்குஆன்மீகப் பலமூட்டிவரும் அருட்தந்தை J.J. மௌலிஸ் அடிகளாரின் பணி அளவிடற்கரியது. இன்றும் எமது செயலுக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் நல்கி வழிநடத்தும் பெருங்காப்பாளர், காப்பாளர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இறை ஆசீரும் வேண்டி நிற்கின்றோம். நற்கனி கொடுக்கும் நற்சமூகத்தை உருவாக்க நல்லாசான்களைத் தோற்றுவிக்கும் பணியில் விண்ணோக்கி வளர்க கிறிஸ்தவ மன்றம்.

நன்றி

மன்றச் செயலாளர்

செல்வி தி. லூர்தகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலாளர் மன்றம்

| | |
|---|---|
| **காப்பாளர்:** | திரு. வே. கா. கணபதிப்பிள்ளை |
| **உபகாப்பாளர்:** | திருமதி அன்பரசி கருணாகரன் |
| **மெய்வல்லுநர் குழுத் தலைவர்கள்:** | திரு. ம.கிளென் |
| | செல்வி பா. வித்யா |
| **விளையாட்டுக்குழு இணைச் செயலாளர்கள்:** | திரு. லோ. ஸ்ரனிஸ்லாஸ் |
| | செல்வி சூ. கெலன் இராஜேஸ்வரி |
| **பொருளாளர்:** | திரு. வ. நிகேதன் |

ஆரோக்கியமான உடலினுள்ளேயே உன்னதமான உள்ளம் இருக்கும் என்பதற்கிணங்க மானிட வாழ்க்கைப் படிநிலையில் உடற்கல்விச் செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த வகையில் சகல ஆசிரிய மாணவர்களதும் உடற்தகைமையைப் பேணும் வகையில் எமது மன்றமானது 2003/2004 ஆம் ஆண்டுகளில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

தினமும் அனைத்து ஆசிரிய மாணவர்களுக்கும் மாலை வேளைப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. இப்பயிற்சிகளின் போது ஒவ்வொரு செயற்பாடுகளையும் எமது காப்பாளரும், உபகாப்பாளரும் மிகச் சிறப்பாக நெறிப்படுத்தி ஆளுமை மிக்கவர்களாக எம்மை வளப்படுத்தி வருகிறார்கள்.

ஆரம்பத்தில் புகுமுக மாணவர்களுக்கான தடகள நிகழ்வுகளின் திறனாய்வுப் போட்டிகள் சகல முதலாம் வருட ஆசிரிய மாணவர்களும் பங்கேற்கும் வகையில் நடைபெற்றது. பின்னர் 19.09.2003 இல் அனைத்து ஆசிரிய மாணவர்களும் பங்கேற்கும் வகையில் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான தடகள நிகழ்வுகளின் திறனாய்வுப் போட்டியும் மிகவும் சிறந்த முறையில் நடைபெற்றது.

கலாசாலை மட்டத்தில் ஆசிரிய மாணவர்கள் அனைவரும் பங்குபற்றக் கூடிய வகையில் இல்லங்களுக்கு இடையேயும் நெறிகளுக்கு இடையேயும் கரப்பந்து, உதைபந்து, வலைப்பந்து, எறிபந்து, கிரிக்கெட் ஆகிய போட்டிகள் நடைபெற்று ஒவ்வொரு விளையாட்டிலும் சிறந்த ஐந்து வீரர்களும், வீராங்கனைகளும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாண்டுக்கான வீதி ஓட்டப் போட்டி 26.03.2004 இல் வெகு ஆரவாரத்துடன் நடைபெற்றது 15Km தூரம் கொண்ட இவ் வீதி ஓட்டப்போட்டியில் சகல வீரர்களும், வீராங்கனைகளும் ஆர்வத்துடன் பங்குபற்றி தமது உடற்தகைமையைச் சிறப்பாக வெளிப்படுத்தினார்கள் அத்துடன் எமது கலாசாலையின் உடற்பயிற்சிக் குழுவில் சுமார் 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய மாணவர்கள் இணைந்து சிறப்பானதொரு உடற்பயிற்சிக் கண்காட்சியை தமிழ்த் தேசிய விளையாட்டு விழாவின் போது காண்பித்துப் பலராலும் பாராட்டப்பட்டது எமக்குப் பெருமையளிக்கிறது.

உள்ளக விளையாட்டுப் போட்டிகளான பூப்பந்து, செஸ், கரம், டாம் ஆகிய போட்டிகள் ஆசிரிய மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்டதுடன். ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறாக எமது உடலாளர் மன்றம் சிறப்பாகச் செயற்படுவதற்கு எமது காப்பாளரும், உபகாப்பாளரும் தமது அரும்பணியை அயராது வழங்கி எமக்கு வழிகாட்டி வளப்படுத்துகின்றனர். இவர்களுடன் எல்லா விதமான செயற்பாடுகளிலும் எமக்கு ஒத்துழைத்து வழிகாட்டிய அதிபர், பிரதி அதிபர், விரிவுரையாளர்களுக்கும், ஆசிரிய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**லோ. ஸ்ரனிஸ்லாஸ்**
செயலாளர்

கருத்தூற்று மலையூற்றாய்ப் பெருக் கெடுக்க வேண்டும்
கண்டதைமேற் கொண்டெழுதிக் கட்டுரையாக் குங்கால்
தெருத்தூற்றும்; ஊர்தூற்றும்; தம்முள்ளமே தம் மேற்
சிரிப்பள்ளித் தூற்றும் ! நலம் செந்தமிழ்க்கும் என்னாம்?
தரத்தம்மால் முடிந்த மட்டும் தர வேண்டும்; பின்னால்
சரசரெனக் கருத்தூறும் மனப் பழக்கத்தாலே!
இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை
ஏற்படுத்தல், பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்

– பாரதிதாசன் –

2708(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கலை மன்றம் ~ 2003

| | | |
|---|---|---|
| **காப்பாளர்கள்** | : | திரு. செ. குமாரசாமி (விரிவுரையாளர்) |
| | | திரு. வ. கருணலிங்கம் (விரிவுரையாளர்) |
| | | திருமதி. சாந்தினி சிவநேசன் (விரிவுரையாளர்) |
| **தலைவர்** | : | திரு. ந. நாகராஜன் |
| **செயலாளர்** | : | செல்வி க. பிறேம்னி |
| பொருளாளர் | : | திரு. உ. பாரதி |

மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்தவையே நுண்கலைகளாகும். இக்கலை களை வளர்க்கும் வகையில் எமது கலாசாலையில் நுண்கலை மன்றம் செயற்பட்டு வருகிறது. இம்மன்ற செயற்பாடுகள் மூலம் எமது பண்பாட்டு விழுமியங்கள் பேணப்படுவதுடன் பயிற்சியில் ஈடுபடும் ஆசிரிய மாணவர்களின் உடல், உள ஆற்றல் விருத்தியாக்கப்படுகிறது என்றால் அது மிகையாகாது.

எம் கலாசாலையில் இடம்பெறும் மேடை அலங்காரம் உட்பட கலை நிகழ்வுகள் யாவற்றுக்கும் எமது மன்றமும் பக்க துணையாக செயற்பட்டு வருகிறது. கலாசாலையில் இடம்பெறும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் எம்மன்றம் ஆற்றும் பணி அளப்பரியதாகும். அத்துடன் நம்நாட்டு கலைஞர்களின் சேவையைப் பாராட்டுவதும், அவர் தம் புகழ் பாடுதலும் எம்மன்றத்தால் நடாத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி தீவகக் கல்வி வலயத்தினாலும், சமூக சேவை நிறுவனங்களாலும் நடாத்தப்படும் போட்டிகளுக்கு நடுவர்களாகப் பணி புரிந்து சேவையாற்றியதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

எம்மை விட்டுப்பிரிந்த பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் நினைவாக எம்கலாசாலை யிலுள்ள பிரதான மண்டபத்துக்கு அவர்தம் நாமத்தைச் சூட்டுவதற்காக கராத்தே கண்காட்சியினை நடாத்தி நிதி சேகரித்தமை இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

எம்மன்றம் நேரடியான செயற்பாட்டினை விட இணைச்செயற்பாடுகளிலே அதிகளவு பங்களிப்பினை ஆற்றி வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இம்மன்றம் கலாசாலையில் செழித்தோங்கி வளர எம்மை வழிகாட்டி நிற்கும் மன்றக் காப்பாளர்களுக்கும், நுண்கலை விரிவுரையாளர்கட்கும், கலாசாலை முதல்வர், ஏனைய விரிவுரையாளப் பெருந்தகைகட்கும் எமது உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் எம்மன்றம் தனது செயற்பாட்டிலும், ஆக்கத்திலும், ஊக்கத்திலும் வளர்ச்சியடைய வேண்டுமென்று வாழ்த்துவோமாக.

**மன்றச் செயலாளர்**

**க. பிறேம்னி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி மன்ற அறிக்கை ~ 2003/2004

| | | |
|---|---|---|
| **இணைக்காப்பாளர்கள்:** | திருமதி கலா மகேந்திரன் | (விரிவுரையாளர்) |
| | செல்வி விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் | (விரிவுரையாளர்) |
| **தலைவர்:** | திரு. சி. மகேஸ்வரன் | |
| **செயலாளர்:** | திரு. க. விஜயகரன் | |
| **பொருளாளர்:** | செல்வி சி. சிவகௌரி | |

எம்மன்றம் காலம் தோறும் ஏற்படும் கல்விச் சீர்திருத்தங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் எதிர்கால இளம் சமூகத்தை உருவாக்கும் பலமான அத்திவாரமாக விளங்கு கின்றது. ஆரம்பக்கல்வியை வழங்கும் முதுகெலும்புகளான ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை வேகமும், விவேகமும் கொண்டவர்களாக மாற்றும் வகையில் செயற்பட்டு வருகின்றதுது. முத்தமிழை வளர்க்கும் நோக்கில், இயல், இசை, நாடகம் இணைந்த போட்டிகளை நிகழ்த்தியும், காலாண்டு சஞ்சிகையினை வெளியிட்டும் ஆக்கத்திறனை வளர்ப்பதில் முன்னின்று உழைத்து வருகின்றது.

2004.02.28 அன்று ஆசிரிய மாணவர்களது கலையார்வத்தை மெருகூட்டும் வகையில் கலைத்திறன் விழாவினை நிகழ்த்தி முதன்மை இடம் பெற்ற நிகழ்வுகளை அரங்கேற்றி ,பலரது பாராட்டினையும் பெற்றுக்கொண்டது. ஆசிரிய மாணவர்களிடத்தே மறைந்து கிடந்த ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்கு களமாக அமைந்தது ஆரம்பகல்விமன்றம் என்றால் மிகையாகாது.

காண்போரைக் கவரும் வகையில் கண்காட்சியினை நடாத்தி கற்போனை மறைமுகமாக கற்கத்தூண்டுவதுடன், முதன்மை இடம் பெற்றோருக்கு பாடரீதியாக பரிசில்களை வழங்கி செயல்முறைக்கல்விக்கு மதிப்பளித்து, அர்ப்பணிப்பும், ஆளுமையும், ஆற்றலும் கொண்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் சமூகத்தை உருவாக்கும் விதத்தில் எம்மன் றம், செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. இவை யாவும் மன்றத்தின் ஆரம்ப அத்தியாயமே. முடிவல்ல தொடரும்.

மன்றச் செயற்பாடுகள் சுடர்விட்டுப் பிரகாசிக்க அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் இணைக்காப்பாளர்கள் வேண்டிய போதெல்லாம் ஆலோசனைகளை வழங்கும் அதிபர், உபஅதிபர், எம்மை ஊக்குவிக்கும் விரிவுரையாளர்கள், சகஆசிரிய மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**எண்ணும் எழுத்தும் உணர்ந்திடுவோம் - உள்ளத்**
**தேவையை அறிந்து பூர்த்தி செய்வோம். - அவன்**
**ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி - நல்ல**
**சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.**

*க. விஜயகரன்*
*மன்றச் செயலாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைமாட்சி மன்றம்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | திருமதி சறோஜினி பேரானந்தன் (விரிவுரையாள்) |
| தலைவர் | : | திருமதி கௌசல்யா விமலதாசன் |
| செயலாளர் | : | செல்வி யோசவ் மரியஅசம்ரா |
| பொருளாளர் | : | செல்வி மடுத்தீன் சகாய மரியரதிநேசம் |

" மங்கலம் என்பன மனைமாட்சி..................."

வாழ்க்கை மங்களகரமாக அமைவதற்கு மனை சிறப்பாக இருக்க வேண்டும். அந்த வகையில் எங்கள் மனைமாட்சி மன்றமானது பலவிதமான சிறப்பம்சங்களையும், புதிய நாட்டத்திற்கு ஏற்ப புதிய செயற்றிறன்களையும், ஆக்கத்திறன்களையும் உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது. இதற்கமைவாக எமது மன்றத்தினால் மேலைத்தேய , கீழைத்தேய உணவு முறைகள் பற்றியும் , பரிமாறும் நுட்ப முறைகள் பற்றியும் ஆசிரிய மாணவருக்கு விளக்கம் கொடுக்கப்பட்டது. அத்துடன் கிறிஸ்ரல் அலங்காரம், மரக்கறி அலங்காரம், வர்ண அலங்காரம் ,சிகை அலங்காரமும் முக ஒப்பனையும், தையல் வேலை, விருந்துபசாரம், கண்காட்சி,கேக் அலங்காரமுறை, கல்விசார் சுற்றுலா, விஞ்ஞான ரீதியான, பரிசோதனைகள், முதலுதவிப் பயிற்சிகள் போன்ற பலவித செயற்பாடுகளை எமது மன்றம் கலாசாலை மூலமாக ஆசிரிய மாணவருக்குத் தந்துதவியது.

இதற்கு உறுதுணையாக ஆக்கமும், ஊக்கமும் தந்து நல்ல உதவியாக , வழிகாட்டியாக, இருக்கும் காப்பாளர், அதிபர், விரிவுரையாளர், எம் சகோதர ஆசிரிய மாணவர்கள் அனைவருக்கும் எம்மன்றம் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றது.

யோ. மரியஅசம்ரா

செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் மன்ற ஆண்டறிக்கை - 2003

| | | |
|---|---|---|
| மன்றக் காப்பாளர் | : | திருமதி ப. இரத்தினவேல் (விரிவுரையாளர்) |
| தலைவர் | : | திரு. கா. உதயகுமார் |
| செயலாளர் | : | செல்வி தி. லூர்தகவி |
| பொருளாளர் | : | திரு. கு. செல்வகுமார் |
| உபதலைவர் | : | திரு. ம. பிரபாகரன் |
| உபசெயலாளர் | : | திரு. யோ. சுதர்சனன் |

முத்தமிழ்ப் பயிர் வளர வித்திடும் மன்றமே முத்தமிழ் மன்றமாகும். தமிழ்த்திறன் போட்டிகள் பலவற்றை நடத்துவதும் கலாசாலையின் தலைசிறந்த விழாவான முத்தமிழ் விழாவினை ஒழுங்கமைப்பதும் இம் மன்றத்தின் முக்கிய செயற்பாடுகளாகும். இந்த வகையில் ஆசிரிய மாணவர்களின் அறிவாற்றல் விருத்திக்கு முத்தமிழ் மன்றம் களம் அமைத்து உதவுகிறது என்றால் அது மிகையாகாது.

முத்தமிழ் விழாவினை முன்னிட்டு இயல், இசை, நாடகம் ஓவியம் மற்றும் ஆக்கத்திறன் சார்ந்த இருபத்தாறு (26) போட்டிகள் மன்றத்தால் நடத்தப்பட்டன. இவற்றில் பங்குபற்றியோரில் பரிசுக்குரியோரைத் தேர்ந்தெடுத்து பரிசில்கள் வழங்குவதுடன், சிறந்த ஆக்கங்களைக் கலைமலரில் இடம்பெறச் செய்தும் வருகின்றோம். முத்தமிழ் விழா இரு தினங்கள் சிறப்பான விழாவாகக் கொண்டாடப் படவுள்ளது. இதில் முதல் நாள் நாடக விழாவாகவும், மறுநாள் கலை விழாவாகவும் நிகழ்த்தத் தீர்மானித்துள்ளோம்.

போட்டிகளின்போது எமது மாணவரைச் சமன் செய்து சீர் தூக்கப் பல்வேறு துறைசார்ந்த நடுவர்களும் எமக்கு உதவி புரிந்தனர். பரிசிற்குரியவர்களைத் தெரிந்தெடுப்பதில் எமக்கு உதவி நல்கிய விரிவுரையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது மன்றச் செயற்பாடுகள் சிறப்புற அமைவதற்கு எமக்கு வழிகாட்டிய எமது மன்றக் காப்பாளர் திருமதி ப. இரத்தினவேல் அம்மா அவர்களுக்கும் , சகல வழிகளிலும் எமக்கு ஒத்துழைப்பு நல்கிய அதிபர் அவர்களுக்கும் , அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் எமது மன்றத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தமிழ் தழைக்க உழைக்கின்ற முத்தமிழ் மன்றம் செழிக்க இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

நன்றி

மன்றச் செயலாளர்

செல்வி தி. லூர்தகவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை முத்தமிழ்விழா
# போட்டிகள் ~2003

**பேச்சு**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | செல்வி ச. தங்கேஸ்வரி | ராதா |
| 2ம் | இடம் | - | திரு. க. தயாபரன் | ராதா |
| 3ம் | இடம் | - | திரு. நா. ஜெகதீஸ்வரன் | அருணா |

**கட்டுரை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | செல்வி ஐ. துஸ்யலாதேவி | சுவர்ணா |
| 2ம் | இடம் | - | செல்வி ச. சாந்தாதேவி | சுவர்ணா |
| 3ம் | இடம் | - | திரு. நா. ராஜன் | சுவர்ணா |

**மரபுக்கவிதை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திருமதி ஜெ. விஜயகுமார் | ராதா |
| 2ம் | இடம் | - | செல்வி தி. மங்கேஸ்வரி | சுவர்ணா |
| 3ம் | இடம் | - | திரு. சி. சிங்கராஜா | சுவர்ணா |

**புதுக்கவிதை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திரு நா. கமலேஸ்வரன் | சுவர்ணா |
| 2ம் | இடம் | - | திரு. தி.பாலேந்திரன் | அருணா |
| 3ம் | இடம் | - | செல்வி சி. மதிவதனி | காவேரி |

**சிறுகதை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திரு. யோ. சிவகுமார் | காவேரி |
| 2ம் | இடம் | - | திருமதி செ. சந்திரகலா | காவேரி |
| 3ம் | இடம் | - | திரு. மு. சிவலோகசுந்தரம் | சுவர்ணா |

**நாடகப் பிரதியாக்கம் :**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | செல்வி க. பிறேம்னி | சுவர்ணா |
| 2ம் | இடம் | - | திரு.மு. சிவலோகசுந்தரம் | சுவர்ணா |
| 3ம் | இடம் | - | திரு. ச. சசிகுமார் | ராதா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனி நடிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் - | செல்வி.வ.விஜயஸ்ரீ | சுவர்ணா |
| 2ம் | இடம் - | செல்வி.யோ.யோகானந்தி | அருணா |
| 3ம் | இடம் - | திரு.தே.நிகேதரன் | ராதா |

**கதை கூறல் : பிரிவு - 1**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் - | திருமதி.வ.விஜயஸ்ரீ | சுவர்ணா |
| 2ம் | இடம் - | செல்வி.சி.சிவகௌரி | சுவர்ணா |
| 3ம் | இடம் - | திருமதி.ல.ஞானேஸ்வரன் | அருணா |

**கதை கூறல் : பிரிவு - 2**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் - | திருமதி.பா.விக்னேஸ்வரன் | காவேரி |
| 2ம் | இடம் - | திருமதி.கி.கந்தகுமார் | சுவர்ணா |
| 3ம் | இடம் - | திரு.அ.மங்களதாஸ் | சுவர்ணா |

**கதை கூறல் : பிரிவு - 3**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் - | திரு.க.தயாபரன் | ராதா |
| 2ம் | இடம் - | திருமதி.ப.மேரிறொக்சி | ராதா |

**இசையும் அசைவும் : பிரிவு - 1**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் - | செல்வி.சி.சிவகௌரி | சுவர்ணா |
| 2ம் | இடம் - | திருமதி.ம.மேரிஅஜந்தா | சுவர்ணா |
| 3ம் | இடம் - | திருமதி.பு. சிவகுமாரன் | |

**இசையும் அசைவும் : பிரிவு -2**

| | | | |
|---|---|---|---|
| 1ம் | இடம் - | திருமதி.கி.கந்தகுமார் | சுவர்ணா |
| 2ம் | இடம் - | செல்வி.வ. விஜயஸ்ரீ | சுவர்ணா |
| 3ம் | இடம் - | திருமதி..வி.ஜெயசீலன் | ராதா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இசையும் அசைவும் பிரிவு : 3**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திரு. சி. சிவசக்தியமோகன் | சுவர்ணா |
| 2ம் | இடம் | - | செல்வி யோ. யோகானந்தி | அருணா |
| 3ம் | இடம் | - | திருமதி சு. நிரஞ்சன் | அருணா |

**கர்நாடக இசை**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திரு. சி.சிவசத்தியமோகன் | சுவர்ணா |
| 2ம் | இடம் | - | செல்வி. க. பிறேம்னி | சுவர்ணா |
| 3ம் | இடம் | - | செல்வி தி. கோமளா | சுவர்ணா |

**மெல்லிசை ஆக்கம்பிரிவு -1**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திரு. சி. சிவசத்தியமோகன் | சுவர்ணா |
| 2ம் | இடம் | - | செல்வி. யோ. யோகானந்தி | அருணா |
| 3ம் | இடம் | - | செல்வி க. பிறேம்னி | சுவர்ணா |

**மெல்லிசை - ( கவிஞர்பாடல்) பிரிவு - 2**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ம் | இடம் | - | திரு. யோ. சுதர்சனன் | அருணா |
